Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 40 ரூபா • தீபம் 151 • 05.08.2018

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா

தொடர்புகளுக்கு
0768255563, 0214927561

தீபம் எப்பொழும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்

## மோடியின் உத்தியை கையிலெடுத்த டக்ளஸ்



### வடக்கிற்கு புதிய அபிவிருத்தி செயலணி?

### கைகொடுக்குமா ரெலோவின் உத்திகள்?

### விவசாயிகளிற்கு ஸ்பெஷல் பக்கம்!

## பற்றியெரிந்தது பிரபாகரனின் வாகனம்!

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் குடும்பத்துடன் சுவைத்து மகிழ்ந்திட

YARL AHI Ice Cream

யாழ் அகி ஐஸ்கிறீம்

ஒருமுறை விஜயம் செய்து
சுவைத்துப் பாருங்கள்


இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P 021 7917585 / 077 0232328


திருமணநாள் மற்றும் பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய
விழாக்களுக்கும் வாகன வசதியுடன் வழங்கப்படும்.

குறிப்பு : மேலதிக விபரங்களை அறிந்திட
www.yarl ahi icecream.comஐ பார்வையிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடன்

கருடர் வந்ததும் வராததுமாக, 'இனி தீபத்தில் இந்த பக்கத்தை நான் தொடர்வது பற்றி பரிசீலிக்கும் நிலைக்கு வந்திருக்கிறேன்' என குண்டைப் போட்டுவிட்டு, சாவகாசமாக காலாட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

'ஏன் என்னாச்சு...என்ன பிரச்சனை?' என பதறினோம்.

'இப்பொழுது எனக்கு குடிக்க தண்ணீர் தாருங்கள்' என்றார்.

'தாகமென்றால் ஆரம்பத்திலேயே சொல்வதுதானே... தண்ணீரென எடுக்கும். முறைப்படியான 'சிஸ்டம்' அங்கு கிடையாது. அதனால்தான் கூட்டமைப்பை பதிவுசெய்ய வேண்டுமென்ற குரல்கள் எழுந்தபடியிருக்கின்றன.

தேசியப்பட்டியல், வேட்பாளர் தெரிவு, முக்கிய தீர்மானங்கள் எல்லாவற்றிலும் தமிழரசுக்கட்சி தலைமை தனித்தே முடிவெடுத்தது. பங்காளிக்கட்சிகள் இதனால் நிறைய அதிருப்தியில் இருந்தார்கள்.

இந்த சமயத்தில்தான் கடந்த உள்ளூராட்சிசபை தேர்தலில் ரெலோவின் 'இந்தாபிடி வெளியேறுகிறேன்' நடவடிக்கை நடந்தது. ரெலோ அப்படி தேசியப்பட்டியல் நியமனத்தில் ஒன்றை தமக்கு தராவிட்டால் ரெலோ வேறுவிதமான முடிவுகளை எடுக்க வேண்டி வருமென்ற எச்சரிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அதற்காக ரெலோ இன்னொரு நகர்வையும் தொடங்கியுள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் உள்ளிட்ட முன்னாள் ஆயுத இயக்கங்களை ஒன்றிணைக்கும் முயற்சியொன்றையும் ஆரம்பித்துள்ளது.இதன் பின்னணியில் ரெலோதான் உள்ளது. ரெலோவிற்கு நெருக்கமான சிலர் இந்த முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர். ஆனால், சிவில் சமூகமே சந்திப்பை ஏற்பாடு செய்வதாக மாற்றங்கள் பற்றியோ புளொட்டுடன் பேசவில்லை. தனது தேவைக்கு தம்மை பாவிக்க முயல்கிறார்கள், உள்ளூராட்சி தேர்தல் சமயத்திலும் இப்படித்தான் நடந்ததென புளொட் முக்கியஸ்தர்கள் கூறுகிறார்கள். இப்போதைய நிலைமையில், இயக்கங்களை ஒன்றிணைக்கும் ரெலோவின் முயற்சி வெற்றியளிக்குமென சொல்ல முடியவில்லை. முக்கியமாக அதை தமிழரசுக் கட்சிக்கு அழுத்தம்கொடுக்கும்நகர்வாக செய்தால், அது வெற்றியளிக்காது'

'கூட்டமைப்பிற்குள் வேறு கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் நடப்பதாகசொன்னீர்கள். அதைப்பற்றி

# மோடியின் உத்தியை கையிலெடுத்த டக்ளஸ்... சம்பந்தரின் சாணக்கிய பதில்... வியாளேந்திரனுக்கு போட்ட கொக்கி!

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியை உடனடியாக சேர்க்க வேண்டுமென ரெலோ பிரதிநிதிகள் வலியுறுத்த, சம்பந்தன் தனக்கேயுரிய பாணியில் ஒரு பதில் கொடுத்தார். 'அவர்களை வெளியில் போகும்படி நானோ, தமிழரசுக்கட்சியோ சொல்லவில்லையே. அவர்களாகத்தான் போனார்கள். அவர்கள் வரலாம்.



ஸ்ரோங் டீ யே தருகிறோம்' என கருடரை சமாளித்து, ஓர்டர் கொடுத்தோம். கருடரை ஓசியிலேயே வேலை வாங்குவதை சூசமாக புரியவைத்திருக்கிறார் என்பது புரிந்தது.

'இதுதான் ரெலோ உத்தி' என சிரித்தபடி சொன்னார்.

'ரெலோ உத்தியா? விளக்கமாக சொல்லுங்கள்'

'அண்மைக்கால அரசியலை கவனமாக பார்த்து வந்தால் இது தெரியும். கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தல் சமயத்தில், 'இந்தா கூட்டமைப்பை விட்டு வெளியேறி விட்டோம் என பாவ்லா காட்டிக் கொண்டிருந்தது ரெலோ. ஒரேநாளில் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைமையையும், புளொட் தலைமையையும் சந்தித்து பேசியது. கூட்டமைப்பு உடைகிறதென பத்திரிகைகளும் தலைப்பு செய்தி போட்டுக் கொண்டிருந்தன.

தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது தமிழரசுக்கட்சி பெரியண்ணன், மற்றைய கட்சிகள் எல்லாம் சின்னத் தம்பிக்கள் போன்ற அமைப்பாகத்தான் இருக்கிறது. முக்கிய முடிவுகளையெல்லாம் தமிழரசுக்கட்சிதான் செய்தபடியால்தான் அதிகமான ஆசனங்களை கேட்டுபெற்றது.

இப்பொழுதும் அதேவிதமான உத்தியை கையாள்கிறதோ என்றுதான் யோசிக்க தோன்றுகிறது'

'திருகோணமலையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனையும், தமிழரசுக்கட்சி தலைவர் மாவை சேனாதிராசாவையும் சந்தித்ததை சொல்கிறீரா?'

'ம்... கடந்த 28ம் திகதி திருகோணமலையில் இரா.சம்பந்தனின் வீட்டில் இந்த சந்திப்பு நடந்தது. பல விடயங்களை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக ரெலோ இதில் பேசியது. தமக்குரிய தேசியப்பட்டியல் நியமனத்தை பற்றியும், முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடர்பான நிலைப்பாட்டையும் வரும் 10ம் திகதிக்கு முன்னதாக வெளியிட்டு விட வேண்டும், இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகள் முழுமையடைய வேண்டும், தமிழ் தேசிய நிலைப்பாட்டிலுள்ள கட்சிகளை கூட்டமைப்பிற்குள் ஒன்றிணைக்க வேண்டும் என தமது நிலைப்பாட்டை அறிவித்துள்ளனர். காட்டப்படுகிறது. ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் கட்சி தலைவர்களுடன் பேசியுள்ளனர்.'

'எதற்காக இந்த சந்திப்பு?... புதிய அணியை உருவாக்கும் முயற்சியா?'

'அப்படியான தோற்றத்தை காண்பிக்கவே ரெலோ முயற்சிக்கிறது. தமிழரசுக்கட்சிக்கு ஒரு முனையில் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கும்போது, மறுமுனையில் மற்றைய இயக்கங்களுடன் பேச்சு நடந்தி, புதிய கூட்டணிக்கான தோற்றமொன்றை ஏற்படுத்தும் முயற்சியாகவும் இருக்கலாம்.

ரெலோவின் இந்த நகர்வை கூட்டமைப்பிற்குள் இருக்கும் இன்னொரு பங்காளியான புளொட் இரசிக்கவில்லையென தெரிகிறது. ரெலோ தன்னை 'கிங்மேக்கராக' காண்பித்து, தனக்கு தேவையானதை பெற்றுக் கொள்கிறது, தமிழரசுக்கட்சியிடம் டிமாண்ட் பண்ணுவதற்கு எங்களையும் பாவித்துக் கொள்கிறது என [illegible]க்கிறது. 28ம் திகதி [illegible] சந்திப்பது பற்றியோ, அல்லது கூட்டமைப்பிற்குள் செய்ய வேண்டுமென ரெலோ சொல்லும் சொல்லுங்கள்?'

'ரெலோதான் அந்த நகர்வையும் செய்கிறது. ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகளை ஒன்றிணைக்க வேண்டுமென்றுதான் திருகோணமலை சந்திப்பில் ரெலோ வலியுறுத்தியது. ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியை உடனடியாக சேர்க்க வேண்டுமென ரெலோ பிரதிநிதிகள் வலியுறுத்த, சம்பந்தன் தனக்கேயுரிய பாணியில் ஒரு பதில் கொடுத்தார். 'அவர்களை வெளியில் போகும்படி நானோ, தமிழரசுக்கட்சியோ சொல்லவில்லையே. அவர்களாகத்தான் போனார்கள். அவர்கள் வரலாம். அதில் ஒரு பிரச்சனையும் இல்லை' என சொன்னார்.

ஆனால் இதில் உள்ள சிக்கல் ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்குத்தான். தமிழரசுக்கட்சியை விமர்சித்துவிட்டு, கூட்டமைப்பைவிட்டு வெளியில் சென்றார்கள். ஆனால் நினைத்ததைபோல எதுவும் அவர்களிற்கு அமையவில்லை. கூட்டணியும் அமையவில்லை. மக்களின் ஆதரவும் பெரிதாக கிடைக்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவில்லை. ஏற்கனவே இருந்த ஆதரவும் சரிந்துள்ளதாகத்தான் தெரிகிறது. வவுனியா நகரசபை பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கு கடந்தமுறை இருந்த ஆதரவு இம்முறை கிடைக்கவில்லை. தேர்தலிற்கு பின்னர் நகரசபையில் ஆட்சியை பிடிக்க சுதந்திரக்கட்சியுடன் கூட்டுசேர்ந்தது இன்னும் அதிருப்தியை அதிகரித்துள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எவ் உயிர்வாழ்வதென்றால் இரண்டு விசயம் நடக்க வேண்டும். ஒன்று விக்னேஸ்வரன் தலைமையில் ஒரு கூட்டணி அமைந்து, அதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இடம்பெற வேண்டும். அல்லது, கூட்டமைப்பிற்குள் மீண்டும் நுழைய வேண்டும். ஆனால், வீம்பாக வெளியேறிவிட்டு, வாலைச்சுருட்டிக் கொண்டு வருவதில் பிரச்சனையிருக்கும்.

தமிழர் சமூக ஜனநாய கட்சியையும் (ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி) கூட்டமைப்பிற்குள் இணைக்கும் முயற்சியிலும் ரெலோ ஈடுபட்டுள்ளது. வெலிக்கடை படுகொலை நிகழ்வின் 35வது நினைவுநாளை அண்மையில் ரெலோ நினைவுகூர்ந்தது. முன்னாள் வடக்கு கிழக்கு முதலமைச்சர் வரதராஜபெருமாள் நிகழ்வில் உரையாற்றினார். மெல்லமெல்ல கூட்டமைப்பிற்குள் உள்ளீர்க்கும் முயற்சிதான் இது'

'சரி... வடக்கில் வேறென்ன செய்திகள் வைத்திருக்கிறீர்கள்?'

'ஈ.பி.டி.பி முகாமிற்குள்ளிருந்து ஒரு செய்தி எடுத்திருக்கிறேன். வடமாகாணசபை தேர்தலிற்காக ஈ.பி.டி.பி முழு வீச்சில் தயாராகியுள்ளது. அமெரிக்க, இந்திய ஜனாதிபதி தேர்தல்கள் தொடக்கம், இலங்கை ஜனாதிபதி தேர்தல்கள் வரை அனைத்தையும் நுணுக்கமாக அவதானித்தோ என்னவோ, அதேபோன்ற உத்தியொன்றை கையிலெடுத்துள்ளார்கள்'

'அமெரிக்க, இந்திய பாணியா? புதிதாக இருக்கிறதே... சொல்லும்'

'மோடி, மைத்திரியின் வெற்றிகளில் சமூக ஊடகங்களின் பங்கும் முக்கியமானது. இந்த இடத்தில்தான் தமக்கு பலவீனமென்று நினைத்தோ என்னவோ, சமூக ஊடகங்களில் தனிப்படையே அமைத்துள்ளது ஈ.பி.டி.பி. ஒரு காலத்தில் பேஸ்புக்கில் எந்தப்பக்கம் திரும்பினாலும், கஜேந்திரகுமார் ஆதரவாளர்கள்தான் இருப்பார்கள். இப்பொழுது அது மாறி, ஈ.பி.டி.பி பிரச்சாரம்தான் நிறைந்துள்ளது.

அதேபோல, இன்னொரு நகர்வும் நடக்கிறது. கட்சிக்குள் இருக்கும் குழப்பங்களையும் சரி செய்து வருகிறார்கள். ஈ.பி.டி.பி முக்கியஸ்தர்கள் சந்திரகுமார், தவராசா ஆகியோர் அண்மையில் பிரிந்து சென்றனர்.



இதில் தவராசாவை திரும்பவும் கட்சிக்குள் கொண்டுவரும் முயற்சிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளன.

கனடாவில் வசிக்கும் கட்சி முக்கியஸ்தர் ஒருவர்தான் இரண்டு தரப்பிற்குமிடையில் தொடர்பாளராக இருந்தவர். இப்போது மட்டுமல்ல, முன்னரும் வேறு சிக்கல்களிற்கு இருவருக்குமிடையில் அவர் தொடர்பாளராக இருந்துள்ளார்.

ஈ.பி.டி.பியின் பாவனையில் இருந்த கொழும்பு வீடொன்றை விற்பனை செய்ய முயன்றபோது, அதில் தனக்கும் பங்கிருப்பதாக தவராசா கோரியிருந்தார். இதனால் இரண்டு தரப்பிற்குமிடையில் முரண்பாடு எழுந்தது. தவராசாவை கட்சி செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கியதற்கும் இதுதான் காரணமென அப்போது பேச்சுமிருந்தது. இந்த குழப்பத்தால் வீடும் விற்கப்படாமல் இருந்தது. பின்னர் கனடா புள்ளிதான் இரண்டு தரப்பிற்குமிடையில் சமரசத்தை ஏற்படுத்தி, வீடு விற்பனையாக வைத்தார். வீட்டு பிரச்சனையை சுமுகமாக்கிய அதே புள்ளிதான், அந்த பிரச்சனையால் ஏற்பட்ட பிளைவை சரிசெய்ய முயற்சிக்கிறார்.

கனடாவிலிருந்து வந்து இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தார். கட்சி தலைவரிடம் சொல்லிவிட்டுத்தான், தவராசாவுடன் பேச்சை ஆரம்பித்தார்.

சந்திரகுமார் பிரிந்து சென்று தனி அமைப்பை ஆரம்பித்தார். தவராசாவினால் அப்படி தனித்து நிற்க முடியவில்லை. திரும்பி வருவதுதான் அவருக்குமுள்ள ஒரே வழி. அதனால் சமரச முயற்சிகளில் சிக்கலிருக்கவில்லை. ஈ.பி.டி.பியுடன் மீண்டும் இணைய தவராசாவும், தவராசாவை மீண்டும் இணைக்க ஈ.பி.டி.பி தலைமையும் முழு மனதுடன் சம்மதித்துள்ளார்கள் என்றளவில் நிலைமையுள்ளது'

'ஓகோ... அப்படி போகிறதா சங்கதி. சரி. வடக்கு களத்தை பற்றியே அதிகம் சொல்லிவிட்டீர்கள். கிழக்கு தகவல்கள் ஏதாவது உள்ளதா?'

'ம்... அங்கும் நிறைய விசயங்கள் உள்ளன. சிலவற்றை சொல்கிறேன். தமிழ் முதலமைச்சர் ஒருவர் வேண்டும், அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் கிழக்கு தமிழர் ஒன்றியம் என்ற அமைப்பு எல்லா கட்சிகளுடனும் பேச்சு நடத்தியது. உள்ளூராட்சி தேர்தலின் முன்னரேயே பேச்சுக்களை ஆரம்பித்தது. பின்னர் சபைகளில் ஆட்சியமைப்பதில் இணக்கப்பாடு ஏற்படுத்த முயற்சித்தார்கள். இரண்டு முயற்சியும் சரிவரவில்லை. இப்பொழுது மீண்டும் முயற்சிக்கிறார்கள். ஆரம்பத்தில் அவர்களின் முயற்சிக்கு இருந்த ஆதரவும், எதிர்பார்ப்பும் இப்பொழுது இல்லை. அதனால் அவர்களின் முயற்சி வெற்றியளிக்குமென சொல்ல முடியாது'

'ஏன்... என்ன நடந்தது?'

'அந்த முயற்சியை ஆரம்பித்த பலர் இப்பொழுது அமைப்பிற்குள் இல்லை. அர்ப்பணிப்பான நோக்கமெதுவும் இல்லாமல், அரசியல் களத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டுமென நினைப்பவர்கள்தான் அமைப்பிற்குள் அதிகமாக இருக்கிறார்கள் என அதிருப்தியாளர்கள் சொல்கிறார்கள்.

அமைப்பிற்குள் அதிருப்தியை ஏற்படுத்திய சம்பவங்களில் ஒன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல். இப்பொழுது அதிருப்தியடைந்துள்ளவர்கள், நினைவேந்தலை கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் சார்பில் நடத்த முயற்சிக்க, மற்றையவர்கள் அதை தடுத்து விட்டனர். இப்போதைக்கு இப்படியான நிகழ்வை செய்ய வேண்டாமென்பதே அவர்களின் நிலைப்பாடு. அவர்கள்தான் கட்சிகளை ஒன்றிணைக்க முயற்சிக்கிறார்கள்.

ஆரம்பத்தில் அவர்களின் முயற்சிக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் ஒத்துழைத்தது. ஆனால் உள்ளூராட்சி தேர்தலில் கிடைத்த வாக்குகளை அடுத்து, அவர்கள் நிலைப்பாட்டை மாற்றி விட்டனர். மாகாணசபை தேர்தலில் தனித்து போட்டியிடுவதென்று அவர்கள் முடிவெடுத்துள்ளனர். அதைவிட வேண்டாத பெண்டாட்டி ஆக எம்.பி ஒருவர் பற்றிய தகவலும் உள்ளது'

'வேண்டாத பெண்டாட்டியா... இது சுவாரஸ்யமாக இருக்கிறதே. சொல்லுங்கள்'

'இதுவும் கூட்டமைப்பு கதைதான். தமிழ் அரசியல் கட்சிகள், அதன் பிரதிநிதிகள் எல்லோருமே தேர்தல் அரசியல்தான் செய்கிறார்கள். 'அந்த கட்சி ரணிலிடம் சோரம் போய்விட்டது, நாங்கள்தான் அக்மார்க் புரட்சியாளர்கள்' என தமிழ் தேசிய மக்கள் முன்னணி சொன்னாலும், உண்டியலுக்குள் போட்டு குலுக்கினால் எல்லோரும் ஒன்றுதான். எல்லோருக்கும் தேர்தல்தான் இலக்கு. அந்த அரசியல் பந்தயத்தில் சிலர் உலக அழகியாக இருப்பார்கள். சிலர் உள்ளூர் உப்புமாக்களாக இருப்பார்கள். வடக்கில் சிறிதரன் எப்படியோ, கிழக்கில் வியாழேந்திரனும் ஸ்கோர் செய்துகொண்டு வருகிறார். அவரது வேகம், பந்தயத்தில் பின்னிற்கும் மற்றைய அரசியல் பிரமுகர்களிற்கு அதிருப்தியை கிளப்பியுள்ளது. அதனால் கட்சி ரீதியான அழுத்தங்கள் அவருக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் நடக்கும் நிகழ்வுகளிற்கும் அழைக்கப்படுவதில்லை. சொந்த கூட்டணி எம்.பிக்களின் அழுத்தங்கள்தான் அதற்கு காரணம்.

இப்படியான உள்வீட்டு சலசலப்புக்களை மற்றக்கட்சிக்காரர்கள் எப்படியோ மோப்பம் பிடித்து விடுவார்கள். அண்மையில் மட்டக்களப்பிற்கு வந்த மனோ கணேசன் இலேசாக வியாளேந்திரனுக்கு தூண்டில் போட்டு பார்த்திருக்கிறார். அடுத்த தேர்தலில் தமது கட்சியில் போட்டியிட்டு வென்றால், பிரதியமைச்சர் கிடைக்க வாய்ப்புள்ளதாக சொன்னதாகவும் தகவல். ஆனால் வியாழேந்திரன் மறுத்துள்ளார். இதைதவிர, இன்னொரு இடத்திலிருந்தும் தூண்டில் போடப்பட்டது. அதை பிறகொரு சந்தர்ப்பத்தில் சொல்கிறேன்"

"சரி... இம்முறை பல விசயங்களை பேசிவிட்டீர். இதோ நீர் கேட்ட டீயும் வந்து விட்டது. கூட்டணியை உடைக்கப் போகிறேன் என்ற பேச்சுக்களை விட்டுவிட்டு, உட்கார்ந்து குடியும்" என்றோம்.

டீயை குடித்துவிட்டு, அடுத்த வாரம் சந்திப்பதாக கூறி கருடர் பறந்து சென்றார். ●

## நியூஸ் பிட்ஸ்

மட்டக்களப்பு மாவட்டத்தில் யார் செல்வாக்கானவர் என்ற போட்டி ஐ.தே.க பிரமுகர் ஒருவருக்கும், தமிழரசுக்கட்சி எம்.பி ஒருவருக்குமிடையில் நடந்து வருகிறது. இரண்டு தரப்பும் ஐ.தே.க மேலிடத்துடன் நெருக்கமென்பதால், தமக்கு ஏற்றால்போல அதிகாரிகள் நியமனத்தை செய்ய விரும்புவதும்,. ஒருவருக்கு ஆதரவான அதிகாரியை மற்றையவர் தூக்க முயற்சிப்பதுமென அதகளம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இவர்களின் கைகளில் சிக்கி சின்னாபின்னப்படுவது மட்டக்களப்பு மாவட்டத்தின் கணக்காளர் நியமனமொன்று. சாதாரண அரச நிர்வாக நியமனமே, அரசியல் தலையீடுகளால் சிக்கலாகியுள்ளது. அதுதவிர, மாவட்டத்திலுள்ள நேர்மையான பிரதேசசெயலாளர் ஒருவரும் இந்த போட்டிக்குள் சிக்கியுள்ளார். சட்டவிரோத மண் கடத்தல்காரர்களை பிரதேசசெயலாளர் கட்டுப்படுத்த, பிரதேசசெயலாளர் மீது அரசியல் பிரமுகர்கள் பாய தொடங்கியுள்ளனர். இதைதான் அங்க சுவிட்ச் போட, இங்க லைட் எரிவது என்பதா?

உலக வங்கியின் தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டத்தையும் வடக்கு அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் வழக்கம்போல கைவிட்டுவிடுவார்களோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. 55 000 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்த திட்டத்தின் கீழ் யாழ் மாநகரசபைக்குட்பட்ட குளங்களை புனரமைத்து, சுற்றுலா மையங்களாக்குவது, பாரம்பரிய இடங்களை பாதுகாப்பது, வீதி அபிவிருத்தி, கழிவகற்றல் என பல திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2016 இல் இந்த திட்டத்தின் முதற்கட்ட ஆய்வுப்பணிகள் ஆரம்பித்தபோதும், அதற்கப்பால் நகராமலேயே தேங்கியிருக்கிறது. தற்போது, ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு பகுதி வெட்டப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் வடமாகாணசபை உறுப்பினர் இ.ஜெயசேகரம் இந்த விடயத்தை சுட்டிக்காட்டி கேள்வியெழுப்பியிருந்தார். உலகவங்கியுடன் பேசி, அந்த விடயத்தை சரி செய்யலாமென முதலமைச்சர் பதிலளித்திருந்தார். எனினும், ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட நிதி இனிமேல் கிடைக்க வாய்ப்பில்லையென்றுதான் அதிகாரிகள் மட்டத்திலிருந்து தகவல் கசிந்துள்ளது. இந்த பெரிய திட்டத்தை விரைவாக ஆரம்பிக்காமல், இன்னும் கூட்டங்கள் கூடி விவாதித்துக் கொண்டிருப்பது ஏன்?

வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி சிறப்பு செயலணி உருவாக்கப்பட்டதாலோ என்னவோ, மீள்குடியேற்ற அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இம்முறை பெரும் வெட்டு விழுந்துள்ளது. மீள்குடியேற்ற அமைச்சிற்கு 2016 இல் 14,000 மில்லியன் ரூபாவும், 2017 இல் 9,000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இம்முறை வெறும் 750 மில்லியன் ரூபா தான் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை வைத்து போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் என்ன செய்யலாம்?. அதேவேளை, வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி சிறப்பு செயலணியென்ற பெயரில் உருவாக்கப்பட்ட புதிய செயலணிக்கு 3,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதை வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாட் பதியுதீன் கையாள்வார் என தெரிகிறது. ஜனாதிபதி சிறப்பு செயலணியில் கலந்துகொள்ள மாட்டேன் என வடக்கு முதலமைச்சரும் அதிரடியாக அறிவித்து விட்டார். அதனால் முஸ்லிம் பிரதேசங்களிலேயே இந்த நிதி அதிகமாக செலவிடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி விசேட செயலணியில் தமிழ் தேசிய கூட்டமைப்பை ஜனாதிபதி இணைத்துக் கொள்ளவில்லை. அண்மையில் யாழ்ப்பாணம் வந்த பிரதமரிடம் இந்த நிலைமையை கூட்டமைப்பு பிரமுகர்கள் சுட்டிக்காட்டி, தமிழ்பகுதி அபிவிருத்திகள் பாதிக்கப்படும் அபாயத்தை சுட்டிக்காட்டினார்கள். இதையடுத்து, வடக்கிற்கான சிறப்பு செயலணியொன்றை, தமிழ் அதிகாரியொருவரின் கீழ் அமைப்பதற்கு பிரதமர் கொள்கையளவில் இணங்கியுள்ளார். அனேகமாக இது மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் செயற்பட வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியிருக்கும் மாகாணசபை தேர்தல் களம்? 04

# வேலை + தமிழ் தேசியம் = சுதந்திரக்கட்சி!

## சுதந்திரக்கட்சியின் மாகாணசபை உறுப்பினர் குடும்பத்திற்குள்ளா?


தீபம் குழு

நாளாக நாளாக சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது வடக்கு தேர்தல் களம். தேர்தல் நெருங்க நெருங்க மாகாணசபைக்குள் குத்துவெட்டும், குழப்பமும், பிய்ச்சல் பிடுங்கலும், ஆளையாள் கவிழ்த்து விடலுமென அச்சொட்டாக தமிழகத்தின் அரசியல் மேடையாக மாறி வருகிறது.

நித்திரையிலிருந்த அரசியல்வாதிகள் எல்லோரும் விழித்தெழ ஆரம்பித்து விட்டனர். அறிக்கைகளும், அக்கப் போர்களும் ஆரம்பித்து விட்டன. ஒருவரை பற்றி ஒருவர் சேறுபூலும் ஆரம்பித்து விட்டனர். இத்தனை நாள் இவர்களெல்லோரும் எங்கேயிருந்தார்கள் என, நீங்களும் நாங்களும் தலையை பிய்த்துக் கொண்டிருப்பதற்குள் அவர்கள் எங்கேயோ போய் விடுகிறார்கள்.

வடக்கு தேர்தலில் கட்சிகளின் முதலமைச்சர் வேட்பாளர்கள் யார்? எப்படியிருக்கும் வடக்கு தேர்தல் களம்? கட்சிகளின் நிலைமை எப்படியிருக்கிறது? யார் பெறுவார்கள்? இப்படியாக தலைவெடிக்கும் ஆயிரம் கேள்விகளுடன் காத்திருக்கும்வாக்காள பெருமக்களான உங்களிற்காகவே இந்த தொடரை ஆரம்பித்துள்ளோம்.

விக்னேஸ்வரனா மாவையா என தொடங்கிய போட்டியில், பின்னர் டக்ளஸின் பெயரையும் இணைத்தார்கள். இந்த நேரத்தில் எதற்காக விஜயகலா அப்படி கதைத்தார் என சில ஊடகங்கள் குழம்பி, அவரையும் இழுத்து வந்து வண்டியில் ஏற்ற முனைந்தனர். இப்படி ஊடகங்களே பலரையும் முதலமைச்சர் வேட்பாளர் வண்டியில் ஏற்றுவதும், இறக்குவதுமாக





இருக்கும் நிலைமையில் யார் யார் வேட்பாளர்களாக இருப்பார்கள்? கட்சிகளின் நிலைமை எப்படியிருக்கும் என்ற கச்சிதமான பட்டியலை தொடராக தந்து வருகிறோம்.

இந்தவாரம் சிறிலங்கா சுதந்திரக்கட்சி முகாமிற்குள் நுழைவோம்.

கடந்த உள்ளூராட்சி தேர்தல் சமயத்திலும் நாம் ஒரு விடயத்தை வலியுறுத்தி வந்தோம். தமிழர்களின் இனப்பிரச்சனை தீர்க்கப்படும் வரை, தென்னிலங்கை கட்சிகள் வடக்கு கிழக்கில் காலூன்றுவது தமிழ் தேசியத்திற்கு ஆபத்தானது என. தமிழ் தேசிய ஒருமைப்பாட்டையும், குறிக்கோளையும், பயணத்தையும் அது வலுவிழக்க செய்யும். இன்று தென்னிலங்கை கட்சிகளின் பின்னால் திரிபவர்கள் இளைஞர்கள். அரசியல் முதிர்ச்சியற்றவர்கள். வேலைவாய்ப்பு உள்ளிட்ட ஏதாவது தேவையையுடையவர்கள்.

ஐக்கிய தேசியக்கட்சியின் களநிலைமையை பற்றி குறிப்பிடும்போது பொதுவான தமிழ் மனநிலையை குறிப்பிட்டிருந்தோம். கவர்மென்ட் வேலை, நல்ல சீதனத்துடன் அழகிய, சிவந்த பெண் என்பனவும் தேவை. கூடவே, யார் மூலமாவது தமிழீழமும் கிடைத்தால் மகிழ்ச்சி. அவ்வப்போது, தமிழன்டா என பேஸ்புக்கில் புரபைல் பிக்சர்களை மாற்றிக்கொண்டு, ஏதாவது ஸ்டேட்டஸ் போட அது உதவும்.

இந்தவகையானவர்களிற்கு கடந்த ஐந்தாறு வருடமாக வடக்கில் அதிக தீனி போடுகிறது சுதந்திரக்கட்சி. இந்த தமிழ் மனநிலையை மிக கச்சிதமாக படித்தறிந்து, இதற்கேற்ப வடக்கில் அரசியல் செய்ய தொடங்கியவர் அங்கஜன் இராமநாதன். "தெற்கு சுதந்திரக்கட்சிதான் தமிழர்களிற்கு எதிரானது. வடக்கு சுதந்திரக்கட்சி அப்படியல்ல. அது புலிகளின் நீதியான போராட்டத்தை ஏற்கிறது. இன்னும் சொல்லப்போனால் புலிகள் இல்லாமல் [illegible] பிரச்சனைகளை [illegible] அது உருவானது. இப்போது பாருங்கள், நமது தேர்தல் பிரசாரங்களில் எல்லாம் யாருடைய பாடல்கள் ஒலிக்கிறது? எங்கள் அண்ணனினுடையது தானே?" எனஒரு புது றூட்டில் ஓட தொடங்கியது.

இதுவரை அது கைமேல் பலன் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதை பார்த்துவிட்டுத்தான் ஐ.தே.கவும் யாழில் இதே உத்தியை கையாள தொடங்கியது. மனத்திருப்திக்கு புலியும் ஆச்சு, வாழ்க்கையை ஓட்ட வேலையும் ஆச்சு என பல இளைஞர்கள் அந்த முகாம்களிற்குள் மெல்லமெல்ல சென்று சேர தொடங்கினார்கள். ஆனால் தென்னிலங்கை முகாமை பலப்படுத்துவது உண்மையில் தமிழ் தேசியத்தை பலவீனப்படுத்துவது என்பதை அந்த இளைஞர்களிற்கு அரசியல்வாதிகளும் சொல்லவில்லை. ஊடகங்களும் சொல்லவில்லை. எல்லோருமே கட்சி அரசியலிற்குள் சிக்கியிருந்தார்கள்.

இதனால்தான் தென்னிலங்கை கட்சிகளின் அங்கம் வகிக்கும் இளைஞர்கள், விடுதலைப்புலிகளையும், தற்போதைய தமிழ் தேசிய அரசியல்வாதிகளையும்ஒப்பிட்டு, தமிழ் தேசிய அரசியல்வாதிகளை துரோகிகள் ஏன்றும், விலைபோனவர்கள் என்றும் சமூக ஊடகங்களில் விமர்சிக்கும் வேடிக்கையான நிகழ்வும் நடந்து வருகிறது.

அல்பிரட் துரையப்பாவிற்கு பின்னர் யுத்தம் முடியும்வரை சுதந்திரக்கட்சியினால் வடக்கில் வலுவான முகாமொன்றை உருவாக்க முடியாமல் போய்விட்டது. யுத்தகாலத்தில் சுதந்திரக்கட்சியினர்தான் தமிழர்களின் முதலாவது துரோகியாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தனர். ஐ.தே.கவின் மகேஸ்வரனிற்கு வழங்கப்பட்ட சலுகையை போல சுதந்திரக்கட்சியின் தலைவர் ஒருவருக்கு சலுகை கொடுக்க புலிகள் தயாராக இருக்கவில்லை. அதனால் வடக்கில் சுதந்திரக்கட்சியின் ஆதரவுத்தளம் மிக வறண்டநிலையில் இருந்தது.

மஹிந்த ராஜபக்சவின் காலத்தில் வெளிநாட்டிலிருந்து அங்கஜன் இராமநாதன் இறக்குமதியானார். இப்போதும் அப்போதும் வேலைவாய்ப்புத்தான் அவர்களின் பிரதான ஆயுதம். யுத்தம் முடிந்த சமயத்தில் தமிழ் தேசிய வாக்குகள் தெளிவாக "வீட்டுக்குள்ளேயே" இருந்தன. அபிவிருத்தி, வேலைவாய்ப்புக்களின் மூலம் கவரக்கூடிய சலனமான வாக்குகளை அப்பொழுது ஈ.பி.டி.பியே வைத்திருந்தது. அதனால்தான் அங்கஜனின் வரவை ஈ.பி.டி.பி அவ்வளவாக விரும்பவில்லை. அப்பொழுது

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு தரப்பிற்குமிடையிலான மோதல் ஊரறிந்தது.

எல்லா விமர்சனத்திற்கும் அப்பாலும், அங்கஜன் இரா்மநாதனின் அரசியல் விடாமுயற்சியுடையவர்கள் சமகாலத்தில் மிகக்குறைவானவர்கள். அதனால்தான் மேலெழ பாவிக்க வேண்டிய எல்லா உத்திகளையும் கச்சிதமாக பாவித்து, வாக்கு வங்கியை அதிகரித்துக் கொண்டிருக்கிறார். விடுதலைப்புலிகளின் பார்வையில் சுதந்திரக்கட்சியின் செயற்பாட்டாளர்கள்தான் முதலாவது துரோகிகள் என்ற நிலைமையிருந்தது. ஆனால் இன்று விடுதலைப்புலிகளின் பாடலை தேர்தல் பிரசாரத்தில் ஒலிபரப்பி,



விடுதலைப்புலிகளின் ஆதரவு மனநிலையிலேயே இளைஞர்களை பேணி, அதே மனநிலையிலிருந்தபடி அவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட ஏனைய கட்சிகளை விமர்சிக்கும் மனநிலையில் பேணி வருவது சாதாரண விடயமல்ல.

2010 இல் இருந்து வடக்கில் குறிப்பாக யாழில் சுதந்திரக்கட்சியின் வாக்குவங்கி அதிகரித்து வருகிறது. தமிழ் தேசிய அரசியலை முன்னெடுப்பவர்களின் பலவீனம் அதற்கு வாய்ப்பாக உள்ளது. யாழில் ஒரு நாடாளுமன்ற ஆசனத்தை பெற்றுக்கொள்ளும் நிலைமை கடந்த பொதுதேர்தலில் ஐ.தே.கவிற்கு இருந்தது. சு.கவிற்கு மயிரிழையில் தவறியது. ஆனாலும், நியமனப்பட்டியல் உறுப்பினராக அங்கஜன் இராமநாதன் நியமிக்கப்பட்டு, சு.கவின் வாக்குவங்கியை விஸ்தரிக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

சனசமூகநிலையங்கள், விளையாட்டு கழகங்கள், ஆலயங்களை குறிவைத்து நிதியுதவி வழங்கி இளைஞர்களை உள்ளீர்க்கும் உத்தியை இரண்டு தென்னிலங்கை கட்சிகளும் வெற்றிகரமாக செய்தன. கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சு.க சில பிரதேச சபைகளில் அபரிமிதமான வளர்ச்சியை எட்டியிருந்தது. கரவெட்டி பிரதேச சபை இதில் முக்கியமானது. இதற்காக கணக்கில்லாத நிதியை செலவிட்டிருந்தார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சுதந்திரக் கட்சியின் வாக்கு வங்கியின் அதிகரிப்பில் பலரும் கவனம் செலுத்தாத சமூகரீதியான காரணமும் உள்ளது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் சுதந்திரக்கட்சி வெற்றிபெற்ற, அதிக வாக்குகளை பெற்ற பகுதிகளை அவதானித்தால் அவை அனேகமாக சமூகரீதியாக ஒடுக்கப்பட்ட சாதிகள், இடைநிலை சாதிகளை கொண்ட பிரதேசங்கள் என்பது புரியும்.

வடக்கில் ஆதிக்க சாதியாக இருந்த வெள்ளாள சமூகத்தின் ஆதிக்கத்தால் ஒடுக்குமுறைக்குள்ளான சமூகங்களிடம் சில இயல்புகள் ஏற்பட்டுள்ளன. எந்த சூழலிலும் தம்மை தகவமைத்தல், கல்வி, வேலைவாய்ப்புக்களிற்காக சமரசம் செய்தல் போன்றன அதில் முக்கியமானவை. சமூகரீதியான பார்வைகள், அணுகுமுறைகள் தொடர்பான ஆழமான ஆய்வுகள் எதுவும் தமிழர்கள் மத்தியில் இன்னும் நடக்கவில்லை. அது நடந்தால் இதை சரியாக புரிந்துகொள்ளும் விதமான ஆய்வுகள் வரலாம்.

கரவெட்டி, சுன்னாகம் பிரதேச சபைகள் இதற்கு நல்ல உதாரணம். அங்குள்ள ஒடுக்கப்பட்ட சமூகங்களின் வாக்கே சுதந்திரக்கட்சிக்கு கிடைத்தது.

மாகாணசபை தேர்தலில் சுதந்திரக் கட்சியின் வியூகம் எப்படியிருக்கும்? யார் முதன்மை வேட்பாளர்?

இதில் பெரிய கம்பசூத்திரங்கள் இருக்காது. இதுவரை என்ன உத்தியை கையாண்டார்களோ, அதே உத்தியைத்தான் மாகாணசபை தேர்தலிலும் கையாள்வார்கள். காசு... பணம்... மணி.... துட்டு அதேதான்! (அதாகப்பட்டது அபிவிருத்தி நிதியை சொன்னோம் ஆக்கும்!)

கரவெட்டி பிரதேசசபையின் இமையாணன், கொற்றாவத்தை, வல்வெட்டி, உடுப்பிட்டி போன்ற பகுதியில் பெருமளவு நிதியை செலவிட்டு, கடந்த உள்ளூராட்சிசபை தேர்தலில் கணிசமான வாக்குகளை பெற்றிருந்தார்கள். சுன்னாகம் பிரதேசசபைக்குட்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகங்களின் வாக்குகள் எல்லாம் சேர நிச்சயம் ஒரு மாகாணசபை உறுப்பினரை பெற்றுக்கொள்ளலாம் என கட்சி நினைக்கிறது.

புதிய முறைமையில் தேர்தல் நடந்தாலே அதற்கு அதிக வாய்ப்புள்ளது. புதிய முறைமையில் தேர்தல் நடந்தால் வடக்கு கிழக்கிலுள்ள குறைந்தளவு வாக்காளர்களை கொண்ட கட்சிகளிற்கு பிரதிநிதித்துவம் கிடைக்கும். ஆனால் இப்போதைய நிலையில், புதிய முறைமையில் தேர்தல் நடக்க வாய்ப்பில்லை. ஆனாலும் ஆசனமொன்றை குறிவைத்து சுதந்திரக்கட்சி யாழில் நிச்சயம் முயற்சி செய்யும். அது அனேகமாக அங்கஜனின் தந்தை இராமநாதனை மாகாணசபை உறுப்பினராக்கும் முயற்சியாகத்தான் இருக்கும். கரவெட்டி பிரதேசசபை தவிசாளராக அவரை ஆக்குவதற்கு முயற்சித்தார்கள். தலைகீழாக நின்றும் அது முடியவில்லை. அவர் தவிசாளராகியிருந்தால், அந்த பொறுப்பை கைவிட்டு மாகாணசபைக்கு முயன்றிருப்பாரா என்பது சந்தேகம்தான். இப்போது சாதாரண உறுப்பினராகத்தான் இருக்கிறார். அதனால் பெரும்பாலும் வடமாகாணசபை தேர்தலில் அவர் முதன்மை வேட்பாளராக களமிறங்ககூடும்.

ஏற்கனவே உள்ள வாக்கு வங்கியை, விவசாய பிரதியமைச்சை வைத்துக் கொண்டு இன்னும் விஸ்தரித்து, ஒன்று அல்லது இரண்டு மாகாணசபை உறுப்பினர்களை யாழில். உருவாக்க வேண்டுமென முயற்சிக்கிறார். அங்கஜனின் அரசியல் நகர்வுகளை அவ்வளவாக பொருட்படுத்தாமல் இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு, உள்ளூராட்சிசபை தேர்தலின் பின்னர்தான் விழித்துக் கொண்டது. அங்கஜனின் நகர்வை தடுக்கிறேன் பேர்வழி என, பிரதி சபாநாயகராவதை தடுத்தார்கள். எப்படியும் சுதந்திரக் கட்சியை காலூன்ற வைக்க வேண்டும் என்பதில் குறியாக இருக்கும் மைத்திரி, பிரதியமைச்சர் பதவியொன்றை வழங்கியிருக்கிறார். வாக்கை திரட்டுவதில் பிரதியமைச்சர் பதவி அதிக அனுகூலமானது.

எப்படியோ அடுத்த மாகாணசபை தேர்தலில் யாழில் ஒரு ஆசனத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு சுதந்திரக் கட்சிக்கு உள்ளது. அனேகமாக அதை குடும்பத்திற்குள்ளேயே வைத்திருப்பார்கள். அரசியல்ரீதியிலான மாற்றங்கள் இந்த வருட இறுதிக்குள் ஏற்பட்டாலும், சுதந்திரக்கட்சியின் வாக்கில் பெரிதாக தாக்கம் செலுத்த வாய்ப்பில்லை. காரணம், அரசியல் ரீதியிலான சிந்தனையுடையவர்கள் அதிகமாக சுதந்திரக்கட்சியை ஆதரிக்கவில்லை. உள்ளூர் மைதானத்திற்கு நிதி கிடைத்தது, வேலை கிடைத்தது என்ற ரீதியிலான வாக்காளர்களே அதிகமாக உள்ளனர்.

அதனால், சதாசிவம் இராமநாதன் தலைமையில் களமிறங்கும் அணி, ஒரு ஆசனத்தை கைப்பற்றுவதற்கான வாய்ப்புள்ளதென கருதலாம்.


தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
தொடர்புகளிற்கு
ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563
அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562
செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் நீங்கள்தான் என அரசியல்வாதிகள் ஆளாளுக்கு இழுத்துவிட, ஆளை விடுங்கப்பா என ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறார் குமார் சங்கக்கார. கேட்டால் "அது நமக்கு சரிப்பட்டு வராதுப்பா" என்கிறார். அப்படியென்றால் எது சரிப்பட்டு வரும்? கிரிக்கெட்தான் அவருக்கு சரி. இப்பொழுது கண்டியில் கிரிக்கெட் அக்கடமி ஒன்றை ஆரம்பிப்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாராம். விரைவில் முறைப்படியான அறிவிப்பு வருமென தெரிகிறது.

<https://twitter.com/KumarSanga>





கிறிஸ்டியானோ ரொனால்டோ சொந்த நாட்டுக்காக எத்தனை கோல் அடித்தார்? கிளப்பில் எத்தனை கோல் அடித்தார்? உலகக்கிண்ணத்தில் இப்படி ஆடியிருக்கலாமென ரசிகர்கள் அடித்துக் கொண்டிருக்க, ரெனால்டோ உலகக்கிண்ணம் முடிந்த மறுநாளே பிஸி. இம்முறை விசிட் சீனாவிற்கு. பக்கத்திலுள்ள இத்துணுண்டு தென்கொரியா எல்லாம் உலகக்கிண்ணத்தில் கலக்குகிறதே என்றோ என்னவோ, சீனாவும் கால்பந்தில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது. கால்பந்தில் கவனத்தை திருப்பி, இளைஞர்களை அதில் ஆர்வம் செலுத்த வைக்க சீனா முயற்சிகளை தொடங்கியுள்ளது. ரொனால்டோவை அழைத்து, அதற்கு அத்திவாரமிட்டுள்ளது.

## வலை உலகம்...


அலிசியா அயிலிஸ். 2017 இன் மிஸ் பிரான்ஸ். இன்னொரு விதமாகவும் அம்மணியை அறிமுகப்படுத்தலாம் கிலியன் மஃப்பேயின் காதலி. உலகக்கிண்ணத்தை வென்ற பிரான்ஸ் அணியின் இளம் புயல் மஃப்பேயை எல்லோரையும் திரும்பி பார்க்க வைத்தார். அட, இந்த வயதில் கேர்ள் பிரண்ட் இருக்காமலிருக்க வாய்ப்பிருக்காதே என ஊடகங்கள் தேட ஆரம்பிக்கத்தான், அலிசியா சிக்கினார். கயானாவிலிருந்து பிரான்சிற்கு குடிபெயர்ந்தவர். பாரிஸ் செயின்ட் ஜெர்மைண்ட் அணிக்காக மஃப்பே ஆடிக் கொண்டிருக்கும்போது, அறிமுகமாகி அப்பொழுதே டேட்டிங் செல்ல தொடங்கியிருக்கிறார். அந்த உறவு இப்பொழுதும் நீடிக்கிறது!

https://twitter.com/aliciaayliesoff

விம்பிள்டனில் அரையிறுதிவரை வந்தும் பட்டம் வெல்ல முடியாமல் போனது செரீனாவிற்கு. இதனால் அப்செற்றில் இருந்த அம்மணி, இப்பொழுது அடுத்த முயற்சியில் இறங்கியிருக்கிறார். ரென்னிஸின் கடைசிக்கட்டத்தில் வந்ததை புரிந்ததாலோ என்னவோ இந்த முயற்சி. இணைய வர்த்தகத்தில் இறங்கியிருக்கிறார்.

https://twitter.com/serenawilliams





இளைஞர் ஒருவருடன் சமந்தா மணக்கோலத்தில் நிற்கும் படத்தை யாரோ பகிர்ந்திருந்தார்கள். அதை ருவிற்றர் வாசியொருவர் பகிர்ந்து, என்ன இது? என கேள்வியெழுப்பி, சமந்தாவை -ரக் செய்திருந்தார். அந்த படத்தை பார்க்கவே, அது போட்டோஷொப் விளையாட்டு என்பது புரிந்தது. அதனால்தானோ என்னவோ, சமந்தாவும் பதிலளித்திருக்கிறார். "போனவாரம் ஓடிப்போனோம் திருமணம் செய்ய. எப்படி இந்த போட்டோ லீக் ஆனதென்றே தெரியவில்லை. பார்த்ததும் உருவான காதல்" என விளையாட்டாக ருவிற் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.ராகோத்தமன்

# சரித்திரம் படைக்க புறப்பட்ட தணு!



## ராஜிவ் காந்தி கொலை 40
### புலிகள் சிக்கிய கதை

முதலாவது, இடம் உறுதி செய்யப்பட்டுவிட்டது. ஸ்ரீபெரும்புதூர்தான்.

அடுத்தது, நளினி அரை நாள் விடுப்பு எடுத்தால் போதும். மூன்றாவது, மதியம் மூன்று மணிக்கு அவர் தயாராக இருக்கவேண்டும். அன்றைய சந்திப்புக்கு ஹரி பாபுவும் வந்தார்.

முருகன் அங்கே இருந்தார். அனைவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, இரவு உணவை அங்கேயே முடித்துக்கொண்டார்கள். பிறகு ஹரி பாபு, முருகன், நளினி மூவரும் அங்கிருந்து புறப்பட்டு பேருந்து நிறுத்தம் வரை சென்றார்கள்.

'நாளை சந்திப்போம்' என்று சொல்லி விடைபெற்றுப் பிரிந்து அவரவர் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள். முருகன் அன்றிரவு நளினியுடன் அவரது வில்லிவாக்கம் வீட்டுக்குச் சென்றார்.

இரவு அங்கேதான் தங்கினார். இரவு முழுவதும் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். 21ம் திகதி. காலை எட்டு மணிக்குக் கிளம்பி, நளினி அவரது அலுவலகம் செல்ல, முருகன் ராயப்பேட்டை வீட்டுக்குச் சென்றார்.

நளினி அலுவலகம் சென்றதும் தனது நிர்வாக இயக்குநரிடம் மதியம் அரைநாள் விடுப்பு வேண்டும் என்று கேட்டார்.

அவர் பெயர் முத்துசாமி. விடு முறைக்கான காரணம் எதையும் கேட்காத அவர், 'எதற்கு அரைநாள் விடுப்பு? உன் வேலையை முடித்து விட்டால் எப்போது வேண்டு மானாலும் கிளம்பலாம்' என்று சொல்லிவிட்டார்.

நளினி, பகல் இரண்டு மணி வரை அன்று அலுவலகத்தில் இருந்தார். அதன்பின் புறப்பட்டு ராயப்பேட்டைக்குச் சென்று வீட்டில் சாப்பிட்டுவிட்டு, அன்றைக்கு உடுத்திக்கொள்ளவிருந்த புடைவையை அயர்ன் செய்யக் கொடுத்துவிட்டு வந்தார்.

முருகனைத் தவிர வீட்டில் வேறு யாருமில்லை. (திட்டத்தில் நேரடியாகத் தொடர்பில்லாத மற்ற அனைவரையும் சிவராசன் எங்காவது சுற்றுலா போய்விடச் சொல்லி உத்தரவிட்டிருந்தது நினைவிருக்கும்!)

வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்து வைத்துவிட்டு அவர்கள் இருவரும் தயாராகக் காத்திருக்க, தணுவையும் சுபாவையும் அழைத்துக்கொண்டு சரியாக 3.45க்கு சிவராசன் வந்து சேர்ந்தார்.

வெள்ளை பைஜாமா குர்தாவும் கையில் ஒரு சிறு ஸ்கிரிப்ளிங் பேடும் வைத்திருந்தார். வி.பி.சிங் நிகழ்ச்சியில் படமெடுக்க முருகன் நளினியிடம் அளித்த யாஷிகா கமரா, இப்போது சிவராசன் கையில் இருந்தது.

(பின்னால் இது சி.பி.ஐயால் கைப்பற்றப்பட்டது.) சுபா பச்சை நிறப் புடைவை அணிந்திருந்தார். மூவருமாகப் புரசைவாக்கத்தில் வாங்கிய புடைவை.

தணு அணிந்திருந்தது அந்த லூசான ஒரேஞ்ச் சுடிதாரும் பச்சை துப்பட்டாவும். நளினி, தணுவைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

சுபா, 'தணு இன்று சரித்திரம் படைக்கப் போகிறார்!' என்று சொல்லிவிட்டுப் பெருமிதமுடன் பார்த்தார். விவரிக்க முடியாத உணர்ச்சிக் கொந்தளிப்பு அனைவருக்குமே இருப்பினும் கட்டுப்படுத்திக் கொண்டு, கிளம்புவதில் மும்முரமானார்கள்.

டைரி, பேப்பர், பென்சில் என்று எதையும் எடுத்துவர வேண்டாம் என்று நளினியிடம் சுபா சொன்னார். எனவே நளினி ஒரு பாதுகாப்புக்கு ஐநூறு ரூபாய் பணம் மட்டும் எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

'ஒரு நிமிடம். எனக்கு ஏதாவது ஒரு கோயிலுக்குப் போகவேண்டும்' என்று தணு கேட்டார். வெளியே வந்தவர்கள் ஓர் ஆட்டோவைப் பிடித்து, நாதமுனி தியேட்டருக்கு அருகே உள்ள பிள்ளையார் கோயிலுக்குப் போனார்கள். மாலை நான்கு மணி வேளை என்பதால் கோயில் மூடியிருந்தது. வெளியில் நின்றபடியே தணு பிரார்த்தனை செய்தார்.

அங்கிருந்து புறப்பட்டு அவர்கள் பாரீஸ் கார்னருக்கு வந்து சேர்ந்து, திருவள்ளுவர் பேருந்து நிறுத்தத்தை அடையும்போது மணி சரியாக ஐந்து.

மறுபுறம், அதே பாரீஸ் கார்னருக்கு முன்னதாகவே வந்து சேர்ந்திருந்த ஹரி பாபு, கையில் ஒரு சந்தன மாலை வைத்திருந்தார். பூம்புகார் எம்போரியத்தில் அன்று காலை வாங்கிய மாலை அது.

எங்கே நல்ல மாலை கிடைக்கும் என்று முன்னதாக சுபா சுந்தரத்தின் ஸ்டூடியோவில் அவர்கள் விவாதித்திருக்கிறார்கள். சுபா சுந்தரம் விலை மலிவாக, சந்தன மாலைகள் எங்கெங்கே கிடைக்கும் என்று சொன்னபோது, 'மாலை பிரமாதமாக இருக்கவேண்டும். கமகமவென்று மணக்கவேண்டும்!' என்று சிவராசன் கூறியிருக்கிறார்.

ஏதோ ஒரு சாதாரண கடையில் வாங்கியிருக்க வேண்டிய மாலைதான் அது. ஆனால் சிவராசன் அது மிகத் தரமான மாலையாக இருக்க வேண்டும் என்று உறுதியாகச் சொன்னபடியால் பூம்புகாரில் வாங்கச் சொல்லி சுந்தரம் அனுப்பி வைத்திருக்கிறார்.

பிரவுன் கவர் ஒன்றில் போட்டு ஹரி பாபு எடுத்து வந்திருந்த மாலையை சிவராசன் பார்த்தார். சிறிது நேரம் அவர்கள் பாரி முனையில் வெறுமனே சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஓரிடத்தில் நின்று ஐஸ்க்ரீம் சாப்பிட்டார்கள். ஐந்தரை மணிக்கு மேல் திரும்பவும் பெரியார் பேருந்து நிலையத்துக்கு வந்து, ஸ்ரீபெரும்புதூர் செல்லும் பஸ் ஒன்றில் ஏறி அமர்ந்தார்கள். ஐந்து பேருக்குமாகச் சேர்த்து சிவராசன் டிக்கெட் வாங்கினார். அண்ணா சாலை, போரூர், பூந்தமல்லி வழியே பஸ் சென்று, சரியாக இரவு ஏழரை மணிக்கு ஸ்ரீபெரும்புதூரை அடைந்தது.

அவர்கள் ஸ்ரீபெரும்புதூரில் இறங்கியபோது ராஜிவ் காந்தி விமானத்தில் வந்துகொண்டிருந்தார் இரண்டு மணி நேரம் தாமதமாக.

(தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சாள்ஸ் ஜெ.போர்மன்

ஐந்து வாரங்களாக நான் எழுதிவந்த எனது கிரவேஷியப் பயணக்கட்டுரையை இடையே ஒரு சில வாரங்கள் எழுத முடியாமல் போய்விட்டது. காரணம் அவ்வாரங்களில் நான் இன்னொரு பயணத்தில் இருந்ததும் அச்சமயத்தில் எனக்குத் தேவையான இணையத்தொடர்புகள் வாய்க்காததும் ஆகும். மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்!

உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டிகள் நடந்த அந்த வாரங்களில் கிரவேஷியா உலகின் பல நாடுகளின் கவனத்தையும் ஈர்த்ததைப் போலவே உங்களையும் தமது கால்பந்தாட்டத் திறமை மூலம் புருவங்களை உயர வைத்திருக்கும் என்று நம்புகிறேன்.

1992 இல்தான் பிறந்த கிரவேஷியா என்ற சிறிய நாடு தங்கக் கோப்பையை வெற்றியெடுக்கும் கடைசிப் போட்டிவரை வந்து தோல்வியடைந்தாலும் தனது பெயரைக் கால்பந்தாட்ட ரசிகர்களிடையே பலமாகப் பொறித்துவிட்டதை எவராலும் மறக்கமுடியாது.










# அதிரியாட்டிக் கடல் தன் கைப்பட எழுதிய கவிதை

## 6 பிராச் பாறைகளிலிருந்து வெள்ளை மாளிகை வரை

எமது பிரயாணத்தில் நாம் கிரவேஷியாவின் தெற்கிலிருக்கும் முக்கிய நகரான டுப்ரோவ்னிக்கின் தெற்கே புறநகரான மில்னியில் தங்கியிருந்து அதையடுத்திருக்கும் கௌதாத் என்ற பண்டைய நகருக்கு வந்திருந்ததைக் கடந்த அத்தியாயத்தில் எழுதியிருந்தேன்.

பேருந்திலிருந்து இறங்கிக் கடற்கரை ஓரம் சுமார் நூறு மீற்றர் தூரத்தைத் தாண்டியவுடன் அப்பிராந்தியத்தின் அமைப்பு மாறியதைக் காண முடிந்தது. உயரமான, கொஞ்சம் சேதமடைந்த மதில்களின் ஊடாக அகலமில்லாத சாலைகளாக மாறியது அக்கிராமம்.

எங்கள் முன்னாலிருந்த இரண்டு சாலைகளின் ஒன்று உயரத்தை நோக்கிப் போக இன்னொன்று கீழ் நோக்கி இறங்கியது. ஆங்காங்கே சில சுற்றுலாப் பிரயாணிகள் தங்கள் கைகளில் அப்பிரதேசத்தின் வரைபடத்தைப் பார்த்துப் போய்க்கொண்டிருக்க நாங்கள் உயரமான சாலையினூடாக நடந்தோம். இரண்டு பக்கங்களிலும் பல விதமான பொருட்களை விற்கும் கடைகள் நிரம்பியிருக்க ஆங்காங்கே ஓரிரு சிற்றுண்டிச் சாலைகளும் இருந்தன. அவ்வீதியின் கடைசியில் இருந்தது ஒரு தேவாலயம்.

அது ஒரு கத்தோலிக்க தேவாலயம். ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தினுள் ஒரு பாகமான பிரான்ஸிஸ்கன் சபையைச் சேர்ந்ததாகும். அத்தேவாலயத்துக்குள் கிரவேஷியாவின் புகழ்பெற்ற கலைஞர் வாஹோ புக்கவாக்கின் ஓவியங்கள் இருப்பதாக வாசித்த ஞாபகம் வந்தது. அந்த ஓவியரின் பல ஓவியங்கள் நகரிலிருக்கும் ஒரு கலைக்கூடத்தில் இருப்பதையும் அறிந்திருந்தேன்.

கௌதாத் நகருக்கு வருவது தற்செயலான சம்பவமாக இருப்பினும் அந்த மக்களின் கலாச்சாரத்தின் ஒரு பகுதியைச் சித்தரிக்கும் கலையைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதற்காகக் கொஞ்ச நேரத்தை ஒதுக்காமல் இருக்கமுடியாதல்லவா!

கௌதாத் நகரின் வீதிகள், நீர்ப்பரப்பை அடுத்திருக்கும் வீடுகள், அதன் பூந்தோட்டங்களைச் சித்தரிக்கும் ஓவியங்களைத் தேவாலயத்தில் காண முடிந்தது. வாஹோ புக்கவாக்கினால் கண்ணாடியில் வரையப்பட்ட கவ்தாத் நகர் கோவிலின் கூரையை அடுத்திருந்தது. அழகான அந்த ஓவியங்களைத் தவிர 15ம் நூற்றாண்டில் வரையப்பட்ட அங்கிருக்கும் புனித மிக்கேலின் படம் குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ்ஸிஸ்கன் மடத்துடன் இருந்த அந்தத் தேவாலயம் முதலில் 13ம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. 1667 இல் அப்பகுதியில் உண்டான பூமியதிர்ச்சியின்போது அத்தேவாலயத்தின் பெரும்பகுதி இடிந்துவிட்டது. 1806 இல் அத்தேவாலயம் ரஷ்யர்களாலும், மொன்ரிநீக்ரர்களாலும் கையகப்படுத்தப்பட்டு அவர்களது தேவைக்கான பொருட்களைப் பாதுகாக்கும் இடமாக்கப்பட்டது. அதன் பின்பு வெவ்வேறு கைகளில் மாறியபின் 1984 இல் மீண்டும் தேவாலயமாகவும், ஞாபகச்சின்னமாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது.

19ம் நூற்றாண்டில் தேவாலயத்தின் பெரும்பகுதி புதுப்பிக்கப்பட்டது. மடத்தினர் இப்போது பிரயாணிகள் தங்குவதற்காக ஒரு பகுதிக் கட்டடத்தில் உறைவிடங்களை உண்டாக்கியிருக்கிறார்கள். அழகான சூழலும், ரம்யமான வாசமுமாக இருந்த அவ்விடுதியைப் பற்றி முன்பே தெரிந்திருந்தால் அங்கேயே தங்கியிருக்கலாம் என்று யோசித்துக்கொண்டேன்.

கௌதாத் நகரின் பெயர் CIVITAS VETUS என்ற லத்தீன் சொல்லில் இருந்து மருவிவந்தது என்பதையும் அத்தேவாலயத்தில் அறிந்துகொண்டேன். அதன் அர்த்தம் பழைய நகர் என்பதாகும். எத்தனை பழையது என்று கேட்டால் கி.மு நான்காம் நூற்றாண்டில் கிரேக்கர்களால் ஸ்தாபிக்கப்பட்டது என்று தெரியவருகிறது. எப்பிடாருஸ் என்ற பெயரில் இருந்து கி.மு 228 இல் ரோம ராஜ்யத்தின் கீழ் வந்து எப்பிடாரியம் என்று மாறியது.

கி.பி நாலாம் நூற்றாண்டில் பூமியதிர்ச்சியொன்றால் இடிந்தொழிந்த நகரை 7ம் நூற்றாண்டில் அங்கே புலம்பெயர்ந்து வந்த அவார், ஸ்லாவியர்கள் தம் வசப்படுத்தினார்கள்.

தேவாலயத்தில் [illegible] விட அதிக [illegible] என்றாலும் கௌத்தாத் பற்றி மட்டுமல்லாமல் டுப்ரோவ்னிக் நகரம் பற்றி எனக்குள் இருந்த சில கேள்விகளுக்கும் அங்கே விபரங்களை அறிந்துகொள்ள முடிந்தது.

பொதுவாக எங்கள் பிரயாணங்களில் கலை, கலாச்சாரங்கள் இருக்கும் இடங்களில் நான் நேரத்தைச் செலவிடுவது எனது மகன் கதிருக்குப் பழக்கம். அதனால் அவனும் ஓரளவு ஓவியங்கள், சரித்திர விபரங்கள் போன்றவற்றில் ஆர்வத்தை அதிகரித்துக்கொண்டிருக்கிறான். ஆனாலும், அவனது வயதில் பொறுமையாக ஓரிடத்தில் இருந்து விபரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. தேவாயத்திலிருந்து வெளியே போய் குறுகிய பாதைகளில் ஓடி மேல் நோக்கி ஓடுவதில் அவனது ஆர்வம் இருந்தது.

தேவாலயத்தின் அருகேயிருந்த சிற்றுண்டிச் சாலையில் பழரசமும், இனிப்பு ரொட்டியும் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு கதிர் ஆசைப்பட்டபடி மேல் நோக்கிப் போன படிக்கட்டுகளில் ஏறினோம். எதிர்பாராதவிதமாக திடீரென்று எங்கள் முன்னால் அழகிய இயற்கைக் காடு தோன்றியது. அது அத் தீபகற்பத்தின் ஒருஎல்லையாகஇருந்தது. சட்டென்று கீழ் நோக்கி முடியும் எல்லையில் இருந்து பார்க்கும்போது நீலக்கடலும் அதன் கடற்கரைகளும் தெரிந்தன. என்னிடமிருந்த கமராவை வாங்கிக்கொண்டு அங்கிருந்த சிறு குருவிகளையும், பிரா்ணிகளையும் படமெடுக்கப்போனான் கதிர். அங்கிருந்த குன்றுகளொன்றில் இருந்து அழகான மாலையை ரசித்தேன் நான்.

[illegible]த்த படங்களைக் [illegible]காட்டிக்கொண்டிருந்தான் கதிர். பின்பு இருவரும் அந்த உயரமான இடத்திலிருந்து ஒரு பக்கமாகப் போன குறுகிய பாதையில் நடந்தோம். நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி, எப்படிப் போனாலும் ஆரம்பித்த இடத்துக்கே வரும்படியான அமைப்பைக் கொண்டிருந்தது அத் தீபகற்கம்.

அடுத்ததாக எங்கள் கண்களில் பட்டது ஒரு கல்லறை மைதானம் ஆகும். அதுதான் கௌதாத் நகரின் மைதானம். பல கல்லறைகள் பரந்திருக்க ஒன்று மற்றும் கம்பீரமாக எழுந்திருந்தது. வெள்ளை நிறக் கற்களால் மட்டுமே கட்டப்பட்டிருந்த அந்த அழகிய எட்டுக் கோணச் சமாதியின் கதவு வெண்கலத்தாலானது. சமாதியின் வாசலில் ஒரு பெண்மணி அதற்குள் நுழைவதற்கான அனுமதிச் சீட்டுக்களை விற்றுக்கொண்டிருந்தாள். அது யாருடைய சமாதி போன்ற விபரங்கள் எனக்குத் தெரியவில்லை. எனவே அதற்குள் போகாமல் அந்தக் கல்லறை மைதானத்திலிருந்து தூரத்தில் தெரிந்த டுப்ரோவ்னிக் நகரைப் பார்த்துவிட்டுக் கீழே இறங்கினோம்.

பின்னர் தேடியதிலிருந்து அந்தச் சமாதி அந்த நகரின் மிகப் பிரபலமான கப்பல் கட்டும் குடும்பத்தினரான ராசிச் குடும்பத்தினருடையது என்று தெரியவந்தது. கிரவேஷியப் பிரபல சிற்பக் கலைஞரான இவான் மெஸ்ரோவிச் 1921 இல் அந்தச் சமாதியை முழுக்கவும் வெள்ளை பிராச் கற்களைக் கொண்டு உருவாக்கியிருக்கிறார். குறிப்பிட்ட பிராச் கற்கள் கிரவேஷியாவின் பிராச் பிராந்தியத்தில் மட்டும் கிடைப்பவை என்றும் அக்கற்கள் கிரவேஷியாவின் பல முக்கிய கட்டடங்களில் மட்டுமன்றி வாஷிங்டனில் வெள்ளை மாளிகை, வியன்னாவில் பாராளுமன்றக் கட்டடம் போன்றவைகளிலும் பாவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கங்குலியென்ற சிற்பி!

இந்தியாவின் வீரேந்திர சேவாக், தோனி ஆகியோரின் கிரிக்கெட் வாழ்க்கையைக் கட்டமைத்ததிலும், செதுக்கியதிலும் முன்னாள் கப்டன், வீரர் சவுரவ் கங்குலிக்கு முக்கியப்பங்கு உண்டு. நடுவரிசையில் ஆடி வந்த சேவாக்கை தொடக்க ஆட்டக்காரரா மாற்றியதும், 7வது வீரராக இறங்கிய தோனியை 3வது வீரராகக் களமிறக்கி சாதித்ததும் கங்குலிதான்.

இந்தச் சம்பவங்களை சவுரவ் கங்குலி "பிரேக்பாஸ்ட் வித் சாம்பியன்ஸ்" நிகழ்ச்சியில் உற்சாகமாகப் பகிர்ந்துள்ளார்.

வெளிநாட்டுக்குப் பயணம் செல்லும் இந்திய அணியில் வீரேந்திர சேவாக்கை முதன்முறையாக நான் தேர்வு செய்தேன். அப்போது தேர்வாளர்கள் என்னிடம் பவுன்சர்களை ஆடத்தெரியாத சேவாக்கை ஏன் வெளிநாட்டு பயணத்துக்கு தேர்வு செய்தாய்?. சேவாக் வெளிநாட்டுப் பயணத்தில் தீணீ செய்தால், பவுன்சரை தலையில்போட்டு உட்காரவைத்து விடுவார்கள் என்று கிண்டல் செய்தார்கள்.

நான் அவர்களிடம் கூறினேன், "சேவாக் எப்படி விளையாடுகிறார் என்பதைப் பார்க்காமல் நீங்களாக ஒரு முடிவுக்கு வராதீர்கள். அவருக்கு வாய்ப்பு கொடுத்துப் பாருங்கள்" என்றேன்.

அதன்பின் தென்னாபிரிக்க தொடருக்கு முதன்முதலாக அழைத்துச் செல்லப்பட்ட சேவாக், அங்கு சதம் அடித்து அனைவரின் வாயை அடைத்தார். அவரின் சதத்தைப் பார்த்தபின் அவரை நடுவரிசையில் சேவாக்கை களமிறக்க எனக்கு விருப்பமில்லை.

ஒருநாள் சேவாக்கை அழைத்தேன், "நீங்கள் ஏன் தொடக்க வீரராகக் களமிறங்கக்கூடாது?" என்றேன். நானா, நான் எப்படி களமிறங்குவேன் என்றார்.

அதற்கு "தொடக்க வீரராக களமிறங்கும் திறமை பிறக்கும்போதே யாருக்கும் வரவில்லை. நீங்கள் கற்றுக்கொள்ளலாம். மாத்யூ ஹேடன், லாங்கர் தொடக்கவீரர்களாக இருக்கும் போது, உங்களால் ஏன் விளையாட முடியாது" என்று நான் கூறினேன்.

" நான் இதுநாள்வரை 5 அல்லது 6ம் இடத்தில்தான் களமிறங்கி இருக்கிறேன். நான் ஆட்டமிழந்துவிட்டால் என்ன செய்வது" என்று சேவாக் மறுத்தார்.

அதற்கு "நீங்கள் மிடில்ஓர்டரில் களமிறங்கினால்கூட ஆட்டமிழக்கத் தான் போகிறீர்கள். நான் கடைசி வரிசையில் களமிறங்குகிறேன், நீங்கள் ஆட்டத்தைத் தொடங்குகள்" என்றேன். அதன்படி இங்கிலாந்து தொடரில் தொடக்கவீரராக களமிறங்கி சேவாக் சதம் அடித்தார்.

அதுமட்டுமல்லாமல், " நீங்கள் மிடில் ஓர்டரில் களமிறங்கினால், என்னுடன் சேர்ந்து ஒருபோதும் விளையாட முடியாது. போட்டியை வென்று கொடுக்கும் திறமை உங்களிடம் இருக்கிறது. அது மிடில் ஓர்டரில் களமிறங்கினால் வராது" என்ற சேவாக்கை ஆறுதல் படுத்தினேன்.

இதேபோன்றுதான் தோனியையும் நான் செதுக்கினேன். " 2004ம் ஆண்டு தோனி அறிமுகமாகும்போது, அவர் 7வது வரிசையில்தான் 2 போட்டிகளுக்கு களமிறங்கி ஆடினார். விசாகப்பட்டிணத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டம். தோனியின் திறமையான ஆட்டக்காரர் என்றெல்லாம் செய்திகளிலும், நாளேடுகளிலும் வந்திருந்தது. இதைப் படித்து தோனியின் திறமையை எப்படி வெளிக்கொணர்வது" என்று திட்டமிட்டேன்.

மறுநாள் காலை, எங்களுடைய பயிற்சி முடிந்தபின், பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் டாஸில் வென்று முதலில் ஆட தீர்மானித்தோம். ஓய்வறைக்கு திரும்பி துடுப்பாட்ட வரிசையை திடீரென்று மாற்றினேன். எனக்கு ரிசல்ட் மிக அருமையாகக் கிடைத்தது.

தோனி தான் 7வது வீரராகத்தான் களமிறங்கப்போகிறேன் என்று நினைத்துக்கொண்டு ஷோர்ட்ஸ் போட்டு அமைதியாக அமர்ந்திருந் தார். நான் உடனே "தோனி, நீங்கள் 3வது ஆட்டக்காரராக களமிறங்கப் போகிறீர்கள், தயாராகுங்கள்" என்றேன்.

உடனே தோனி, "அப்படியென்றால், நீங்கள் எந்தவரிசையில் விளையாடுவீர்கள்" என்று கேட்டார். அதற்கு "நான் 4வது வீரராக களமிறங்கிக்கொள்கிறேன் நீங்கள் தயாராகுங்கள்" என்று தோனியிடம் தெரிவித்தேன்.

அந்தப் போட்டியில் தோனி அடித்த 148 ரன்கள் மூலம் கிரிக்கெட் உலகம் அவரைத் திரும்பிப்பார்த்தது. இப்படித்தான் இந்த இரு வீரர்களின் திறமையையும் பட்டைத் தீட்டி உருவாக்கினேன் என கங்குலி தெரிவித்தார். ●



# இது உள்வீட்டு பிரச்சனை!

சிகப்புப் பந்து கிரிக்கெட்டே வேண்டாம் என்று ஒதுங்கிய அடில் ரஷீத்தை ஸ்பின்னுக்கு எதிராக பலம் மிகுந்த இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கு இங்கிலாந்தில் தேர்வு செய்யப்பட்டதையடுத்து எழுந்த கடும் விமர்சனங்களையெல்லாம் கவனிக்க வேண்டியதில்லையென்கிறார் அடில் ரஷீத். குறிப்பாக இங்கிலாந்து முன்னாள் கப்டன் மைக்கல் வோகனின் விமர்சனத்தை எதிர்த்துக் கடுமையாக பதிலடி கொடுத்துள்ளார்.

பிபிசி ஸ்போர்ட்டில் அடில் ரஷீத் கூறும்போது, "என்னவோ ஆ... ஊ.. என்று கத்துகிறார்கள். இது என்ன பெரிய விஷயமா? நான் ஓய்வு பெற்று விட்டேன் என்று கூறினேனா? சில பண்டிட்கள் அவ்வாறு எழுதினர் பேசினர். ஆனால் நாடு என்னை வேண்டுமென்று தேர்வு செய்யும்போது, இல்லையில்லை நான் வரமாட்டேன் என்று கூற முடியாது.

மைக்கல் வோகன் கருத்தெல்லாம் யாருக்குவேண்டும்? ஒருவருக்கும் அவர் கருத்தெல்லாம் ஒரு பொருட்டேயல்ல. நான் இந்த ஆண்டின் தொடக்கத்தில் சிகப்புப் பந்து கிரிக்கெட் ஆடமாட்டேன் என்றவுடன் அவர் ட்வீட் செய்தார். அவர் எப்போதும் சர்ச்சைக் கருத்துகளை வெளியிடுபவர். அப்போதும் முட்டாள்தனமாக எதையோ கூறினார்.

அவர் கூறுவதையெல்லாம் யாரும் ஆர்வமாகப் பார்ப்பதில்லை. அவர் எனக்கு எதிராக ஏதோ திட்டம்போட்டு செயல்படுகிறார் என்று நான் நினைக்கவில்லை. நான் அவர் கப்டன்சியில் ஆடியிருக்கிறேன். அவருடன் ஆடியிருக்கிறேன். [illegible] ஓய்வு பெற்ற சில [illegible] வீரர்களைப் பற்றி சில வேளைகளில் அர்த்தமற்ற முட்டாள்தனமான கருத்துகளை கூறுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

எதையும் உருப்படியாகக் கூற முடியாமல் அவருக்கே ஏற்பட்ட சோர்வில் இப்படியெல்லாம் கூறுகிறார். பண்டிட்கள் என் தேர்வை இழிவானது என்கின்றனர். ஆனால் இது என் தவறல்லவே.

யோர்க்ஷயர் அணி நிர்வாகம் என் மீது கோபமடைவதில் நியாயம் இருந்தாலும், 'நல்லது இங்கிலாந்து அணியில் தேர்வாகியிருக்கிறாய் வாழ்த்துக்கள்' என்று கூறுவதுதான் முறை. அவர்களுக்கு 4 நாள் போட்டி யில் ஆடவில்லை என்பதில் கோபம டைந்து பயனில்லை. நான் அணிக்காக 100% அர்ப்பணிக்கிறேன். நன்றாகச் [illegible] நன்றாகச் செல்லா [illegible] மகிழ்ச்சியே" என்று பொரிந்து தள்ளியுள்ளார் ரஷீத். ●



"சாமியார்கள் ஓம்சாந்தி... ஓம்சாந்தின்னுதானே சொல்லுவாங்க..?

இவர் என்ன 'ஆம் சாந்தி... ஆம் சாந்தி' ன்னு சொல்றார்?"

"சாமியார் ஆகிறதுக்கு முந்தி, மனைவிகிட்ட அப்படிச் சொல்லிச் சொல்லி அதே பழக்கமாயிடுச்சு..!"



"இந்தளவுக்கு பில் போட்டதைப் பார்த்து என்னால ஜீரணிக்கவே முடியல டாக்டர்"

"அதுக்குத்தான் இந்த மாத்திரை எழுதியிருக்கேன்!"

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நியூசிலாந்தில் இருக்கும் டன்னி மோசாய் என்பவர் மூலம், இஸ்ரேலின் இரகசிய அணுஆயுத விபரங்களை இங்கிலாந்து பத்திரிகை யொன்றிற்கு வழங்கியிருந்தார். இந்த விபரம் பத்திரிகையின் ஆசிரியர் மூலம் மொசாட் புலனாய்வு அமைப்பின் காதுக்கு வந்து சேர்கிறது. இதையடுத்து, யாரந்த மோசாய் என்பதை ஆராய தொடங்குகிறார்கள். இஸ்ரேலின் இரகசிய அணுஆயுத தொழிற்சாலையான டிமோனாவில் பணியாற்றிய ஒருவரின் பெயரும் டன்னி மோசாய்தான். இருவரும் ஒரு ஆள்தானா என்பதை மொசாட் ஆராய தொடங்கியது.

டிமோனா ஊழியர்கள் பற்றிய பைலை ஆராய்ந்தபோது, மோசாய் பணியிலிருந்து விலகுவதற்கு முன்னர் நியூசிலாந்திற்கு விடுமுறையில் சென்று வந்தது தெரிய வந்தது. அப்படியானால், இருவரும் ஒரு ஆளா? இந்த விடயத்தை கையாண்ட மொசாட்டின் துணை இயக்குனர் Shabtai Shavit இன் மூளையில் மின்னலடித்தது.

அடித்துக் கொண்டிருந்தது. நியூசிலாந்தும் இடதுசாரி கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் நாடாக மாற வேண்டுமென மார்ட்டின் எப்பொழுதும் சொல்லிக் கொள்வார்.

இந்த பழக்கத்தில் இடையிடையே மோசாயின் பண்ணைக்கும் சென்று வந்தார். மார்ட்டினுடன் நெருக்கமான பின்னர், மோசாய் தனது கடந்த காலத்தை பற்றி சொன்னார். இஸ்ரேலின் இரகசிய அணுஆயுத தொழிற்சாலையில் மோசாய் பணியாற்றியவர் என்ற தகவல் கிடைத்ததும், மார்ட்டின் அவ்வளவு உற்சாகமடைந்தவராக வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், மிக மிக முக்கியமான ஒருவரை அடையாளம் கண்டுவிட்டேன் என்ற தகவலை ஒக்லாண்டில் இருந்த இன்னொரு நபருக்கு அறிவித்தார்.

அவர் இறுதிவரை இஸ்ரேலாலோ, நியூசிலாந்தாலோ அடையாளம் காணப்படாத ஒருவர். லியோன் என்ற பெயரில்தான் மார்ட்டினிற்கு அவரை தெரியும். அவர் இலேசுப்பட்ட ஆள்

வழங்கப்பட்டது. மார்ட்டின் அதை பக்காவாக செய்தார்.

மார்ட்டின் ஒரு உள்ளூர் அரசியல் கட்சியுடன் நெருக்கமானவர், அதனால் சில அரசியல் தலைவர்களின் தொடர்புள்ளவர் என்பதை மோசாய் தெரிந்திருந்தார். அதனால் மார்ட்டின் உலகளவில் பிரச்சனையான பல விசயங்களையும் பேசிக்கொண்டிருப்பார். அரசியல் கட்சிக்காரன் என்றால் பலதையும் பேசுவார் என்று மோசாய் நினைத்தார். அணு ஆயுதம் பற்றி அவர் திரும்பதிரும்ப பேச தொடங்கிய போதும் அப்படித்தான் நினைத்தார்.

அப்போது உலகத்தில் ஆங்காங்கே சில அணுஉலை விபத்துக்கள் நடந்திருந்தன. அமெரிக்காவில் 80களின் தொடக்கத்தில் திரிமைல் தீவு அணுஉலை விபத்து நடந்திருந்தது. அணுஉலைகளிற்கு எதிரான போராட்டத்தை தமது கட்சி ஆரம்பிக்கப் போவதாக திரும்ப திரும்ப மார்ட்டின் கூறி வந்தார். அணுஉலைகளின் ஆபத்துக்கள், அதற்கு எதிரான

ஆலைக்கு எதிரானவர் என்றால் தன்னால் முடிந்ததை செய்வார். என்னை பாருங்கள். எனக்கு அணுஆலை பற்றி எதுவுமே தெரியாது. எங்கள் நாட்டில் அணுஆலையும் கிடையாது. ஆனால் போராடுகிறோம். அமெரிக்க அதிபர் உண்மையான அணுஆலை எதிர்ப்பாளர் என்றால், எங்களது போராட்டத்திற்கு ஆதரவு தரக்கூடாது. அப்படி தந்தாரென்றால் அவர் பொய்யர். அவர் செய்ய வேண்டியது அணு ஆலைகளை இழுத்து மூடுவதே. அதுபோல நீங்களும் உங்களால் முடிந்ததை செய்வதுதான் நியாயமானது"

"நான் என்ன செய்ய வேண்டும்?"

"உண்மையில் எனக்கு தெரியாது. அணுஆலையில் என்ன செய்தீர்கள் என்றும் தெரியாது. ஆனால் அமெரிக்க ஜனாதிபதி உதாரணத்தை மட்டும் சொல்லலாம்"

"நான் இஸ்ரேலின் அணுத்தொழில் நுட்பம் பற்றிய தகவல்களை லீக் பண்ண வேண்டுமென எதிர்பார்க்கிறீர்களா?"

# மொசட்டின் பக்கா பிளான்!

## மொசாட் செய்த "பேப்பர் ஒப்ரேஷன்" 03

எங்கள் நாட்டில் அணுஆலையும் கிடையாது. ஆனால் போராடுகிறோம். அமெரிக்க அதிபர் உண்மையான அணுஆலை எதிர்ப்பாளர் என்றால், எங்களது போராட்டத்திற்கு ஆதரவு தரக்கூடாது. அப்படி தந்தாரென்றால் அவர் பொய்யர். அவர் செய்ய வேண்டியது அணு ஆலைகளை இழுத்து மூடுவதே. அதுபோல நீங்களும் உங்களால் முடிந்ததை செய்வதுதான் நியாயமானது




இப்படி கடந்த வாரம் முடித்திருந்தோம்.

இந்த வாரம் நாம் நியூசிலாந்திற்கு போவோம். ஒக்லாண்ட் நகரத்தில் இன்னொரு நியூசிலாந்து நண்பருடன் கூட்டாக இணைந்து சிறிய பண்ணையொன்றை நடத்திக் கொண்டிருந்தார் டன்னி மோசாய்.

நண்பர்கள் இருவரும் பக்கத்திலுள்ள மதுச்சாலையொன்றிற்கு சென்ற வருவது வழக்கம். மது அருந்துமிடத்தில் மார்ட்டின் ஹென்ரிக்ஸ் என்ற ஒருவருடன் பழக்கமேற்பட்டது. மார்ட்டின் ஹென்ரிக்ஸ் உள்ளூர் இடதுசாரி அரசியல் கட்சியொன்றுடன் நெருக்கமாக இருந்தவர். அதனால்தீவிரமாக அரசியல் பேசுவார். மது அருந்தினால் இன்னும் தீவிரமாக அரசியல் பேசுவார். அந்த சமயத்தில் உலகளவில் இடதுசாரி அலையொன்று

அல்ல. கே.ஜி.பியின் ஏஜெண்ட்!

ரஷ்ய உளவு அமைப்பான கே.ஜி.பியின் ஏஜெண்டாக லியோன் என்ற பெயரில் நியூசிலாந்தில் அவர் தங்கியிருந்தார் என்ற பதிவுகள் மட்டுமே இன்றும் மொசாட் பதிவுகளில் இருக்கிறதே தவிர, அந்த லியோன் பற்றிய எந்த தகவலும் கிடைக்கவில்லை. கே.ஜி.பி இற்காக லியோன் உள்ளூரில் ஏற்படுத்தி வைத்திருந்த முகவர்களில் ஒருவர்தான் மார்ட்டின்.

மதுச்சாலையில் அறிமுகமான மோசாய் இலேசான ஆள் அல்ல, இஸ்ரேலின் இரகசிய அணுத் திட்டத்தில் பணியாற்றிய ஆள் என்ற விபரம் லியோனிற்கு சென்றது. மோசாயை வளைத்து தகவல்களை எப்படியாவது கறந்துவிடும்படி மார்ட்டினுக்கு அசைன்மெண்ட்

போராட்டத்தில் பாவிக்கவுள்ள சுலோகங்கள் என திரும்பதிரும்ப ஒரேபுள்ளியில் மார்ட்டின் சுற்றிக் கொண்டிருந்தார். மோசாயை தன்னை நோக்கி இழுக்கவே இந்த உத்தியை பாவித்தார்.

அவரது திட்டம் பலித்தது. ஒரு கட்டத்தில் அணுஉலை பாதிப்புக்களை பற்றி மோசாய் வாய் திறந்தார். அணுஉலைகள் இருப்பதால் உலகத்திற்கே ஆபத்தானது என்றார்.

"அட ஆச்சரியமாக இருக்கிறதே... அணுஆலையில் வேலைசெய்தவரே இப்படி சொல்கிறீர்களே... ஆச்சரியம் தான்"

"அதன் பாதிப்புக்கள் தெரிந்ததால் தான் அங்கு வேலை செய்ய விரும்பாமல் விலகினேன்"

"இது உங்களை நீங்களே சமாதானப் படுத்த சொல்லும் சமாதானம். அணு

"என்ன... இஸ்ரேல் அணுத்தொழில் நுட்பம் பற்றி உங்களிற்கு தெரியுமா?" ஆச்சரியமாக கேட்டார் மார்ட்டின்.

"ம்... என்னிடமும் கொஞ்சம் தகவல்கள் உள்ளன. இஸ்ரேலின் அணுஆயுத தயாரிப்பு பற்றி"


"இஸ்ரேல் அணுஆயுதம் தயாரிக்கிறதா? என்னால் நம்பவே முடியவில்லையே"


"ம்... தயாரிக்கிறார்கள். ஆனால் அந்த தகவல்களை லீக் செய்ய முடியாது. என்னை உயிரோடு விட்டு வைக்கமாட்டார்கள்"

"இதோ பாருங்கள் மிஸ்டர் மோசாய்... இது மிகமிக முக்கியமான விசயம். இஸ்ரேல் இரகசியமாக அணுஆயுதம் தயாரிக்கிறது, அதற்கான ஏதாவது ஆதாரம் உங்களிடம் இருக்கிறது என்றால்... ஒக்லாண்ட் நகர

தொடர்ச்சி 18-ம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## உதவிக்கு வரும் உயிரியல் - 11

# விளைச்சலை அதிகரிக்கும் 'ஆம்'!

முனைவர் அ.உதயகுமார்

இந்த உலகம், மனிதர்களுக்கு மட்டுமானதல்ல; கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் உள்படக் கோடிக்கணக்கான உயிர்களுக்கும் உறைவிடம். நாம்தான், உலகை ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறோம் என எண்ணிக் கொண்டிருக்கிறான் மனிதன். ஆனால், உண்மையில் உலகை ஆட்டிவைப்பவை பூச்சிகளும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்களும்தாம். நுண்ணுயிர்கள் என்றாலே மனிதனுக்கு எதிரானவை என்ற பொதுவான எண்ணம் உண்டு. உண்மையில் அப்படியில்லை. தனது அனைத்துப் படைப்பிலும் இரண்டு வாசல்களை வைத்தே இருக்கிறது இயற்கை. ஒரு வாசல் அடைத்தால், இன்னொருவாசல் திறக்கும். அதன்படி, தீமை செய்யும் நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்த, சில நன்மை செய்யும் நுண்ணுயிர்களையும் படைத்துள்ளது. அப்படிப்பட்ட நுண்ணுயிர்களைப் பற்றிய புரிதலே இந்தத் தொடர்.

கடந்த இதழில் நான் சொல்லியிருந்த பயோ என்.பி.கே பற்றி, ஏராளமான வாசகர்கள் சந்தேகங்களைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அப்படிக் கேட்டவர்கள் அனைவருக்குமாக இந்த இதழிலும் சில விஷயங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

பயோ என்.பி.கே திரவம் பயிர்களுக்கு மட்டுமானதல்ல. அதைக் கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றுக்கும் பயன்படுத்தலாம். கால்நடைகளுக்குக் கொடுக்கும் தவிடு, பிண்ணாக்கு போன்ற அடர் தீவனங்களில் பயோ என்.பி.கே திரவத்தைக் (ஒரு மாட்டுக்கான தீவனத்தில் 250 மில்லி என்ற விகிதத்தில்) கலந்து பிசைந்து கொடுக்கும்போது... ஆடு மாடுகளின் உணவுக்குழாய் மற்றும் உள்ளுறுப்புகளில் நுண்ணுயிர்கள் அதிகமாகப் பெருகும். இதனால் இரைப்பை, குடல் ஆகிய உறுப்புகளில் செரிமானம் தொடர்பாக நடைபெறும் செயல்கள் எளிதாகும்.

நூறு கிலோ தீவனத்துக்கு ஒரு லிட்டர் பயோ என்.பி.கே எனக் கலந்து மீன் வளர்ப்பில் பயன்படுத்தும்போது நீரின் கார அமிலத்தன்மை மாறும். குளங்களின் தரைப்பகுதியில் உள்ள தாவரங்கள் சிறப்பாக வளரும். கோழிகளுக்கு ஒரு லிட்டர் நீரில் 10 மில்லி என்ற அளவில் கலந்து குடிநீராகக் கொடுக்கலாம்.

இதைத்தவிர, பெரிய தொழிற்சாலைகளில் கழிவுநீரைச் சுத்தப்படுத்தவும் பயோ என்.பி.கே திரவத்தைப் பயன்படுத்த முடியும். சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் சாக்கடைகள், கழிவுநீர் குட்டைகளிலும் இதைக் கலந்தால், துர்நாற்றம் குறையும். தொழிற்சாலைக் கழிவுநீரில் இதைக் கலந்து மறுசுழற்சி செய்ய முடியும். குப்பைமேடுகள், சாக்கடை உள்ள இடங்களில் இதைப் பயன்படுத்தி, துர்நாற்றத்தைக் குறைக்கமுடியும்.

அதையெல்லாம்விட முக்கியமாக பயோ என்.பி.கே திரவத்தைப் பயன்படுத்தி விதைநேர்த்தி செய்யலாம். கடினத்தன்மையுள்ள விதைகளை இதில் ஊறவைத்து விதைத்தால், முளைப்புத்திறன் அதிகரிக்கும்.



நாற்றுகளின் வேர்களை இதில் நனைத்தும் நடவுசெய்யலாம்.

### விளைச்சலை அதிகரிக்கும் 'ஆம்'

அடுத்ததாக நாம் தெரிந்துகொள்ள வேண்டிய நுண்ணுயிர் 'ஆம்'. இது ஒரு பூஞ்சணம். 'ஆர்பஸ்குலர் மைக் கோரைஸா' (AM-Arbuscular Mycorrhiza) என்ற பெயரின் சுருக்கம்தான் 'ஆம்'. ஏற்கெனவே பயன்பாட்டில் இருக்கும் 'வேம்' என்ற பூஞ்சணத்தின் நவீனப் பதிப்பு. இதை வேர்களின் தாய் என்றும் அழைக்கிறார்கள்.

இதை விவசாயிகளே உற்பத்தி செய்து கொள்ள முடியும் என்றாலும், தற்போதைய சூழலில் அதற்கான வாய்ப்புக் குறைவு. இது தானியப் பயிர்களின் வேர்களில் தானாகவே வளரக்கூடிய ஒரு வகைக் காளான். தாவரங்களின் வேரில் தனது உடலைச் செலுத்தி உயிர் வாழக்கூடியது. 90 சதவிகித தாவரங்களில் இந்தப் பூஞ்சணம் இயற்கையாகவே உற்பத்தியாகிறது.

உதாரணமாக மக்காச்சோளம், கோதுமை, சோளம், கம்பு போன்ற தானியப்பயிர்களின் வேர்களில் அதிகளவு இருக்கும். இவற்றின் வேர்களிலிருந்து, இந்தப் பூஞ் சணத்தைப் பிரித்தெடுத்துதான் விற்பனை செய்கிறார்கள்.

ஒரு லிட்டர் தண்ணீரில் இரண்டு கிராம் 'ஆம்' பூஞ்சணத்தைக் கலந்து... அதில் விதைகளை ஊறவைத்து நடுவதன்மூலம் முளைப்புத்திறன் அதிகரிக்கும். விளைச்சல் மூன்று முதல் நான்கு மடங்கு அதிகரிக்கும். வறட்சியான காலங்களில் தாவரங்கள் தாக்குப்பிடித்து வளர இது உதவியாக இருக்கும். வளர்ந்த நாடுகள், இதைப் பல ஆண்டுகளாகப் பயன்படுத்திவருகின்றன. நாம் இப்போதுதான் பயன்படுத்தத் தொடங்கியுள்ளோம். இந்தப் பூஞ் சணம் மண்ணில் உள்ள பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் சத்துகளைத் தாவரங்கள் எடுத்துக்கொள்ளும் வகையில் சிதைத்துக் கொடுப்பதில் பெரும் பங்காற்றுகின்றன.

### வறட்சி தாங்க உதவும் பி.பி.எஃப்.எம்

தற்போது நிலவும் வரலாறு காணாத வறட்சியில் விவசாயிகள் சிக்கித் தவிக்கிறார்கள். விளைந்து நிற்கும் பயிர் வறட்சியில் வாடுவதைப் பார்க்கும்போதெல்லாம், ஒவ்வொரு விவசாயிக்கும் தானாகவே கண்ணீர் வரும். இப்படிப்பட்ட வறட்சியைப் பயிர்கள் ஓரளவு தாக்குப்பிடிக்க உதவும் வகையில்... கடந்த ஆண்டு இந்தியாவின் கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியது

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

### அது தானாகவே உருவாகிவிடும்!

"கடந்த இதழில் பயோ எ.ன்.பி.கே தயாரிப்பில் ரோடோ சூடோமோனஸ், உப்பு மற்றும் ஏ.எல்.ஏ என்சைம் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும் என வெளிவந்திருந்தது. அதில் ஒரு திருத்தம். ஏ.எல்.ஏ என்பது ரோடோ சூடோமோனஸ் வினைபுரியும்போது உருவாகும் ஒருவகையான என்சைம். அது தானாகவே அதில் உருவாகிவிடும். அதனால், பயோ என்.பி.கே தயாரிக்க 42 கிராம் ரோடோ சூடோமோனஸ், 40 கிராம் உப்பு மட்டுமே போதுமானவை."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி தரும் சந்திப்புகளை நிகழ்த்தும் கலை!




பிஸ்னஸில் வெற்றியடைய, நுகர்வோர் சந்தையைப் பிடிக்க மார்க்கெட்டிங் மற்றும் விளம்பர உத்திகளைக் கையாள்வது அவசியம் என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால், பிஸ்னஸ் டீலிங் என்பது நுகர்வோர் சந்தையை அணுகும் விதத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. எனவே, அதுபற்றிப் பார்ப்போம்.

உங்கள் தொழிலுக்கு வெற்றியைத் தேடித்தரும் சந்திப்புகளை நிகழ்த்திக் காட்டுவது அவசியம். அத்தகைய சந்திப்புகளை நிகழ்த்துவது ஒரு கலை. சந்திப்புகளைத் திட்டமிடும் முன் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**சந்திப்புகளுக்கு உகந்த நாள் எது?**

பிஸ்னஸில்சந்திப்புகள்என்பவைமிக முக்கியமானவை. ஆனால், முக்கியம் என்பதற்காக எல்லா நாள்களிலும் சந்திப்புகளைத் திட்டமிட்டுவிடக் கூடாது. தொழில் தொடர்பான சந்திப்புகளைத் திட்டமிடுவதற்கு உகந்த நாள்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவை எந்த நாள்கள்?

வாரத்தின் ஏழு நாள்களில் விடுமுறை நாள் என்று ஒன்று இருக்கிறது. அது பொதுவாக ஞாயிற்றுக்கிழமையாக இருக்கும். விடுமுறை நாள்களை ஓய்வுக்கும் குடும்பத்தோடு நேரத்தைப் பகிர்வதற்கும் பயன்படுத்தவே எல்லோரும் விரும்புவார்கள். அந்த நாள்களில் சந்திப்புகளைத் தவிர்க்க வேண்டும். (நீங்கள் சந்திக்கும் நபருக்கு விடுமுறை வேறொரு நாள் எனில், அந்த நாளிலும் சந்திப்பைத் திட்டமிட வேண்டாம்)

மேலும், சர்வதேச அளவில் றிணீஹ் ஞிணீஹ் என்று ஒரு நாள் உள்ளது. அந்த நாளில்தான் எல்லோருக்கும் தலைக்கு மேல் டென்ஷன் இருக்கும். எனவே, சம்பள நாளன்றும் சந்திப்பைத் தவிர்ப்பதே சரி.

யாருக்குமே பிடிக்காத ஒருநாள் இருக்கிறது. அது, வாரத்தின் முதல் நாளான திங்கட்கிழமை. இந்த நாளில் பலருக்கும் உற்சாகமான மனநிலை இருக்காது. எனவே, திங்களன்றும் முக்கிய மான பிஸ்னஸ் சந்திப்புகளைத் திட்டமிட வேண்டாம்.

வெள்ளி மற்றும் சனி ஆகிய இரு தினங்களில்தான் எல்லோரும் உற்சாகமாகச் செயல்படுவார்கள். அந்த தினங்களில்தான் பிஸ்னஸும் நன்றாக இருக்கும். எல்லோரும் பிசியாகவே இருக்கும் இந்த இரு தினங்களிலும் சந்திப்புகளைத் திட்டமிட வேண்டாம். அப்படியென்றால் எந்த நாள்கள்தான் சந்திப்புக்கு உகந்தவை? மீதமுள்ள செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய மூன்று நாள்களும் சந்திப்புகளை நிகழ்த்த உகந்த நாள்களே.

**சந்திப்புகளுக்குமுன் செய்ய வேண்டியவை?**

பிஸ்னஸ் தொடர்பாக ஒருவரைச் சந்திக்கப் போகும்முன் அந்த நபரிடம் அவரைச் சந்திப்பதற்கான ஒப்புதல் (Appointment) பெற்றுவிட வேண்டும். சந்திக்கும் நாள், நேரம் மற்றும் இடம் ஆகியவற்றைத் தெளிவாகக் கேட்டறிந்துகொள்ள வேண்டும். இவற்றைத் தீர்மானிப்பவர்கள் நீங்களாக இருந்தால் சந்திக்கவிருக்கும் நபருக்கு ஏற்றவாறு இடத்தையும், நேரத்தையும் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

மேலும், உங்கள் பிஸ்னஸ் தொடர்பான விளக்கங்களை நீங்கள் அவருக்குக் கொடுக்கும் வகையில் உங்கள் பொருள்களின் புரோஷர்களையும், பிரசன்டேஷன் இருந்தால் பிரசன்டேஷன் ஃபைல் அடங்கிய கணினி, டப்லெட் போன்ற சாதனங்களையும் தயாராக வைத்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக, ஏற்றுமதி செய்யவிருக்கும் உங்களுடைய பொருளின் சாம்பிள் உங்களுடைய கையில் இருக்க வேண்டும். குறிப்பாக, நீங்கள் சந்திக்கவிருக்கும் நபர் உங்களிடம் என்னவெல்லாம் கேட்க வாய்ப்புள்ளதோ, அவற்றையெல்லாம் தயாராகவைத்துக்கொள்வது அவசியம்.

**வெற்றிகரமான சந்திப்புகளைச் சாத்தியமாக்குங்கள்**

ஒருவரைச் சந்திக்கும்முன் அவருடைய கலாசாரத்தையும், மொழியையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். அவருடைய மொழியில் பேச முடிந்தால் வேலை சுலபம். இல்லாவிட்டால் இருவருக்கும் தெரிந்த ஒரு பொதுமொழியைப் பயன்படுத்த வேண்டும். அவர்களின் கலாசாரத்தை நீங்கள் அறிந்து வைத்திருந்தால் அவர்களை நீங்கள் கையாள்வது சுலபமாக இருக்கும். ஏனெனில், ஏற்றுமதி என்பது சர்வதேச பிஸ்னஸ். ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு கலாசாரம் இருக்கும். அந்தக் கலாசார முறையில் அவர்களை வரவேற்பது, உபசரிப்பது அவர்களை மேலும் உங்களுடன் நெருக்கமாக்கும்.

நமது தோற்றமும் மிகவும் முக்கியம். ஏனெனில் நம்முடன் அமர்ந்து நாம் பேசுவதை அவர்கள் கேட்டால்தான் நமக்கு பிஸ்னஸ் கிடைக்கும். அது தோல்வியடைவதற்கு நம்முடைய தோற்றம் காரணமாகிவிடக் கூடாது. அதற்கு நம்முடைய ட்ரெஸ்கோடில் கவனம் தேவை. நம்முடைய உடலுக்கேற்ற உடைகளைத் தேர்ந்தெடுத்து அணிவது அவசியமாகும். உறுதியாகவும், தெளிவாகவும் மற்றும் துணிவுடனும் பேசுங்கள். அந்தச் சந்திப்பை வெற்றியடைய செய்வதற்கான அத்தனை வாய்ப்புகளையும் பயன்படுத்துங்கள். லாபத்தில் சற்று சமரசம் செய்துகொள்வதில்கூட தவறில்லை.

மேலும், வெளிநாடுகளுக்கு பிஸ்னஸ் தொடர்பான சந்திப்புகளுக்குச் செல்லும்போது சந்திப்புகளுக்கு முன்னரும், பின்னரும் இருக்கும் நேரத்தில் அந்த நாட்டிலுள்ள முக்கிய மான சந்தைகளுக்குச் சென்று சுற்றிப் பாருங்கள். அந்தச் சந்தைகள் புதிய பிஸ்னஸுக்கான வாசலை உங்களுக்குத் திறந்துவிட வாய்ப்பிருக்கிறது.

உதாரணமாக, சிங்கப்பூரில் அனைத்து பொருள்களுக்குமான பொது சந்தையாக விளங்கும் லிட்டில் இந்தியா, காய்கறி, பழங்கள் போன்ற அக்ரோ பொருள்களுக்கான சந்தை பாசிர் பஞ்ஜாங் மற்றும் நறுமணப்பொருள்களுக்கான சந்தை ஹொங்கொங் ஸ்ட்ரீட் ஆகியவை. **(ஜெயிப்போம்)**

---

'பி.பி.எஃப்.எம் பக்டீரியா' (PPFM-Pink Pigmented Facultative Methylotrophic bacteria).

இது பயிர்கள் முழுமையாக வறட்சியைத் தாங்கும் ஆற்றலைக் கொடுக்காது. ஆனால், இதை மாதம் ஒருமுறை தெளித்துவந்தால்... பத்து, பதினைந்து நாள்கள் வரை செடிகளை வாடவிடாமல் பாதுகாக்கும். சமதளப் பரப்புகளில் உள்ள நிலங்களிலிருந்து வெளியேறும் கார்பன், குளுக்கோஸ் மற்றும் சில அமினோ அமிலங்களைப் பயன்படுத்தி வளர்கிறது. பொதுவாக, இலைகளின் மேல்பரப்பில் இவை வளரும். காலை நேரங்களில் பயிர்களின் இலைமீது பனி படர்ந்ததுபோல், ஈரத்தன்மை இருக்கும் அல்லவா... அதற்குக் காரணம் இலைத்துளைகள் வழியாக செடியிலிருந்து கார்பன் உள்ளிட்ட சில பொருள்கள் வெளியேறுவதுதான். இலைகளின் மேல்பரப்பில் இருக்கும் மெத்தனால் பக்டீரியா, அப்படி வெளியேறும் கார்பனை உணவாக எடுத்துக்கொள்கிறது.

தற்போது திரவ வடிவில் இந்த பி.பி.எஃப்.எம் பக்டீரியா கிடைக்கிறது. அதை வாங்கி அதிகாலை மற்றும் மாலை வேளைகளில், பயிர்களின் இலைகளில் படுமாறு தெளிக்கலாம். ஒரு ஏக்கர் நிலத்துக்கு 200 லிட்டர் தண்ணீரில் 200 மில்லி பி.பி.எஃப்.எம் கலந்து தெளிக்க வேண்டும். இது இலைகளின் மேற்பரப்பில் பெருகிச் செடிகளை வாடாமல் இருக்க வைக்கும்.

இதை விதைநேர்த்திக்கும் பயன்படுத்தலாம். ஒரு லிட்டர் தண்ணீரில் 10 மில்லி என்ற அளவில் கலந்து விதைநேர்த்தி செய்யலாம். இதனால், முளைப்புத்திறன் அதிகமாகும். இலைகளின் பரப்பில் குளோரோபில் அளவு அதிகரிக்கும். வழக்கத்தைவிட சீக்கிரம் பூ எடுக்கும். காய் மற்றும் பழங்களின் நிறம், சுவை, தரம் ஆகியவை அதிகரிக்கும். வழக்கமான மகசூலைவிட பத்து சதவிகித அளவு மகசூல் அதிகரிக்கும். இதை, அனைத்துப் பயிர்களிலும் பயன்படுத்தலாம். ரசாயனப் பூச்சிக் கொல்லிகளுடன் இதைக் கலக்கக் கூடாது.

பரவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உடைமாற்றும் அறைக்குள் நுழைந்தார் டைரக்டர்!

விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் பொன்மகள் வந்தாள் சீரியல் 100 எபிசோட்களை கடந்து விட்டது. இந்த சீரியலின் நாயகி புதுமுகம் ஆயிஷா. கேரளாவை சேர்ந்தவர். திடீரென சீரியலில் இருந்து விலகி விட்டார். காரணத்தை கேட்டோம். "சென்னைக்கு படிக்க வந்தபோதுதான் இந்த வாய்ப்பு வந்தது. ஆனால் அடிக்கடி இயக்குனர்கள் மாறிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது மூன்றாவதாக நம்பிராஜா வந்திருக்கிறார். மற்ற ஆர்ட்டிஸ்டுக்களுக்கு கொடுக்கும் மரியாதைகூட எனக்கு கொடுப்பதில்லை. ஒருநாள் மணக்கோலத்தில் நடிக்கும் காட்சி. அதற்காக நிறைய அலங்காரம், மருதாணி வைக்கிறதென நேரம் எடுத்தது. நான் அறைக்குள் ரெடியாகிக் கொண்டிருந்தபோது, இயக்குனர் திடீரென உள்ளே வந்து கத்த ஆரம்பித்தார். நான் பாதி கட்டின சேலையோடு நின்றேன். என்ன செய்வதென்றே தெரியவில்லை. அன்று பயங்கரமாக அழுதேன். அதையும் சமாளித்துக் கொண்டு ஒன்றரை மாதம் நடித்தேன். திடீரென விஜய் டிவியிலிருந்து அழைத்து, இயக்குனர்புரெடியூசர் தரப்பிலிருந்து பயங்கர அழுத்தம், அதனால் உங்களை நீக்குகிறோம் என்றார்கள். எந்த தப்பும் செய்யாத என்னை ஏன் நீக்கினார்கள் என தெரியவில்லை" என்றார்.



## பிரியங்கா தற்கொலை

சின்னத்திரை நடிகைகளின் தற்கொலை பட்டியலில் புதிதாக இணைந்த பெயர் பிரியங்கா. வம்சம் சீரியலில் ஜோதிகா என்ற பெயரில் அசத்தியவர். தன்னுடைய வீட்டில் தூக்குமாட்டி தற்கொலை செய்துள்ளார். ஜீ தமிழ், வேந்தர் டிவி, சன் டிவியில் வீஜே ஆகவும் பணியாற்றியவர். அவருக்கும் கணவருக்கும் சில காலமாக பிரச்சனை இருந்து வந்ததாக சொல்லப்படுகிறது. என்றாலும் செட்டில் அதை காட்டிக் கொண்டதில்லையாம். கடந்த மாதம்தான் புதிதாக ஒரு ப்யூட்டி பார்லர் திறந்தாராம். ஏன் இப்படியொரு முடிவையெடுத்தார் என சின்னத்திரை உலகம் கவலையில் ஆழ்ந்துள்ளது.



## றெக்க கட்டி பறக்குது மனசு குழப்பம் ஏன்?

றெக்க கட்டி பறக்குது மனசு சீரியலில் வில்லியாக அதகளம் செய்து கொண்டிருந்தவர் வந்தனா. திடீரென சீரியலிலிருந்து வெளியேறினார். அந்த இடத்திற்கு நிஷா வந்திருக்கிறார். வந்தனாவின் வெளியேற்றத்திற்கு என்ன காரணம்?. அவரிடமே பேசினோம் "கல்யாணம் முதல் காதல் வரை சீரியலில் என் நெகடிவ் ரோலுக்கு நல்ல ரீச். அதை பார்த்திட்டு றெக்க கட்டி பறக்குது மனசு சீரியலுக்கு கூப்பிட்டாங்க. எந்த சீரியல்ல கமிட் ஆனாலும் ஆரம்பத்திலேயே என்னோட தேவைகளை கிளீயரா சொல்லிடுவேன். இந்த சீரியல் கமிட் ஆனப்போவும் எல்லாம் பேசினதுதான். ஆனா, சீரியல் தொடங்கிய சில மாதங்களிலேயே பேமெண்ட், ஷூட்டிங் டைம் தொடர்பாக எனக்கு சில சங்கடங்கள் நேர்ந்தன. அவை, தானாகவே சில நாள்கள்ல சரியாகும்னு நினைச்சேன். புரொடக்‌ஷன் சைடுல என் பிரச்னைகளைச் சொன்னேன். ஆனா, சங்கடங்கள் சரியாகுற மாதிரியே தெரியலை. குறைந்தபட்சம் என் நியாயமான கோரிக்கையை காதுகொடுத்துக் கேட்கக்கூட யாரும் தயாரா இல்லைங்கிறதை போகப்போக புரிஞ்சுக்கிட்டேன். ஷூட்டிங் நடக்குறதே மாசத்துல பாதி நாள்தான். அந்த உழைப்புக்கான ஊதியமும் சரியான நேரத்துக்குக் கிடைக்காமப்போனா, என்ன சொல்றது? சம்பளத்தை கேட்டா, எரிச்சலாகி 'இவருக்குப் பதில் இவர்'னு அவங்களாகவே ஆளை மாத்தக்கூட செஞ்சிருப்பாங்க. அதனாலதான், முந்திக்கிட்டு நானே வெளியேறிட்டேன்." என்கிறார், வந்தனா. 'றெக்க கட்டிப் பறக்குது மனசு' தொடரின் ஹீரோயின் சமீராதான், தொடரின் தயாரிப்பாளரும்கூட! 'பகல் நிலவு' தொடரில் நடித்த நிஜ காதல் ஜோடியான அன்வர் சமீரா இருவரும் ஆளுக்கொரு தயாரிப்பு நிறுவனம் தொடங்கி, ஆளுக்கொரு சீரியலைத் தயாரித்து வருகிற நிலையில், (வேறு வேறு சேனலில்) மேற்படி இரண்டு நிறுவனங்களின் மீதும் தொடர்ந்து புகார்கள் எழுந்து வருவது குறிப்பிடத்தக்கது.



மாளவிகா

# சின்னத்திரை



### பிரபாஸின் செண்டிமெண்ட்

பிரபாஸின் கரியரில் ராஜமவுலியின் பாகுபலி படங்கள் மிக முக்கியமானவை. இந்த படங்கள் இந்தியா மட்டுமின்றி பல்வேறு உலக நாடுகளிலும் வெளியிடப்பட்டு வசூலை குவித்தது. தற்போது சாஹோ என்ற படத்தில் நடித்து வருகிறார் பிரபாஸ். இந்த படத்தை சுஜீத் இயக்க, ஸ்ரத்தா கபூர் நாயகியாக நடிக்கிறார். தற்போது இறுதிகட்ட படப்பிடிப்பு நடந்து வருகிறது. பிரபாஸின் பாகுபலி 2 படம் 2017ம் ஆண்டு ஏப்ரல் 28ம் திகதி வெளியானது. அதேபோல், சாஹோ படத்தையும் 2019ம் ஆண்டு ஏப்ரல் 28ம் திகதி வெளியிட திட்டமிட்டுள்ளனர்.

## டாப்ஸி இரகசிய திருமணம்?

நடிகை டாப்ஸி ஒலிம்பிக்கில் வெள்ளி பதக்கம் வென்ற பட்மின்டன் வீரர் மேதிஸ் போ, மற்றொரு வீரர் தனிஷ் ஆகியோரிடம் நெருக்கமாக அவர் பழகி வந்தார். இந்நிலையில் டாப்ஸிக்கும், மேதிஸுக்கும் ரகசிய நிச்சயதார்த்தம் நடந்திருப்பதாக இணைய தளங்களில் தகவல் பரவிவருகிறது. சமீபத்தில் குடும்பத்தினருடன் கோவா சென்றார் டாப்ஸி. அங்கு மேதிஸும் வந்திருந்தார். எளிமையாக நடந்த விழாவில் குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் நிச்சயதார்த்தம் நடந்ததாக கூறப்படுகிறது. நட்புடன் பழகி வந்த டாப்ஸியும், மேதிஸும் சமீபகாலமாக ஒருவரையொருவர் சந்திக்காமல் தவிர்த்து வந்ததாக சொல்லப்பட்டு வந்த நிலையில் இருவரும் சமீபத்தில் கோவாவுக்கு குடும்பத்தினருடன் வந்திருந்தனர். ரகசியமாக நடந்த நிச்சயதார்த்த விழாவில் பங்கேற்கவே இவர்கள் வந்திருந்தார்களாம்.

## பாம்பு வளர்க்கும் மாஜி ஹீரோயின்!

சுஷ்மிதா சென் தெய்வபக்தி நிறைந்தவர். இந்தி படப்பிடிப்பு ஒன்றில் பங்கேற்றிருந்தபோது அங்கு ஒரு மலைப்பாம்பு புகுந்து சீறியது. அதைக்கண்டு படக்குழுவினர் பயந்ததுடன் அடிக்க பாய்ந்தனர். உடனே சுஷ்மிதா அவர்களை தடுத்தார். பாம்பு தெய்வத்தின் வடிவம் என்று கூறியவர் அதன்முன் அமர்ந்து சில மந்திரங்கள் உச்சரித்தார். பின்னர் அந்த பாம்பை தனது வீட்டுக்கு கொண்டு சென்று வளர்க்க ஆரம்பித்தார். அதை தினமும் கும்பிட்டும் வந்தார். வீட்டில் காட்டு விலங்குகள் வளர்க்கக்கூடாது என்று ஏற்கனவே தடை உத்தரவு இருக்கும் நிலையில் சுஷ்மிதா பாம்பு வளர்க்கும் தகவல் ஆங்கில இதழ்களில் வெளிவந்ததையடுத்து அவர் பாம்பு வளர்ப்பதற்கு ஆட்சேபனைகள் எழுந்தது. ஆனால் அந்த பாம்பை இன்னமும் தனது வீட்டில் அவர் வளர்த்து வருகிறாரா என்பதற்கு அவரது தரப்பிலிருந்து பதில் எதுவும் வரவில்லை.

## வடிவேலு- சிங்கமுத்து சமரசம்!

வடிவேலுவின் காமெடி டீமில் இருந்தவர் நடிகர் சிங்கமுத்து. தற்போது தனியாக நடித்து வருகிறார். வடிவேலுவிடம் இருந்தபோது அவருக்கு பல சொத்துக்களை வாங்கிக் கொடுத்தார் சிங்கமுத்து. அவர் வாங்கிக் கொடுத்த நிலம் ஒன்றின் காரணமாக வடிவேலுக்கும், சிங்கமுத்துக்கும் பிரச்சினை ஏற்பட்டு பிரிந்தனர். ஒருவரை ஒருவர் கடுமையாக விமர்சனம் செய்தனர். ராமச்சந்திரன் என்பவர் தனது 34 செண்ட் நிலத்தை தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தில் அடமானம் வைத்து கடன் பெற்றிருந்தார். கடனை திருப்பிச் செலுத்தாததால் நிலம் ஏலத்துக்கு வந்தது. அதனை பழனியப்பன் என்பவர் ஏலத்தில் எடுத்தார். பழனியப்பன் வசம் நிலம் இருக்கும்போதே உரிமையாளர் ராமச்சந்திரன் இறந்த பிறகு அவரது உறவினர்கள், அந்த இடத்தை விற்கும் உரிமத்தை நடிகர் சிங்கமுத்துக்கு வழங்கினர். அவர் அதனை வடிவேலுக்கு விற்றார். இதனால் நிலத்தை ஏலம் எடுத்த பழனியப்பன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வடிவேலுவும் போலி ஆவணங்களை காட்டி தன்னிடம் நிலத்தை விற்றதாக கூறி 3 கோடி நஷ்டஈடு கேட்டு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு 26ம் திகதி மீண்டும் விசாரணைக்கு வந்தது. வடிவேலுவும், பழனியப்பனும் ஆஜர் ஆனார்கள். நிலப் பிரச்சினையில் தாங்களே பேசி சமரசம் செய்து கொண்டதாகவும், இருதரப்பும் வழக்கை வாபஸ் பெறுவதாகவும் தெரிவித்தனர். இதனால் வழக்கை முடித்து வைத்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணத் திரை



## அவசரப்படாத அனு!

விஷால் ஜோடியாக துப்பறிவாளன் படத்தில் நடித்திருப்பவர் அனு இமானுவேல். கைவசம் அதிக படங்கள் இல்லாத நிலையிலும் வரும் பட வாய்ப்புகளை தேர்வு செய்தே ஒப்புக்கொள்கிறார். இதுபற்றி அவர் கூறும்போது, 'எனக்கு பட வாய்ப்புகள் அதிகம் வருவதில்லையா என்கின்றனர். பட வாய்ப்புகள் வருகிறது. ஆனால் நல்ல வாய்ப்புகள் வராததால் ஒப்புக்கொள்ள மறுத்துவிடுகிறேன். நடிப்பில் முன்னேற வேண்டும், சிறந்த நடிப்பை வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் நிறைய இருக்கிறது. அதற்காக அவசரப்படவில்லை. ஒரே நேரத்தில் 4 படம், 5 படம் ஒப்புக்கொண்டு சீக்கிரமே காணாமல்போய்விட விரும்பவில்லை. ஒன்றிரண்டு படங்களில் நடித்தாலும் அது பெயர் சொல்லும் படமாக இருக்க வேண்டும். அதுதான் திரையுலகில் என்னை நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கச் செய்யும். சிலர் ஒரு நேரத்தில் ஒரு படம் மட்டுமே நடிக்க ஒப்புக்கொள்கின்றனர். அதுபோல் நானும் ஒரு நேரத்தில் ஒரு படம் மட்டுமே ஒப்புக்கொள்ள முடிவு செய்திருக்கிறேன். நாக சைதன்யா படமொன்றில் தற்போது நடிக்க ஒப்புக்கொண்டிருக் கிறேன். இதில் காழ்ப்புணர்ச்சி கொண்ட கதாபாத்திரம் ஏற்றிருக்கிறேன். இவ்வாறு அனு இமானுவேல் கூறினார்.

## இந்திக்கு போகும் அமலா பால்

தமிழ், தெலுங்கு, மலையாள படங்களுக்கு பிறகு பாலிவுட்டில் அறிமுகம் ஆகிறார் அமலா பால். இதற்கு முன் இந்தி படங்களில் நடிக்க அவருக்கு வாய்ப்புகள் வந்தது. ஆனால் அவர் நடிக்கவில்லை. இப்போது முதல்முறையாக நரேஷ் மல்ஹோத்ரா இயக்கத்தில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார். இது குறித்து அமலா பால் கூறும்போது, 'இந்தியில் இதற்கு முன் ஒரு பட வாய்ப்பு வந்தது. அதில் நடிக்க மறுத்துவிட்டேன். காரணம், அதில் ஒரு காட்சியில் பிகினியில் நடிக்க சொன்னார்கள். அதனால் அந்த படமே வேண்டாம் என முடிவு செய்துவிட்டேன். அதேபோல் சில வருடங்களுக்கு முன்பும் எனக்கு பாலிவுட் வாய்ப்பு வந்தது. 2 படங்களில் நடிக்க கேட்டார்கள். ஆனால் அந்த கேரக்டர்கள் எனக்கு பிடிக்காததால் நடிக்க மறுத்தேன். இப்போது நரேஷ் மல்ஹோத்ரா சொன்ன கதை பிடித்ததால் நடிக்கிறேன். இமாச்சல பிரதேசத்தில் ஷூட்டிங் நடக்க உள்ளது' என்றார். இதில் அமலா பாலுடன் அர்ஜுன் ராம்பால் நடிக்கிறார்.

## முடிவெட்டும் தனுஷ் பட நாயகி

தனுஷ் நடித்த 'அனேகன்' படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்தவர் அமைரா தஸ்தூர். அடுத்து 'ஓடி ஓடி உழைக்கணும்' படத்தில் சந்தானம் ஜோடியாக நடித்து வருகிறார். இதற்கிடையில் இந்தி படங்களிலும் நடிக்கிறார். புதிய படமொன்றில் ஹேர் ஸ்டைலிஸ்ட்டாக நடிக்கிறார். இதற்காக அவர் முடிவெட்டுவதற்கு ஹேர்ஸ்டைலிஸ்ட்டான அழகு நிபுணர் ஒருவரிடம் பயிற்சி எடுத்துக்கொண்டார். அத்துடன் அழகு நிபுணர் தனது தலைமுடியை டிராகன் ஸ்டைலில் கத்தரித்து வைத்திருந்ததை கவனித்த அமைரா, அதேபோல் தனது ஹேர்ஸ்டைலையும் மாற்றிவிட்டார். இதுபற்றி அமைரா கூறும்போது,'பட கதாபாத்திரத்துக்காக ஹேர் ஸ்டைலிஸ்ட் ஒருவரிடம் தலை முடியை ஸ்டைலாக கட் செய்வதற்கு 3 மாதம் பயிற்சி எடுத்துக்கொண்டேன். தற்போது என்னால் கர்லிங், ஸ்டிரைட்னிங் போன்ற பலவித ஹேர் ஸ்டைலை யாருக்கு வேண்டுமானாலும் செய்யமுடியும்" என்றார்.

## ஆறடி உயர கணவன் வேண்டும்

நடிகை ரகுல் ப்ரீத் தற்போது தமிழில் செல்வராகவன் இயக்கத்தில் சூர்யா ஜோடியாக என்ஜிகே படத்திலும், இந்தியில் அஜய்தேவ்கன் ஜோடியாக ஒரு படத்திலும் நடித்து வருகிறார். தவிர அடுத்த ஆண்டு கார்த்தி, சிவகார்த்திகேயன் ஜோடியாக நடிக்க உள்ளார். தெலுங்கில் பிஸியாக நடித்து வந்த ரகுலுக்கு தற்போது அங்கு ஒரு படமும் கையில் இல்லை. ஆனால் என்.டி.ராமராவ் வாழ்க்கை வரலாறு படத்தில் ஸ்ரீதேவி கதாபாத்திரத்தில் நடிக்க அவரிடம் பேச்சுவார்த்தை நடக்கிறது. ரகுலின் திருமணம், கணவன் பற்றி அண்மையில் பத்திரிகையாளர்கள் கேட்டார்கள். அதற்கு "தற்போது நடிப்பில்தான் கவனம் செலுத்தி வருகிறேன். நிறைய் சாதிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. எனது வருங்கால கணவர் ஏழையாக இருந்தாலும் என்னிடம் மாறாத அன்பு காட்டுபவராகவும், நல்ல குணநலன்கள் கொண்டவராகவும் இருக்க வேண்டும். அத்துடன் எனது உயரம் 5.9அடி, எனக்கு கணவராக வருபவர் குறைந்தபட்சம் ஆறடி உயரம் இருக்க வேண்டும்' என்றார் ரகுல் ப்ரீத்.



நேபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீதரின் திருமணத்துக்கு வருகை தந்த ராஜ்கபூர் அருகில் நடிகர் சந்திரபாபு

# சி(ரி)த்ராலயா

## கோபுவுக்காகக் காத்திருந்த விமானம்!

டி.ஏ.நரசிம்மன்

ஒரு சிறந்த வெற்றியைக் கொடுத்துவிட்டால் போதும். இந்திப்பட உலகம்கைநீட்டி அழைத்துக்கொள்ளும். 'கல்யாண பரிசு' படத்தின் வெற்றியைக் கவனித்த பாலிவுட்டின் அன்றைய சூப்பர் ஸ்டாரான ராஜ்கபூர் அதில் நடிக்க விரும்பியதால் ஸ்ரீதர் இயக்க 'கல்யாண பரிசு' இந்தியில் 'நஸ்ரானா' ஆனது.

படப்பிடிப்பு முழுமையாக முடிந்து சவுண்ட் நெகட்டிவ் உடன் சென்னைக்குக் கிளம்பிய ஸ்ரீதருக்கும் கோபுவுக்கும் விருந்துகொடுத்தார் ராஜ்கபூர். விமானம் இரவு 9 மணிக்கு என்ற நிலையில் ராஜ்கபூர் அறிமுகப்படுத்திய எக்ஸ்பிரஸ் கார்டு என்ற புதியவகைச் சீட்டு விளையாட்டை 8.30 மணிவரை நேரம் போனதே தெரியாமல் ஸ்ரீதர் அவருடன் விளையாடிக்கொண்டிருந்தார்.

இன்னும் அரை மணிநேரம்தானே இருக்கிறது இன்னும் விருந்தும் சாப்பிடவில்லை, அப்படியிருக்க விமானத்தை எப்படிப் பிடிப்பது என்று கவலைப்பட்ட கோபு "நான் சவுண்ட் நெகட்டிவ்வோட முதல்ல கிளம்புறேன். நீ நாளை வா" என்று தமிழில் ஸ்ரீதரிடம் கூறினார் கோபு. ராஜ்கபூருக்குத் தமிழ் அந்நிய பாஷை அல்லவா? அவருக்குப் புரியாதென்று கோபு நினைத்தார். ஆனால், ராஜ்கபூர் "டோன்ட் வொரி, கோபுஜி! யூ வோண்ட் மிஸ் தி பிளைட். உங்களை விருந்து சாப்பிட வைக்காமல் அனுப்ப மாட்டேன்" என்று சமாதானப்படுத்தியவர் சட்டென்று மனைவியை அழைத்தவர் "கோபுஜியை விருந்துக்குக் கூட்டிட்டுப் போங்க..!" என்றார்.

ராஜ்கபூர் அடுத்துச் செய்த காரியம் கோபுவைத் திடுக்கிட வைத்தது. அவர் அமர்ந்து சீட்டு விளையாடிக்கொண்டிருந்த சோபா இருக்கையின் திவான் அருகில் இருந்த தொலைபேசியை எடுத்துச் சுழற்றி யாரிடமோ பேசிவிட்டு, போனை வைத்தவர். பின்னர், கோபுவின் முகத்தைப் பார்த்துச் சிரித்தார்.

"கோபுஜி நீங்க போய் நிதானமா சாப்பிடுங்க! இன்னைக்கு நீங்க பெரிய வி.வி.ஐ.பி. நீங்க ஏர்போர்ட் போய்ச் சேராம பிளைட் கிளம்பாது" என்றார் ராஜ்கபூர். கிருஷ்ணா கபூர் மற்றும் அவருடைய சகோதரர் மேற்பார்வையில் விருந்து பரிமாறப் பட்டது. எவ்வளவு பணியாளர்கள்! ஒரு அரச குடும்பம் தோற்றது! மலைத்துப்போனார் கோபு. மாணவப் பருவத்தில் 'ஆவாரா' என்ற ராஜ்கபூர் படத்தைப் பார்த்து வியந்திருந்த தனக்கு, அந்த மாபெரும் நடிகரின் மனைவியின் மேற்பார்வையில் விருந்தா?

விருந்து முடிந்து கோபு ஏர் போர்ட்டை அடைந்தபோது இரவு 09.50 மணி. கிட்டத்தட்ட ஒருமணி நேரம் தாமதம். கோபு பிளைட்டுக்குள் ஏறிவந்தபோது பிளைட்டை இவ்வளவு நேரம் நிறுத்தி வைத்த அந்த வி.ஐ.பி. யார் என்று சகபயணிகள் விமானத்தின் வாயிலையே வெறித்துக்கொண்டிருந்த நேரத்தில் எளிய மனிதராக உள்ளே நுழைந்த கோபுவின் முகத்தை ஆச்சரியத்துடன் வேடிக்கை பார்க்க, கோபுவோ ராஜ்கபூரின் செல்வாக்கை நினைத்து ஆச்சரியப்பட்டுப்போனார்.

### ராஜ்கபூரின் பெருந்தன்மை

'நஸ்ரானா' படப்பிடிப்பின்போது இன்னொரு சம்பவம். 'நஸ்ரானா' செட்டில் கேமரா அசிஸ்டன்ட் பி.என்.சுந்தரம் லைட்டிங்கை மிகுந்த டென்ஷனுடன் சோதனை செய்து கொண்டிருந்தார். அப்போது அவரைநோக்கி வந்த ராஜ்கபூர், "எடுக்கப்போகும் ஷாட்டுக்கு நீங்கள் அமைத்திருக்கும் லைட்டிங் போதாது என்று நினைக்கிறேன்" என்று ஆங்கிலத்தில் கூறினார். சட்டென்று சுந்தரத்துக்குச் சுள்ளென்று ஏறி விட்டது. "சார்... எங்க வேலை எங்களுக்குத் தெரியும். நீங்க நடிப்பில் திறமையைக் காட்டுங்கள்" என்று சொல்லிவிட்டார். முகம் வாடிப்போன ராஜ்கபூர் மவுனமாகத் தனது இருக்கையில் அமர்ந்த கொஞ்ச நேரத்தில் அதை மறந்து உற்சாகமாகிவிட்டார். நடந்ததைக் கேள்விப்பட்ட ஸ்ரீதர் பதைபதைத்துப் போனார்.

ராஜ்கபூர் இந்தத் துடுக்குத்தனத்தை எப்படி எடுத்துக்கொண்டாரோ தெரியலையே என்று கோபுவிடம் வந்து புலம்ப, "பேசாமல் சுந்தரத்தை அழைத்துப்போய் ராஜ்கபூரிடம் வருத்தம் தெரிவித்துவிடலாம் என்று யோசனை கூறினார். "நீயே அதைச் செஞ்சிடுகோபு" என்றுஸ்ரீதர் உத்தரவிட, அடுத்த நொடியே பி.என்.சுந்தரத்தை அழைத்துக் கொண்டு ராஜ்கபூரிடம் சென்றார் கோபி. "சாரி கபூர்ஜி ஏதோ டென்ஷனில் பேசிவிட்டார். உங்களை அவமதிக்கும் எண்ணத்தில் அவர் கூறவில்லை" என்று கோபு சமாதானம் செய்ய, ராஜ்கபூர் எழுந்து சுந்தரத்துக்குக் கை கொடுத்தார்.

"நான்தான் சாரி கேட்கணும் கோபுஜி. என்னுடைய வேலை நடிப்பது. எனது கருத்துகளை மற்றவர்கள் மீது நான் திணிக்க நினைப்பது சரியல்ல. இந்த பம்பாயில் நான் எது சொன்னாலும் உடனே செய்வாங்க. ஆனா, உங்க யூனிட் ஆட்களின் டெடிகேஷன் ஆச்சரியம் தருகிறது. நடிகர்களுக்கு என்று தனிப்பட்ட முக்கியத்துவம் தராமல், வேலைக்கே மதிப்பு தருகிறீர்கள். ஐ லவ் யூ ஆல்" என்று பாராட்டினார். மிகப் பெரிய நட்சத்திரமாக இருந்தும் எத்துணை பெருந்தன்மை என்று கோபு வியந்துபோனார்.

### அழைத்தார் மதுரம்

'கல்யாண பரிசு' வெளியாகி ஊரே

**குற்றம் கண்டுபிடித்தே பெயர் வாங்கிய புலவர் நக்கீரர் என்றால், ஸ்ரீதரிடம் திட்டு வாங்கியே பெரிய இயக்குநராக உருவெற்றவர் சி.வி.ராஜேந்திரன். உதவியாளர் கோபுவை பால்ய நண்பன் என்பதால் திட்டுவதற்குத் தயங்குவார் ஸ்ரீதர்.**

அந்தப் படத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது கோபுவைக் கூப்பிட்டு அனுப்பினார் டி.ஏ. மதுரம். அவரைக் கண்டதுமே " உங்க ஆசீர்வாதம் நிஜமாகிடுச்சு" என்று கோபி நெகிழ்ந்து கூற "சினிமால பெரிய கம்பெனியையே தொடங்கிட்டியே கோபு! உன்னோட மன்னார் அண்ட் கம்பெனியத்தான் சொல்றேன். என்ன பிரமாதமான காமெடி" என்று பாராட்டினார். அப்போதே "எங்க கம்பெனி தயாரிப்புல ஸ்ரீதரை வச்சு ஒரு படம் பண்ணணும்" என்று வேண்டுகோள் வைத்த மதுரம், அதற்கான அறிவிப்பையும் அவரைச் சந்தித்த அடுத்த சில தினங்களிலேயே தந்துவிட்டார்.

அந்தப் படம்தான் 'மீண்ட சொர்க்கம்' வீனஸ் பிக்சர்ஸ் நிதி


'நஸ்ரானா' படத்தில் ராஜ்கபூர், வைஜெயந்திமாலா

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்ப்பின் முக்கியத்துவமும், வருங்கால சந்ததியினரின் நிலையும்

அம்பலவாணர் துரைசிங்கம்
thuraisingamparames@gmail.com

மொழி என்றால் என்ன?

ஒரு நாட்டில் வாழும் மக்களினால் பேச்சு அல்லது எழுத்து மூலம் ஒருவரோடொருவர் தொடர்பாடல் மேற்கொள்வதற்கு உதவுவது மொழி எனப்படும். உலகில் வாழும் மக்களினால் பல்வேறுபட்ட மொழிகள் உபயோகிக்கப்படுவதனால் மக்களிடையில் புரிந்துணர்வு மற்றும் பரஸ்பர நம்பிக்கையினை வளர்ப்பதற்கும், விஞ்ஞான தொழில் நுட்பம் வேகமாக முன்னேறி வருவதனால் அவற்றின் அனுகூலங்களை யாவரும் பெற்றுக்கொள்வதற்கும் மொழிபெயர்ப்பு இன்றியமையாதாகும். மொழிபெயர்ப்பு ஆங்கில மொழியில் "Translation" என அழைக்கப்படும்.

What is Translation? The definition is rendering the meaning of a text into another language in the way that the author intends the text.

மொழிபெயர்ப்பு என்றால் என்ன?

மொழிபெயர்ப்பின் வரைவிலக்கணமாக ஒரு விடயத்தின் அர்த்தத்தினை, படைப்பாளியின் கருத்து மற்றும் நோக்கத்திற்கிணங்க விளங்க வேறொரு மொழியில் பெயர்ப்பது என கருதப்படும்.

மஹாகவி சி.சுப்பிரமணிய பாரதியின் 'பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்ற கூற்று அவரின் தூர நோக்கினையும், மொழிபெயர்ப்பின் அவசியத்தையும் உணர்த்தி நிற்கின்றது.

மொழிபெயர்ப்பினைப் பொறுத்த வரையில் படைப்பாளி, மொழி பெயர்ப்பாளர் என இருவர் சம்பந்தப்படுகின்றனர். இவர்களுக்கிடையிலான வேறுபாட்டினை நோக்குவோமானால் ஒரு படைப்பாளிக்கு கட்டுக்கடங்காத சுதந்திரம் உண்டு.

அவர் தன் படைப்பை எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை. ஆனால் மொழிபெயர்ப்பாளரின் நிலை அவ்வரில்லை. அவர் தனது க்றபனையினை இதில் புகுத்த முடியாது. திருமணமான பெண்போல் வகுக்கப்பட்ட கடமைகளோடு செயலாற்ற வேண்டும். படைப்பாளரின் கருத்துக்களில் எதையும் மாற்றாமல் அதே சமயம் சரியான மொழியில் வாசிப்பவர்களுக்கு சென்றடையும் முறையில் செயற்பட வேண்டும்.

மொழிபெயர்ப்பாளர் இரு மொழித் தேர்ச்சி உடையவராகவும், அம் மொழிகளுக்குரிய கலாசாரங்களையும் அறிந்தவராகவும், மற்றும் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் அறிவு உள்ளவராகவும் இருத்தல் சாலச்சிறந்தது. உதாரணமாக விஞ்ஞானம் தொடர்பில் கல்வி கற்ற ஒருவர் கலை தொடர்பான விடயம் ஒன்றினை மொழிபெயர்ப்புச்செய்ய முனையும் போது மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க நேரிடும்.

மொழிபெயர்ப்பானது தொடர்பாடல், இன்னோர் கலாசாரத்தை அறிமுகப்படுத்தல் அல்லது அறிந்து கொள்ளல், வேறொரு மொழியினை கற்பது தொடர்பான நுட்பங்கள் மற்றும் ஒருவரின் தனிப்பட்ட ரசனை தொடர்பில் முக்கிய பங்காற்றுவதுடன், விஞ்ஞானம், தொழில்நுட்ப, நிறுவன, சமூக பொருளாதார, அரசியல், இலக்கியம், தத்துவம் தொடர்பான விடயங்களிலும் பங்காற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு மொழியின் தொழிற்படுகையினை நோக்கும்போது மொழியானது ஆக்கபூர்வமான படைப்பு, தகவலை வழங்கும் படைப்பு (creative / informative), விடயத்தின் ரசனைகளை வெளிப்படுத்துகின்ற (expressive) ஒருவரின் செயற்பாடுகளை மாற்றக் கூடிய அல்லது தூண்டக்கூடிய படைப்பு (operative) என்ற விடயங்களை பரிமாற்றம் செய்வதற்கு உபயோகப்படுத்தப்படுகின்றமை கண்கூடு.

ஆக்கபுர்வமான தகவல் வழங்கும் படைப்புக்களாக உசாத்துணை அறிக்கைகள், அறிக்கைகள், உரையாற்றுகைகள், இயக்குதல் தொடர்பான வழிமுறைகள், சுற்றுலாக்கையேடுகள், உத்தியோகபூர்வ உரைகள், விமர்சனங்கள் உள்ளடங்கலாம்.




விடயத்தின் ரசனைகளை வெளிப்படுப்படுத்துகின்ற படைப்புக்களாக கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், சுயசரிதைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒருவரின் சிந்தனைகள் மற்றும் செயற்பாடுகளை மாற்றுவது தொடர்பாக (operative) விளம்பரங்கள், தேர்தல் உரைகள், சமய பிரசாரங்கள் உள்ளடக்கப்படலாம். அதாவது செவிமடுப்பவர்களை வாசிப்பவர்களை அதற்கிணங்க செயற்படும்படி தூண்டுதல் தொடர்பானது.

சில விடயங்கள் கலப்புள்ளவையாக (Hybrid) அமையலாம். ஒரு சுயசரிதையானது தகவலை வழங்குவதுடன் வாசிப்பவரை சிலவிடயங்கள் தொடர்பில் தூண்டுவதாகவும் அமையலாம். அதேபோன்று சமய பிரசாரங்கள் ஒரு சமயம் தொடர்பான தகவலுடன் செவிமடுப்பவரை குறிப்பிட்ட சில செயற்பாடுகளை பின்பற்றும் படி தூண்டுபவையாக அமையலாம்.

எனவே மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்க்கப்படும் விடயம் தொடர்பில் போதுமான அறிவு, அவ்விடயம் தொடர்பான கலாசாரம் மற்றும் மொழிபெயர்ப்பினை வாசித்து ப்யன்பெறுபவர்கள், தொடர்பிலும் கவனத்திற் கொள்ளல் இன்றியமையாதது.

மொழிபெயர்ப்பில் முக்கியமானது விடயத்தினை எவ்வகையில் மொழி பெயர்ப்பது அதாவது இலகு மொழிபெயர்ப்பு ( free Translation) அல்லது சொல்லுக்கு சொல் மொழி பெயர்ப்பு (Literaltranslation) என்பதனை தீர்மானிப்பதாகும். முற்காலத்தில் கற்றோர் பலரும் இலகுமொழிபெயர்ப்பு முறையினை ஆதரித்ததாக அறியக் கிடைக்கின்றது. 20ம் நூற்றாண்டில் மனிதவர்க்க சாஸ்திரம் (Anthropology) ஒரு மொழியானது சம்பந்தப்பட்ட கலாசாரத்தின் வெளிப்பாடாக கருதப்பட்டது. அத்துடன் ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழிக்கு மாற்றம் செய்வது சாத்தியம் அற்றத்தாக கருதப்பட்டதுடன்

தொடர்ச்சி 18-ம் பக்கம்...

---

உதவியுடன் என்.எஸ்.கே மதுரம் தம்பதி தயாரித்த படம். ஜெமினி கணேசன், பத்மினி, கே.ஏ.தங்கவேலு, டி.ஆர். ராமச்சந்திரன், மனோரமா, தாம்பரம் லலிதா போன்றோர் நடித்தனர். இதில் டி. ஆர்.ராமச்சந்திரன் ஏற்ற கதாபாத்திரத்துக்கு நண்பன் கோபுவின் பெயரையே வைத்தார், ஸ்ரீதர்.

### திட்டித் தீர்க்க ஒரு ரத்த பந்தம்!

இந்தப் படத்தின் தொடக்கப் பணிகளின்போது ஸ்ரீதரின் மாமா பிள்ளை சி.வி.ராஜேந்திரன் ஒரு நாள் செட்டுக்கு வந்து கோபுவைப் பார்த்தார். அவர் அப்போது அரசுப் பணியில் இருந்தார். "கோபு! நான் உதவி இயக்குநராக சேர ஆசைப்படறேன். உன் நண்பன்கிட்ட சொல்லேன்!" என்றார்.

"உனக்கு எதற்கு சிபாரிசு.. நீதான் ரத்தபந்தமாச்சே!" என்று கோபு கேட்க, சி.வி.ராஜேந்திரன் தயங்கினார். ராஜேந்திரனின் கோரிக்கையை ஸ்ரீதரிடம் கோபு எடுத்துச் சொல்ல, "சரி..சரி..வந்து தொழிலை கத்துக்கத் சொல்லு.!" என்றார் ஸ்ரீதர்.

குற்றம் கண்டுபிடித்தே பெயர் வாங்கிய புலவர் நக்கீரர் என்றால், ஸ்ரீதரிடம் திட்டு வாங்கியே பெரிய இயக்குநராக உருபெற்றவர் சி.வி.ராஜேந்திரன். உதவியாளர் கோபுவை பால்ய நண்பன் என்பதால் திட்டுவதற்குத் தயங்குவார் ஸ்ரீதர். அவருக்கு ஒரு சிறந்த வடிகாலாகக் கிடைத்தார் சி.வி.ஆர்.! ஸ்ரீதர் எல்லாக் கோபத்தையும் ராஜேந்திரன் மீதுதான் காட்டுவார்.

'மீண்ட சொர்க்கம்' ஒரு முக்கோணக் காதல் கதை. பரதநாட்டியக் கலைஞரான பத்மினிக்கு இந்தக் கதாபாத்திரம் அல்வா சாப்பிடுவது போல அமைந்துவிட்டது. தனது அத்தனை திறமைகளையும் காட்டி அசத்திவிட்டார் பத்மினி. கல்யாணி ராகத்தில் அமைந்த 'ஆடும் அருட்பெருஞ்சோதி'என்ற பாடல் வாகினி ஸ்டூடியோவில் பத்து நாட்கள் படப்பிடிப்பு செய்யப்பட்டது. பத்மினியின் திறமையைக் கண்டு அசந்து போய்விட்டார் ஸ்ரீதர். ஆனால், ஸ்ரீதரையே ஒருமுறை கோபம் கொள்ள வைத்துவிட்டார் பத்மினி.

கோபம் தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17-ம் பக்க தொடர்ச்சி...

அதன் பேறாக விருப்புடையதாக காணப்பட்டது. இக்கோட்பாடு தற்போது மாற்றம் அடைந்துள்ளது. தற்போது விடயம் மட்டுமல்ல மொழி பெயர்ப்பின் நோக்கம், வாசகர்களின் தகுதிநிலை மற்றும் விடயத்தின் வகை என்பனவும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டியது அவசியமாகின்றது.

மொழிபெயர்ப்பு சற்றுக்கடினமான பணியாகஇருப்பினும்மேற்குறிப்பிட்ட காரணிகளை கருத்திற்கொண்டு இளம்மொழிபெயர்ப்பாளர்களை ஊக்குவிப்பது வரவேற்கத்தக்கது.

உதாரணமாக "Good Morning" என்றால் நல்ல காலைப்பொழுது என்று கூறமுடியுமா? ஆனால் "இனிய காலை வணக்கம்" எனக்கூறலாம்.


தொழில்நுட்பசொற்களை மொழி பெயர்ப்பது மிகவும் சிரமமான விடயம். புரியக்கூடிய மொழியில், சந்தேகத்திற்கிடமின்றி மொழி பெயர்க்கப்படல் அவசியம்; அப்படி யான சந்தர்ப்பங்களில் உரிய ஆங்கில சொல்லை, அருகில் அடைப்புக்குறிகள் கொடுப்பது பொருத்தமானது.

புத்தகங்களை மொழிபெயர்க்கும் போது நூலாசிரியரின் அடிப்படை நோக்கத்தினை, புரிந்து கொண்டு மொழிபெயர்ப்பது பொருத்தமாக அமையும். இம்முறை ஆங்கில மொழியில் என அழைக்கப்படுகின்றது.

உரைபெயர்ப்பு (Interpretation) என்பதும் முக்கியத்துவம் வாய்ந்தது. இது சமகால உரைபெயாப்பு, தொடர்ச்சியான உரைபெயர்ப்பு என இரு வகைப்படும். ஒருவர் உரையாற்றும் போது அதனை உடனுக்குடன் சம காலத்தில் உரைபெயர்ப்பது சமகால உரைபெயர்ப்பு எனப்படும்.

பாராளுமன்றத்தில் இவ்வகை யான உரைபெயர்ப்பே இடம்பெறு கின்றது. இது மிகவும் கடினமான செயற்பாடாகும். ஒருவர் பேசுவதை கிரகித்து உடனுக்குடன் செவிமடுப் போர் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் கூறுவதற்கு அனுபவமும் கைகொடுக்கும். தொடர்ச்சியான உரைபெயர்ப்பு என்பது பேச்சுத் தொடர் அல்லது கலந்துரையாடல் முடிவுபெற்றபின் அல்லது குறிப் பிட்ட கால இடைவெளிக்குள் உரை நிறுத்தப்பட்டு, உரிய உரை பெயர்ப்பினை வழங்குவதாகும்.

மொழிபெயர்ப்பாளராக சேவை யாற்ற விரும்புவோர் இரண்டு மொழித்தேர்ச்சியுடன், சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் போது




மான அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்; எனவே தொடர்பான முயற்சியுடன் கூடுதலான வாசிப்புப் பழக்கம் தரமான மொழிபெயர்ப் பாளனாக உருவாகுவதனை சாத்திய மாக்கலாம்.

ஆனால் தற்போது சில பாடசாலை களில் நிலவும் ஆங்கில மொழித் தேக்கநிலை, வருங்காலத்தில் தரமான மொழிபெயர்ப்பாளர்கள் உருவாகுவதில் தடையாக இருக்கும் என்பதையும் புரிந்து கொண்டு, மாணவர்கள் தரம் 3 தொடக்கம் உரிய முறையில் ஆங்கில மொழிக்கல்வியை பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறை களை ஏற்படுத்த வேண்டும்.

தற்போது ஆரம்ப பாடசாலைகளில் ஆங்கில மொழியினை உரிய முறையில் செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்ற திறன்களுடன் கற்பிக்கின்ற தன்மை அருகி வருகின்றமையால் எதிர்கால சந்ததியினர் பாதிக்கப்போவதினை பலரும் தெரிந்தும் தெரியாதவர் போல் நடிப்பது கவலைக்குரிய விடயமாகும். இவ்விடயம் தொடர்பில் ஏற்கனவே தமிழ், ஆங்கில பத்திரிகைகளில் எழுதியுள்ளேன். பெற்றோரே விழிப் படையுங்கள், செயற்படுங்கள்.

திறமையுள்ள பிள்ளைகள் உள்ளனர், ஆனால் தங்கள் திறமைகளை வளர்த் துக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அற்றவர்களாக உள்ளனர். அக்கூற் றினை விளங்குவோர் புரிந்து கொள்ளமுடியும். எல்லோரும் புரிந்துகொள்வார்களென எதிர்பார்ப் பதும் புத்திசாலித்தனமல்ல. ஆனால் தூரநோக்குடன் (Farsighted) சிந்திப் பவர்களால் புரிந்து கொள்ளமுடியும்.

" There are a countless number of children who have the potential to excel but lack the opportunities to indentify their potential" -anonymous

11-ம் பக்க தொடர்ச்சி...

மத்தியில் பெரிய மேடை அமைத்து, அதில் உங்களை உரையாற்ற வைத்து விசயத்தை லீக் செய்வதில்லை. அதற்கெல்லாம் வழியுண்டு"

"சொல்லுங்கள்"

"நீங்கள் தயாராக இருந்தால் சொல் லுங்கள். இங்கிலாந்து பத்திரிகைகளில் ப்ரீலான்சராக இருக்கும் பத்திரிகைக்காரர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு உங்கள் அடையாளங்களை மறைத்து, தகவலை லீக் செய்துவிடலாம். விசயமும் வெளியில் வந்ததாக இருக்கும். உங்களிற்கு பணம் வந்ததா கவும் முடியும்"

மோசாய் கடுமையாக யோசித்தபடி யிருந்தார்.

"மிஸ்டர் மோசாய்... இதில் இன்னொரு தந்திரமும் உள்ளது. நான் சொன்ன ப்ரிலான்சர் ஒரு எகிப்திய அரபியர். அவர் கெய்ரோவில்தான் இருக்கிறார். அவருக்கு நியூசிலாந்தின் காலநிலை எப்படியிருக்குமென் பதே தெரியாது. அவர் மூலம் தகவலை லீக் செய்தால், யாருக்கும் சந்தேகம் வராது.

பத்திரிகைகளிடமிருந்து தகவல் மூலத்தை அவ்வளவு சுலபமாக எடுக்க முடியாது. அப்படி எடுத்தாலும், எகிப்திய ஆள் என்பதால், வேறு



சோஸ்களின் மூலம்தான் பெற்றார் என்றுதான் நினைப்பார்கள். எகிப்திய ப்ரீலான்சரையும் நியூசிலாந்து பண் ணையாளர் மோசாயையும் யாரும் கனெக்ட் பண்ணி பார்க்க வாய்ப் பேயில்லை."

மோசாய் தலையாட்டினார்.

இதுதான் இங்கிலாந்து பத்திரிகை யான டெய்லி நியூசிற்கு, இஸ்ரேலின் அணு இரகசியம் சென்று சேர்ந்ததை.

இந்த விசயத்தை எப்படி கையாள வதென மொசாட் அதிகாரிகள் யோசிக்க தொடங்கினார்கள். எடுத் தேன் கவிழ்த்தேன் என மோசாயை கொல்ல முடியாது. அவரிடமுள்ள ஆதாரங்களை வேறு யாரிடமெல்லாம் கொடுத்தார் என்பது தெரியாது. அப்படியானால்?

மோசாய் மூலமே அனைத்தையும் தெரிந்து, எங்கெல்லாம் ஆதாரங்கள் சென்றதோ, அங்கிருந்தெல்லாம் ஆதாரங்களை திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், இது நினைத்ததை போல சாத்தியமான விசயமில்லை.

மோசாயை எப்படி அணுகுவது?

கடத்தி வரலாமென நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் மொசாட் அப்படி நினைக்கவில்லை. காரணம் இதில் மொசாட் சம்பந்தப்பட்டதென்ற ஒரு துளி தகவலும் வெளியில் வரக்கூடாது. மோசாயை கடத்தினால் நிச்சயம் மொசாட்டின் பெயர் கெடும். எப்படியென்கிறீர்களா?

டெய்லி நியூஸ் பத்திரிகை ஆசிரியரிடம் எகிப்து பத்திரிகையாளர் பேசினார். ஆனால் அவர் நேரடியாக பத்திரிகை ஆசிரியரிடம் பேசியிருக்கமாட்டார். முதலில் பத்திரிகை அலுவலகத்தில் உள்ள இன்னொரு உதவி ஆசிரியர் மூலமாகத்தான் பேசியிருப்பார். எப்படியோ இந்த விடயம் டெய்லி நியூஸ் அலுவலகத்தின் ஒரு சில பத்திரிகையாளர்களிற்கு தெரிந்த விசயமாக இருக்கும். திடீரென மோசாய் காணாமல் போனால் அவர்கள் மொசாட்தான் காரணமென நினைப்பார்கள், எழுதுவார்கள். ஆகவே அது சரியான வழியல்ல.

மொசாட் அதிகாரிகள் அதற்கு பக்காவான திட்டமொன்றை தயாரித்தார்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

டி.நாராயண ரெட்டி, செக்ஸாலஜிஸ்ட்

நறுமணம்... இதற்கு செக்ஸ் உணர்வைத் தூண்டுவதில் முக்கிய பங்கு இருக்கிறது. செக்ஸ் ஆரோக்கியம் என்பது உடல் ஆரோக்கியத்தின் ஒரு பகுதியே. ஆக, தாம்பத்ய வாழ்க்கை இனிக்க ஆண், பெண் இருவரும், தங்கள் உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

'கணவன், டைனிங் டேபிளில் அமர்ந்து புகைபிடித்துக் கொண்டே செய்தித்தாள்களைப் படித்துக்கொண்டிருக்கிறான். காலையிலிருந்து இது நான்காவது சிகரெட். கணவன் புகைபிடிப்பது மனைவிக்குப் பிடிக்கவில்லை. புகைபிடிப்பதை விடச்சொல்லி பல முறை கெஞ்சியிருக்கிறாள். அவனோ, ஆஃபீஸ்ல ரொம்ப ஸ்ட்ரெஸ், அதான் பிடிக்கிறேன்' என்று சொல்லி வாயடைக்கிறான்.

சிகரெட் நாற்றத்தால், கணவனுடன் செக்ஸ் வைத்துக்கொள்ளவோ, காதல் விளையாட்டுகளில் ஈடுபடவோ, கட்டியணைத்து முத்தமிடவோ ஆசையிருந்தும் செய்ய முடியாமல் தவிக்கிறாள் அந்தப் பெண்.

அவனுடைய உடல், துணி, பயன்படுத்தும் பொருள்கள்... அனைத்திலும் சிகரெட் நாற்றம். இப்படி நாற்றமடித்தால் பெண்ணுக்குக் காம இச்சை எப்படி ஏற்படும்? ஆனாலும், பிடிவாதமாக அவளை முத்தமிடுகிறான். அது அவளுக்குப் பிடிக்கவில்லை. இது, பல வீடுகளிலும் நடக்கும் நிகழ்வு.

ஆணுறுப்பின் முன்புறத்தின் அடிப்பகுதியில் வெள்ளை நிறத்தில் ஸ்மெக்மா (Smegma) என்ற அழுக்கு சுரந்து, படியும். குளிக்கும்போது அந்த அழுக்கை நன்றாகக் கழுவிப் போக்க வேண்டும். சரியாகச் சுத்தம் செய்யவில்லையென்றால், அது படிந்து படிந்து பக்டீரியா வளரக் காரணமாகிவிடும்.

பெண்கள், குளிக்கும்போது பெண்ணுறுப்பின் உதடுகளைப் (Clitorous) பிரித்து, முன்பகுதி, மேல்பகுதி, சிறுநீர் வெளியேறும் பகுதிகளை நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும். சாதாரணக் குளியல் சோப்புகளே இதற்குப் போதுமானவை. இதற்காக சந்தைகளில் பிரத்யேகமாக விற்கப்படும் வேதிப்பொருள்களைப் (Vaginal Wash) பயன்படுத்தக் கூடாது. உள்ளாடைகளைத் தினமும் துவைத்து வெயிலில் உலரவைக்க வேண்டும். பருத்தியால் ஆன உள்ளாடைகள் பயன்படுத்தலாம். அவை வியர்வையை நன்றாக உறிஞ்சி, தொற்றுகள் ஏற்படாமல் தடுக்கும்.


பெண்கள் ஆசனவாயைச் சுத்தம் செய்யும்போது மலம் பெண்ணுறுப்பில் பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பட்டால் [illegible] சிறுநீர்த் தொற்று ஏற்பட வாய்ப்பிருக்கிறது. உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்வது எப்படி என்று பெற்றோர்தான் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தமாக செக்ஸில் ஈடுபட, முதலில் சிகரெட் பிடிப்பதை நிறுத்துவது நல்லது. அதை விடுவதற்குக் கொஞ்சநாள் ஆகுமென்றால், செக்ஸ் வைத்துக்கொள்வதற்கு முன்னர் பல் துலக்கலாம். முடிந்தால் வாயில் மவுத் வோஷ் ஊற்றிக் கொப்பளிக்கலாம். ஏலக்காய் அல்லது பெப்பர்மின்ட் மிட்டாய்களை வாயில் போட்டு மெல்லலாம். இவையெல்லாம் வாய் நாற்றத்தைக் குறைக்க உதவும்.

வாயிலிருந்து நாற்றம் வருவதை ஹாலிடோசிஸ் (Halitosis) என்று சொல்வார்கள். தொண்டையில், பல் இடுக்குகளில் தொற்றுகள் இருந்தால், நுரையீரல் பிரச்னை, சர்க்கரை நோய், மலச்சிக்கல் போன்ற பிரச்னைகள் இருந்தால், வாயில் நாற்றம் வீசும். தினமும் சரியாக மலம் கழிக்க வேண்டும். வாயில், உடலில் துர்நாற்றம் வீசினால் செக்ஸ் வாழ்க்கை பாதிக்கப்படும். நல்ல மருத்துவரைப் பார்த்து இந்தப் பிரச்னைகளுக்குச் சிகிச்சை எடுத்துக்கொள்வது நல்லது. உடல் சுத்தமாக, நறுமணத்துடன் இருந்தால் ஆண், பெண் இருவருக்கும் செக்ஸ் ஆர்வம் அதிகரித்து, காமம் கரைபுரண்டு ஓடும்.

(இன்னும் கற்றுத் தருகிறேன்...)




ஜெ.வெங்கடேசன்,
மனநல மருத்துவர்

'பதறாத காரியம் சிதறாது' என்பது பழமொழி. நம்மில் பதற்றம்கொள்ளாதவர் யாரும் இல்லை என்பதே யதார்த்தம். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அது நம்மிடம் தொற்றிக்கொண்டிருக்கும். அதன் காரணமாக, சில விரும்பத்தகாத விளைவுகளும் ஏற்பட்டிருக்கும். ஒருவர் தனக்கு உடன்பாடில்லாத ஒரு வேலையைச் செய்யும்போதோ, சங்கடமான சூழலில் இருப்பதாக உணரும்போதோ அவருடைய கவனமும் நம்பிக்கையும் சிதறும். அதுபோன்ற நேரங்களில் ஏற்படும் ஒருவகை உணர்ச்சிதான் பதற்றம். பலருக்கும் பிரச்னைகளை எதிர்கொள்ளும்போது, சவால்களை எதிர்கொள்ளும்போது, முக்கிய முடிவு எடுக்கும்போது பதற்றம் ஏற்படுவது இயற்கையே. அதுவே, நோயாக மாறும்போது பிரச்னையாக உருவெடுக்கிறது.

**பதற்ற நோய் ஏன் ஏற்படுகிறது?**

ஒருவருக்கு தற்காலிகமாக அல்லாமல் அடிக்கடி பயம், பதற்றம் வந்து பாதிப்பை ஏற்படுத்துகிறது, நாளடைவில் அது தீவிரமாகிறது என்றால், அது மனப்பதற்ற நோயாக இருக்கலாம்.

- ஞாபகசக்தி மற்றும் நிதானம் குறையும்போது.
- அதிகமாக உணவு உட்கொள்ளும் போது.
- அதிகம் கோபப்படும்போது.
- சில நேரங்களில் மரபு சார்ந்த பிரச்னைகளாலோ, மூளையிலுள்ள திரவங்கள் குறையும்போது பதற்றம் ஏற்படுகிறது. புகைப்பிடிப்பது, மது அருந்துவது போன்ற பழக்கங்கள் உள்ளவர் களுக்கும் பதற்றம் ஏற்படும்.

**ஒருவர் பதற்றத்துக்கு ஆளாகியிருக்கிறார் என்பதை எப்படி அறிவது?**

இவர்கள் எல்லா நேரங்களிலும் பதறியபடி, எதையோ நினைத்து கவலைப்பட்டபடி இருப்பார்கள். அதனால், ஒரு கட்டத்தில் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையே பாதிப்புக்கு உள்ளாகும். அப்போதுதான் அவர்களால் அந்த மாறுபட்ட சூழ்நிலையை உணர முடியும். பதற்றம் தொடர்பான மனநோய் இருப்பவர்களுக்குச் சில பொதுவான அறிகுறிகள் இருக்கும். உதாரணமாக...

- அவர்களால் தாங்கள் ஈடுபடும் செயலில் முழு கவனத்தையும் செலுத்த இயலாது.
- தொடர்ந்து ஏதோ ஒருவகையில் ஓய்வின்றி இருப்பது போன்ற உணர்வு இருக்கும்.
- திடீரென்று எல்லா விஷயங்களும் முடிந்து விட்டது போல உணர்வர்.
- அதிகமாக வியர்ப்பது, அடிக்கடி சிறுநீர் கழிப்பது, வயிற்றுப்போக்கு, மூச்சுத்திணறல், தூக்கமின்மை போன்ற உடல் உபாதைகளும் ஏற்படும்.

இவையெல்லாம் மிகப்பொதுவான சில அறிகுறிகளே. பதற்றம் தொடர்பான மனநோயில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொருவருக்கும் அது வேறுபடும்.

**பதற்றத்தில் ஆறு வகைகள்...**

**Generalised Anxiety Disorder**

எதற்கெடுத்தாலும் பயப்படுவது, அழுவது என இருப்பார்கள். தூக்கமின்மை, வயிற்றுவலி, சோர்வு, ஓய்வின்மை எல்லாம் ஏற்படும்.

**Panic Disorder**

சிலர் எதைப் பார்த்தாலும் பயப் படுவார்கள். தனியாக ஓர் இடத்தில் இருக்க அவர்களால் முடியாது. ஏதாவது பிரச்னையில் மாட்டிக் கொள்வோமோ என்கிற பயத்திலேயே, பொது இடங்களைக்கூடத் தவிர்ப் பார்கள்.

**Obsessive Compulsive Disorder**

ஒரு செயலை திரும்பத் திரும்பச் செய்வர். சிலர் தேவையில்லாத எண்ணங்கள் எழுந்தபடியும், செயல்கள் செய்தபடியும் இருப்பர். அவர்களின் அந்த செயல்கள் பிறருக்குத் தொல்லைகளாக மாறும் என்பதைத் தாண்டி, ஒரு கட்டத்தில் அவர்களே அந்த வட்டத்துக்குள் சிக்கிக் கொள்வர்.

**Phobias and Irrational Fears**

சில விஷயங்களைப் பார்த்தவுட னேயே பயப்படுவது ஒருவகை. விலங்குகளைக் கண்டவுடன் பயப் படுவது, சாகச நிகழ்ச்சிகளை காண நேரிட்டால் பயப்படுவது... என மற்றவர்களையும், மற்றவர்களின் செயல்களையும் கண்டு பயப்படு வார்கள் இவர்கள்.

**Social Anxiety Disorder**

பலர் கூடியிருக்கும் இடத்தில் பேசும் போது ஒருவர் தன்னை மிகவும் பலவீனமாக உணர்வது மன அழுத்தத் துக்கு வழிவகுக்கும். பொதுக் கருத்தின் மீதான அவரின் பார்வை தன்னைத் தானே தாழ்த்திக்கொள்ளும் நிலையில் சென்று முடியும்.

**Post-Tramautic Stress Disorder**

சிலருக்குப் பழைய நினைவுகளை மீண்டும் நினைத்துப் பார்ப்பதால் மிக அதிகமான பதற்றம் ஏற்படும். அடிக்கடி கனவுகளில் பழைய நிகழ்வுகள் வருவது, பல சந்தர்ப்பங் களை புறக்கணிப்பது, எளிதில் பின்வாங்குவது போன்ற அறிகுறிகள் மூலம் இதனை உறுதி செய்து கொள்ள லாம். இது, பாதிக்கப் பட்டவருக்கு மிகவும் ஆபத்தான உடல் பிரச்னைகளை ஏற்படுத்தும்.

**பதற்றம் மனநோயாக மாறக்கூடிய அபாயம் இருக்கிறதா?**

நிச்சயமாக! ஒருவர் பயப்படும் போது, கஷ்டப்படும்போது, கோபப் படும்போது பதறத் தொடங்குவார். அது இயல்பு. ஆனால், சிலர் பயத்துக்கான, கோபத்துக்கான குறிப்பிட்ட அந்தச் சம்பவம் முடிந்த பின்னரும்கூட பதற்றத்துடனேயே காணப்படுவார். இப்படி ஒருவரின் உணர்ச்சி வெளிப்பாடு அதிகமாகும் போது, அது அவர்களை எல்லாச் சூழல்களிலும் பதற்றத்துடனேயே வைத்திருக்கும். அது மெள்ள மெள்ள ஒருவகையான மன நோயாகும் அபாயமும் உள்ளது.

**பதற்றம் குறைக்க எளிய வழிகள்...**

- புகை, மது பழக்கம் உள்ளவர்கள் அவற்றைக் கைவிட்டாலே போதும்.
- ஆசனங்கள், மூச்சுப்பயிற்சிகள், தியானம் போன்றவற்றை முறைப்படி செய்துவருவதன் மூலம் பதற்றத்தைக் குறைக்கலாம்.
- இசையை ரசிப்பது, அமைதியான சூழலில் இருப்பது, புல்வெளியில் நடைப்பயிற்சி செய்வது போன்றவைகூட ஒருவரது பதற்றத்தைக் கட்டுப்படுத்தும்.
- சந்தோஷம் தரக்கூடிய, அமைதியாக உணரக்கூடிய சூழலில் வாழ்வது பதற்றத்தை விரட்டும்.
- போதுமான அளவுக்கு, ஆழ்ந்து தூங்குவது பதற்றத்தைத் தணிக்கும்.

**உளவியல்ரீதியான தீர்வு என்ன?**

எந்த விஷயத்தையும் நிதானத்துடன் அணுகுங்கள். எதனால் பதற்றம் ஏற் படுகிறது என்பதைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சூழல்களைத் தவிர்க்க முயற்சி எடுக்கலாம்.

உங்களை பலவீனப்படுத்தும் பதற்ற மான விஷயங்களை, மனநல மருத்துவரிடம் எடுத்துச் சொல்லுங்கள். கவுன்சலிங் முறையிலே சிலருக்கு சரியாகிவிடும். அவற்றையும் தாண்டி மருந்துகளும் சிகிச்சைகளும் மருத்துவர் களால் வழங்கப்படுகின்றன. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக யன்னல்

தேசமித்ரன்

ஆவணி மாதம் ஆரம்பித்திருக்கும் போது வட ஐரோப்பிய நாடுகள் தமது உச்சக்கட்டக் கோடைகாலத்தின் பெரும்பகுதியை அனுபவித்துவிட்டன. சுற்றுலாக்கள், கடற்குளியல்கள், பாடசாலை விடுமுறைகள் போன்ற வருடத்தின் மகிழ்ச்சியான விடயங்களில் லயிக்கும் இப்பிரதேச மக்களை சரித்திரத்தில் என்றுமே இல்லாத காட்டமான வெயிலும், வறட்சியும் தன் பிடியில் வைத்திருக்கிறது.

ஆடி மாதத்தின் ஆர்ட்டிக் பிரதேசத்தின் பெரும்பகுதியில் சராசரி வெப்பநிலை 86 °F– 30°C ஐ த் தாண்டியிருக்கிறது. விளைவாக சுவீடன், பின்லாந்து, நோர்வே நாடுகளின் காடுகளில் காட்டுத்தீ உருவாகிப் பெருஞ் சேதங்களை விளைவித்து வருகிறது. பின்லாந்து, நோர்வே நாடுகள் தமது காட்டுத்தீக்களை ஓரளவுக்குக் கட்டுக்குள் கொண்டு வந்திருக்க சுவீடனில் சுமார் 25 இடங்களில் காட்டுத்தீ கட்டுக் கடங்காமல் தொடர்ந்தும் எரிந்து கொண்டிருக்கிறது. பல ஐரோப்பிய நாடுகளின் ஹெலிகொப்டர்கள், விமானங்கள், தீயணைப்புக் கருவிகள், வாகனங்கள், தீயணைப்பாளர்கள் சுவீடனுக்கு உதவிசெய்து கொண்டிருக்கிறார்கள்.



இன்னொரு பக்கத்தில் கிரீஸ் தலைநகரான ஏதென்ஸுக்கு வெளியே பெரும் காட்டுத்தீ உருவாகி சுமார் 80 பேர்களின் உயிர்களைக் குடித்துச் சுமார் 200 பேர்களை மோசமாகப் பாதித்திருக்கிறது. காட்டுத்தீக்களை உண்டாக ஒரு சில தீய சக்திகளும் காரணம் என்று குறிப்பிடப்பட்டாலும் ஐரோப்பாவின் தென்பகுதியையும் இக்கோடைகாலத்தில் மிகவும் காட்டமான வெம்மை அலைகள் [99 °F– 36°C] தாக்கிக்கொண்டிருக்கின்றன.

இந்த நாடுகளைத் தவிர ஐரோப்பாவில் லத்வியா, பிரான்ஸ், இத்தாலி மற்றும் சைபீரியாவிலும் காட்டுத்தீக்கள் உருவாகிச் சேதங்கள் விளைவித்துக்கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் முக்கியமாக கலிபோர்ணியா மாநிலம் காட்டுத்தீக்களால் தாக்கப்பட்டிருக்கிறது. இச்சமயம் இந்த மாநிலத்தில் சுமார் 16 காட்டுத்தீக்கள் கட்டுக்குள் அடங்காமல் எரிந்துகொண்டிருக்கிறது. இவைகளில் மிகப்பெரிய காட்டுத்தீ [ Carr Fire ] சுமார் 110,154 ஏக்கர் பிராந்தியத்தைத் தனது பிடிக்குள் வைத்திருக்கிறது. யாழ் குடாநாட்டின் அளவு 253, 300 ஏக்கர்கள் என்றால் இத்தீயின் அளவு எத்தனை என்று ஒப்பிட்டுக் கொள்ளலாம். தொடர்ந்தும் பரவிக்கொண்டிருக்கும் அந்தக் காட்டுத் தீ தன் பிடியிலிருக்கும் பிராந்தியத்தில் ஒரு வித்தியாசமான காலநிலையையே உருவாக்கிவிட்டிருப்பதாக காலநிலை வல்லுனர்கள் குறிப்பிடுகிறார்கள்.

வட ஐரோப்பிய நாடுகளின் காட்டுத்தீக்கள் பரவியுள்ள பிராந்தியங்களை நோக்கி குளிர்ந்த காற்றும், மழையும் வரலாம் என்று எதிர்பார்க்கப்படும்போது கலிபோர்ணியா பிரதேசம் தொடர்ந்த வாரங்களிலும் வறண்டே இருக்கும் என்று கணிப்பீடு செய்யப்படுகிறது.

---

வெம்மையால் பாதிக்கப்பட்ட இன்னொரு முக்கிய நாடு ஜப்பான். 106 °F– 41°C வெப்பநிலையால் டோக்கியோ உட்பட ஜப்பானின் சில பாகங்கள் தாக்கப்பட்டபோது உயிரிழந்தவர்கள் சுமார் 25 பேர்கள் என்று குறிப்பிடப்படுகிறது. இதுவரை காணாத காலலையால் தாக்கப்பட்ட ஜப்பான் 2020 ஆண்டு நடத்தவிருக்கும் கோடை ஒலிம்பிக்ஸ் போட்டிகளின் திகதிகளை மாற்றலாமா என்று சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறது.

'ஒவ்வொரு காலநிலையையும் நேரடியாக மனிதர்களின் குறிப்பிட்ட நடவடிக்கைகளைக் காரணியாகச் சுட்டிக்காட்ட முடியாது' என்று குறிப்பிடும், காலநிலை விற்பன்னர்கள் தொடர்ந்து வரும் வருடங்களில் உலகம் இதேபோன்ற காலநிலை மாற்றங்கள் உலகின் வெவ்வேறு பகுதிகளைத் தாக்கலாம் என்று கூறுகிறார்கள். அவர்கள் தமது கூற்றுக்கு ஆதரவாக கடந்த பத்து வருடங்களில் உலகின் வெவ்வேறு பகுதிகளில் வருடத்தின் வெவ்வேறு காலத்தில் தாக்கிய வித்தியாசமான காலநிலை அமைப்புக்களைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

நாகரீக மனித வாழ்வின் எரிபொருள், சக்திகளால் உண்டாக்கப்பட்ட பக்க விளைவுகள் உலகின் சராசரி வெப்ப நிலையை நீண்ட காலமாகவே உயர்த்தி வருகின்றன. அந்த மெம்மை உலகின் மலையுச்சிகளில் இருக்கும் உறைபனிப் படலங்களையும், ஆர்ட்டிக் பிரதேச உறைபனியையும் கரைத்து வருகின்றன. அதன் விளைவுதான் உலகின் பல்வேறு பிராந்தியங்களிலும் உண்டாகிப் பாதித்துவரும் காலநிலை மாற்றங்கள் என்று கருதப்படுகிறது.

---

சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டிகள் நடந்து முடிந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஐரோப்பியக் கால்பந்தாட்டக் களத்தின் விடாக் கண்டன், கொடாக்கண்டன்களான மெஸ்ஸியை ரொனால்டோ வெற்றி பெற்றிருக்கிறார். வழக்கம்போலக் கால்பந்தாட்டக் களத்திலல்ல நீதி மன்றத்தில் நடந்திருக்கிறது இப்போட்டி. இது வருமான வரி ஏய்ப்பில் யார் முதலாவது என்பது பற்றியதாகும்.

தனது உண்மையான வருமானத்தைக் காட்டாமல் மறைத்ததற்காக 2016 இல் மெஸ்ஸி 2 மில்லியன் எவ்ரோக்கள் தண்டமும் 21 மாதச் சிறைத் தண்டனையும் பெற்றார்.

மெஸ்ஸியை அவ்விடயத்தில் வெற்றியெடுக்கும் ரொனால்டோவுக்கு ஸ்பானிய நீதிமன்றம் 5.7 மில்லியன் எவ்ரோக்கள் வரி ஏய்ப்புக்காக, அத்தொகை தவிர 3.2 மில்லியன் எவ்ரோக்கள் தண்டமும், 2 வருடச் சிறைத்தண்டனையும் விதித்திருக்கிறது. முதல் குற்றம் என்பதால் சிறைத் தண்டனையிலிருந்து நாளுக்கு 250 எவ்ரோக்கள் கொடுத்து அதைத் தவிர்க்கப்போகிறார் ரொனால்டோ. வரி + தண்டம் + சிறை தவிர்ப்பு + வட்டி ஆகியவைள சேர்த்து மொத்தமாகப் 19 மில்லியன் எவ்ரோக்கள் கட்டி மெஸ்ஸியை வென்றிருக்கும் ரொனால்டோவுக்குப் பாராட்டுக்கள்!



---




சமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கும் இந்தியக்குடிமக்கள் தேசிய ஆவணம் (NRC) சுமார் 4 மில்லியன் மக்களை இந்தியக் குடிமக்கள் பட்டியலிலிருந்து நீக்கியதன் மூலம் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கிறது. வெளியிடப்பட்டிருக்கும் ஆவணத்தில் பிழைகள் இருக்கும் விடப்பட்டவர்கள் தங்களது ஆவணங்களைக் காட்டி இந்தியக் குடியுரிமை கோரலாம். முடிவான குடிமக்கள் தேசிய ஆவணம் இவ்வருட இறுதியில் வெளியிடப்படும் என்கிறது இந்திய அரசு.

குறிப்பிட்ட ஆவணத்தில் இந்தியக் குடியுரிமையை இழந்தவர்கள் இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாம் மாநிலத்தில் இருக்கிறார்கள். இதன் எல்லைகளாக ஒரு பக்கம் பங்களாதேஷும், இன்னொரு பக்கம் மியான்மாரும் இருக்கின்றன.

அஸாம் மாநிலத்தில் வாழ்பவர்களை, இந்தியக் குடிமக்கள், [அடையாள ஆவணகளின்றி] கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் என்று 1951 இல் தயாரிக்கப்பட்ட இந்திய தேசிய குடிமக்கள் ஆவணம் பிரித்துக் குறிப்பிட்டு வந்தது. கிழக்குப் பாகிஸ்தான் 1971 இல் பங்களாதேஷ் என்ற தனிநாடாகியது. 1985 இல் இந்தியா செய்துகொண்ட ஒப்பந்தப்படி 1971 பங்குனி 24ம் திகதிக்குள் ஏதாவது இந்திய அதிகார ஆவணங்களில் இந்தியர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தவர்கள் தவிர்ந்த அனைவரையும் இந்தியக் குடிகள் இல்லை என்று கணக்கிடப்படுகிறது.

இப்போது இந்தியக்குடிகள் அல்லாதவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பவர்களை நாட்டை விட்டு வெளியேற்றப்போவதில்லை என்று இந்திய அரசு அறிவித்திருக்கிறது. ஆனாலும், தற்போதைய பா.ஜ.க அரசு பதவிக்கு வந்தவுடன் "அடையாளம் தெரியாத வெளிநாட்டவர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவோம்," என்ற கோட்பாட்டை நாட்டின் பாதுகாப்புத் திட்டங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டுச் செயற்பட்டு வருவதை எவராலும் ' கவனிக்க முடியும். மாதந்தோறும் சுமார் 1,000 பேர்கள். இந்தியக் குடிமக்கள் அல்ல என்று அறிவிக்கப்பட்டு வருகிறார்கள்.

அஸாம் மாநிலத்தைப் பொறுத்தவரை பெரும்பாலும் பெங்காலிகளான சுமார் 4 மில்லியன் பேர்களை அன்னியர்களாக்குவதன் மூலம் மியான்மார் தனது ரோஹின்யா இனத்தவரை நாடில்லாதவர்கள் ஆக்கியது போன்றதே இந்தியாவின் நடவடிக்கை என்று சர்வதேச ரீதியில் விமர்சிக்கப்படுகிறது.

அத்துடன் குறிப்பிட்ட 4 மில்லியன் பேர்களில் பெரும்பாலானோர் முஸ்லீம்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. அன்னியர்கள் என்று அதிகார பூர்வமாகக் குறிப்பிடப்படுகிறவர்கள் வாக்குரிமை உட்பட, தமது குடிமக்கள் உரிமைகளை இழக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீஷ்மர்

யுத்தத்தின் இறுதியில் என்ன நடந்தது என்பது பற்றிய நிறைய கட்டுக்கதைகளும், கற்பன்ன கதைகளும் உலாவிக் கொண்டிருக்கின்றன. இந்த கதைகளில் சில ஆர்வக் கோளாறுள்ளவர்களால் அப்படியிருக்குமோ, இப்படியிருக்குமோ என நினைத்து, அவர்களாக ஒரு கதையை உருவாக்கியதாக இருக்கும். இதில் வேடிக்கை என்னவென்றால், அவர்களும் அந்த கதைகளை நிஜமென நம்பிக் கொண்டிருப்பார்கள்.

இன்னொரு வகையுண்டு. வேண்டுமென்றே சில கதைகளை அவர்களே உருவாக்கி பரப்பி விடுவார்கள். அதற்கு பின்னால் பெரிய அரசியல் காரணமெல்லாம் உண்டு. “பெரிய கை“களே அதை செய்வார்கள்.

இப்பொழுது எதற்கிந்த ஆலாபனையென நீங்கள் நினைக்கலாம். விசயமிருக்கிறது. அரசியல் நோக்கத்துடன் இப்படி கட்டுக்கதைகளை உருவாக்கும் தரப்பினர், உண்மைகளை அப்படியே பேசும் தீபத்தின் இந்த தொடரை விரும்பவில்லை ரசிக்கவில்லை. அதை வாசகர்களிடமும் இப்பொழுதே பதிவுசெய்து வைத்து விடுகிறோம். இந்த தொடரை நிறுத்த வைப்பதற்கு பல்வேறு முயற்சிகள், நடவடிக்கைகள், அழுத்தங்கள் நடக்கின்றன. இந்த நெருக்கடிகளாலேயே கடந்த சில வாரங்களில் பத்திரிகை குறித்த திகதியில் வெளியாவதில் சில இடர்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

இந்த தொடர் தொடர்வதா இல்லையா என்பது வாசகர்களின்




கைகளிலேயே தங்கியுள்ளது. இதில் வித்தியாசமான ஒரு பார்வையை தீபம் வைத்திருக்கிறது. ஒரு பத்திரிகையின் அச்சிடும் பிரதிகளும் அதன் வலிமையை தீர்மானிக்கும் சக்திகளில் பிரதானமானது. தன் மீதான இப்படியான புற அழுத்தங்களை எதிர்த்து, இந்த தொடரை தொடரவும், இதைப்போல இன்னும் பல தொடர்களை வெளியிடவும் வாசகர்களின் உதவியை நாடி நிற்கிறது. வாசகர்கள் தங்கள் நண்பர்களிற்கும் தீபத்தை அறிமுகப்படுத்தி வைப்பதன் மூலம், தன் மீதான அழுத்தங்களை தாங்கவும், எதிர்க்கவும் தீபத்திற்கு சக்தி கொடுக்க முடியும். அதை செய்வீர்கள் என்று நம்புகிறோம்.



தாக்குதலுக்கு தயாராகும் இராணுவம்



பிரபாகரன் - வேலவன்

# திடீரென பற்றியெறிந்த பிரபாகரனின் வாகனம்!

புதுக்குடியிருப்பை இராணுவம் சூழ ஆரம்பித்தபோது பிரபாகரன் தெளிவான முடிவொன்றை எடுத்திருந்தார். புதுக்குடியிருப்பை விட்டு இனி ஒரு அடியும் பின்நகர்வதில்லை. தான் பின்னகர்ந்து கொண்டிருப்பதால்தானே, தளபதிகளும் முன்னரணை உடைக்க விடுகிறார்கள், புதுக்குடியிருப்பை விட்டு இனிமேல் ஒரு அடியும் பின்னகர்வதில்லை, இங்கேயே இருந்து கொள்ள போகிறேன், தேவையானால் முன்னரணில் நின்று சண்டைபிடிக்கவும் தயார் என பிரபாகரன் முடிவெடுத்திருந்தார் என்பதை கடந்த பாகங்களில் குறிப்பிட்டிருந்தோம்.

சொன்னது மட்டுமல்ல, அதை செயலிலும் செய்ய தொடங்கினார் பிரபாகரன். அப்பொழுது பிரபாகரன் தங்கியிருந்தது புதுக்குடியிருப்பு இரைணைப்பாலை வீதியில், அப்போதைய பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு ஒரு கிலோ மீற்றர் அப்பால். புதுக்குடியிருப்பு முன்னரணிற்கு பிரபாகரன் செல்ல தொடங்கினார். அவர் முன்னரணிற்கு செல்வதில் பாதுகாப்பு பிரச்சனைகள் இருந்ததால், அவரது பாதுகாப்பு அணியினர் சில ஏற்பாடுகளை செய்தே, முன்னரணிற்கு செல்ல அனுமதித்தனர்.

இது சிலரிற்கு ஆச்சரியமாக இருக்கலாம். பிரபாகரன் முன்னரணிற்கு செல்வதை சில பாதுகாப்பு ஏற்பாடுகளின் பின்னரேயே பாதுகாப்பு அணி அனுமதித்தது என்றால், அந்த அமைப்பின் தலைவர் பிரபாகரன் இல்லையா என்றும் சிலர் யோசிக்க கூடும்.

பொதுவாகவே, நாட்டு தலைவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் பாதுகாப்பு விசயத்தில் புலனாய்வுத்துறை, தலைவர்களின் பாதுகாப்பு அணியினரே செல்வாக்கு மிக்கவை. தலைவர்களின் பாதுகாப்பு நடைமுறைகள், பிரயாணங்கள், தங்குமிடங்கள் என்பவற்றையெல்லாம் அவர்கள்தான் தீர்மானிப்பார்கள். உதாரணமாக, மஹிந்த ராஜபக்ச சர்வவல்லமையுள்ள ஜனாதிபதியாக இருந்தபோதும், அவரது பிரயாணங்கள், தங்குமிடங்களையெல்லாம் புலனாய்வுத்துறையும், அவரது பாதுகாப்பு பிரிவுமே தீர்மானிக்கும். எல்லா நாட்டு தலைவர்களிற்கும் இது பொருந்தும்.

விடுதலைப்புலிகள் ஒரு ஆயுதப் இயக்கமாக இருந்தபோதும், பல விசயங்களில் மரபு இராணுவத்தின் அம்சங்களை பெற்றுக்கொண்டிருந்தார்கள். பிரபாகரனின் பாதுகாப்பு விவகாரத்திலும் வழக்கமான பிறநாட்டு தலைவர்கள் விசயத்தில் எப்படியான நடைமுறைகள் இருந்ததோ, அப்படியே கையாண்டார்கள். வன்னியில் பிரபாகரன் தங்கியிருந்த இடம் எதையும் பிரபாகரன் தீர்மானிக்கவில்லை. அந்த முகாம்கள் எப்படியிருக்க வேண்டுமென்பதையும் அவர் தீர்மானிக்கவில்லை. அவரது பாதுகாப்பு விவகாரங்களை கையாண்டவர்கள் உருவாக்கிய பாதுகாப்பு நடைமுறைக்குள் அவர் இருந்தார்.

இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தையும் சொல்லலாம்.

பின்னாளில் புலிகளின் புகழ்பெற்ற தளபதியாக இருந்தவர் வேலவன். யாழ்ப்பாணம் கொக்குவிலை சேர்ந்தவர். 1990 இற்கு பின்னர்தான் புலிகள் அமைப்பில் இணைந்தவர். என்றாலும், கிடுகிடுவென அமைப்பிற்குள் வளர்ந்து விட்டார். வேலவனை பற்றி ஏற்கனவே இந்த தொடரில் குறிப்பிட்டிருக்கிறோம். பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர் அணிக்கு பொறுப்பாக செயற்படுபவர்களில் திறமைசாலிகளை அடையாளம் கண்டால், அவர்களின் திறமைக்கு ஏற்ற முக்கிய பொறுப்புக்களை பிரபாகரன் வழங்குவார். இதற்கு இரண்டு உதாரணம். ஒன்று இளவயதில் மணலாறு தளபதியான குமரன். மற்றையவர் வேலவன். இன்னும் பல உதாரணங்கள் இருந்தாலும், பிரபாகரனின் தெரிவு கச்சிதமாக இருக்கும் என்பதை உணர்த்தி, அதிகமாக ஜொலித்தவர்கள் இவர்கள் இருவரும்தான்.

ரணில் பிரபா சமாதான உடன்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கை காலத்தில் ஒரு சம்பவம் நடந்தது. கிளிநொச்சி நகர்ப்பகுதிக்கு சமீபமாக ஒருநாள் பிரபாகரன் வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தார். திடீரென வாகனம் பழுதடைந்து, நடுவீதியில் நின்று விட்டது. பிரபாகரனின் வாகனம் நடுவழியில் பழுதடைந்து நிற்பது அரிதான சம்பவம். பிரபாகரனின் பாதுகாப்பு நடைமுறையை நாடுகளின் தலைவர்களின் பாதுகாப்பு நடைமுறைக்கு ஒப்பாக புலிகள் பேணும்போது, வாகன பராமரிப்பில் கவனம் செலுத்தமாட்டார்களா என நீங்கள் நினைக்கலாம். உண்மைதான். வாகன பராமரிப்பில் மிக கவனமாக இருப்பார்கள். பிரபாகரனின் வாகனத்தை வெளியிடங்களில் விட்டு திருத்த முடியாது என்பதால், அவரது பாதுகாப்பு படையணிக்காகவே தனியொரு வாகன திருத்துமிடம் உருவாக்கப்பட்டிருந்தது.

விசுவமடு காட்டுக்குள் அமைக்கப்பட்டிருந்த அந்த திருத்துமிடத்தில், பிரபாகரனின் பாதுகாப்பு படையணியின் வாகனங்கள் மட்டுமே திருத்தப்பட்டன. அந்த கராஜிற்குள்ளும் தனியான செக்சன் ஒன்று இருந்தது. அங்குதான் பிரபாகரனின் வாகனங்கள்


தளபதி வேலவன்



திருத்தப்பட்டன. அடிக்கடி அங்கு பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டு, இப்படியான நடுவழி குழப்பங்கள் இல்லாமல்தான் பேணப்பட்டன. என்றாலும், சில விதிவிலக்குகள் நடக்க வாய்ப்புள்ளனதானே. சொல்லிக் கொள்ளும்படியான இப்படியான இரண்டு விதிவிலக்கு சம்பவங்கள் நடந்தன. ஆனந்தபுரம் ஙிளிஙீ சம்பவத்திற்கும், இந்த சம்பவங்களிற்கும் நேரடி தொடர்பு கிடையாது. என்றாலும், கிளைச்சம்பவமாக சுவாரஸ்யமான ஒன்றாக அதையும் சொல்லி விடுகிறோம்.

விதிவிலக்காக பிரபாகரனின் வாகனம் நடுவழியில் பழுதடைந்து நின்ற இரண்டு சம்பவங்கள் வன்னியில் நடந்தன. ஒன்று கிளிநொச்சியில் நடந்தது. அப்பொழுது வேலவன் பாதுகாப்பு பொறுப்பாளராக இருந்தார். வாகனம் பழுதடைந்து நின்றதும், சாரதி அதை கவனித்துக் கொண்டிருந்தார். பாதுகாப்பு பொறுப்பாளர் வேலவன் கீழே இறங்கி, அடுத்த வாகனத்திற்கு அறிவித்து விட்டு நின்றார். இந்த சமயத்தில், வாகனத்தை விட்டு கீழே இறங்கலாமென பிரபாகரன் நினைத்தார். இப்படியான சமயங்களில்தான் மக்களை சந்திக்கலாமென நினைத்திருக்கலாம்.

அப்பொழுது பிரபாகரன் பகிரங்கமாக மக்கள் முன் தோன்றுவதில்லை. பிரபாகரன் வாகன கதவை திறந்து கொண்டு இறங்க, முயல, வாகனத்தை விட்டு கீழே இறங்க வேண்டாமென அவரிடம் கேட்டுக்கொண்டார். ஆனால், அதை கேளாமல் பிரபாகரன் வாகனத்தை விட்டு கீழே இறங்க முயற்சித்தார். யாருமே எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது.

திடீரென, வாகன கதவுடன் தனது உடலை நெருக்கி, வாகன கதவை திறக்க முடியாமபடி வேலவன் தடுத்தார். "இங்கு நீங்கள் பகிரங்கமாக இறங்கி நிற்பது ஆபத்து. நான் தடுப்பதையும் மீறி நீங்கள் இறங்கப் போகிறீர்கள் என்றால், இப்பொழுதே எனது பிஸ்டலை இதில் கழற்றிவைத்து விட்டு நான் இந்த பொறுப்பைவிட்டு விலகிச் சென்று விடுவேன்" என தீர்க்கமாக சொன்னார். பிரபாகரன் எதுவும் சொல்லவில்லை. வாகனத்திலேயே இருந்து விட்டார்.

இந்தசம்பவம்பலரிற்கு ஆச்சரியமாக, நம்ப சிரமமாக இருக்கலாம். ஆனால், இப்படியாக நடைமுறைதான் பிரபாகரனின் பாதுகாப்பு ஏற்பாட்டில் இருந்தது.

விதிவிலக்காக பிரபாகரனின் வாகனம் பழுதடைந்த அடுத்த சம்பவம் புதுக்குடியிருப்பில் நடந்தது. புதுக்குடியிருப்பு இரணைப்பாலை வீதியில் பிரபாகரன் பயணித்துக் கொண்டிருந்தபோது, திடீரென அவரது வாகனத்தின் முன்பகுதியில் புகை வரத் தொடங்கியது. ஏதோ ஆபத்தென அவரசமாக வாகனத்தை நிறுத்தி, பிரபாகரனை பாதுகாப்பாக சற்று தள்ளி கொண்டு வந்து விட்டனர். அப்போது வீதியில் பயணித்தவர்கள், அருகிலுள்ள வீடுகளில் இருந்தவர்கள் பிரபாகரனை அப்போது நேரில் பார்த்தார்கள்.

மெதுவாக புகைய தொடங்கியது பின்னர் சடுதியாக அதிகரித்து, பஜிரோ வாகனத்தின் முன்பகுதி பெரிதாக தீப்பற்றி எரிய தொடங்கியது. பிரபாகரனின் முகாமிற்கு அருகிலேயே சம்பவம் நடந்ததால், இன்னொரு வாகனத்தில் அவரை ஏற்றிச் சென்றார்கள். அந்த வாகனத்தின் தீ அணைக்கப்பட்டது. ஏதேனும் சதி முயற்சியால் தீப்பற்றியிருக்கலாமா என்ற கோணத்திலும் புலனாய்வு விசாரணை நடத்தப்பட்டது. ஆனால், மின் ஒழுக்கு காரணமாகவே தீப்பற்றியது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

பிரபாகரனின் பாதுகாப்பு நடைமுறைகளை பற்றி குறிப்பிட ஆரம்பித்து, பல கிளைச்சம்பவங்களை பேசி விட்டோம். இனி மீண்டும் புதுக்குடியிருப்பிற்கே செல்வோம்.

களமுனைகளிற்கு பிரபாகரன் நேரடியாக செல்ல தொடங்கிய இந்த கட்டம் மிக ஆபத்தானது. ஆனால் முன்னரை போல பாதுகாப்பு அணி பிரபாகரனை கட்டுப்படுத்த முடியாது. காரணம் புலிகள் மிக நெருக்கடியான நிலைமையில் இருந்தனர். ஏதாவது ஆச்சரியங்கள் செய்யாவிட்டால், அமைப்பே அழிந்துவிடும் ஆபத்தில் இருந்தது. தனது மெய்ப்பாதுகாவலர் அணியையே கணிசமாக குறைத்து, அவர்களையும் களமுனைக்கு அனுப்பியிருந்தார் பிரபாகரன்.

தலைக்கு இராணுவ ஹெல்மெட், உடலுக்கு இராணுவ ஜக்கெட் அணிவித்து, மோட்டார்சைக்கிளில் பிரபாகரனை ஏற்றிக்கொண்டு களமுனைகளிற்கு போராளிகள் சென்றனர். புதுக்குடியிருப்பில் களமுனை அமைந்தபோது, முக்கிய தளபதிகளை அழைத்து சில தடவைகள் பிரபாகரன் கலந்துரையாடினார். புதுக்குடியிருப்பை விட்டு, எந்த சந்தர்ப்பத்திலும் பின்வாங்குவதில்லை, எமக்கு இறுதி முடிவென்றால் அது புதுக்குடியிருப்பிலேயே நடக்கட்டுமென நேரடியாக தளபதிகளிடம் கூறியிருந்தார்.

புதுக்குடியிருப்பின் முன்னரணிற்கு நேரில் சென்று போராளிகளையும் உற்சாகப்படுத்தினார். அதனால்தான் புதுக்குடியிருப்பில் வாழ்வா, சாவா போர் நடந்தது. இராணுவத்தால் புலிகளின் முன்னரணை உடைக்க முடியாமலிருந்தது.

புதுக்குடியிருப்பில் 53, 68 டிவிசன் படையணிகள் முன்னகர முடியாமல் திணறியபோது, தேவிபுரத்தின் பின்பகுதியால் 58வது டிவிசன் படையினர் இரணைப்பாலை சந்தியை நோக்கி நகர்ந்தனர். புதுக்குடியிருப்பை பின்பகுதியால் வளைத்து, புலிகளை பின்வாங்க வைக்கலாமென இராணுவம் திட்டமிட்டது. ஆனால் புலிகள் பின்வாங்கவில்லை. இராணுவம் பின்பகுதியால் சுற்றிவளைத்தாலும், புலிகள் பின்வாங்குவதாக திட்டமிடவில்லை.

2009 மார்ச் ஆரம்பம். இரணைப்பாலை சந்தியை நோக்கி 58வது டிவிசன் படையினர் முன்னேறிக் கொண்டிருந்தனர். அந்த படையினர் இரணைப்பாலை சந்தியை அடைந்தால், புதுக்குடியிருப்பில் நிலைகொண்டிருந்த அணிகளிற்கும், நீரேரிக்கு அப்பால் மாத்தளன் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான பகுதியில் நிலைகொண்டுள்ள அணிகளிற்குமிடையில் தொடர்பு அறுந்து விடும்.

தொடர்பு அறுந்தாலும் பரவாயில்லையென பிரபாகரன் நினைத்தார். அதை சமாளிக்க மாற்று ஏற்பாடு ஒன்றை தயாரித்தார்.

அந்த மாற்று ஏற்பாடு விடுதலைப் புலிகளை இரண்டாக பிரிப்பது!

விடுதலைப்புலிகளின் எல்லா தளபதிகளையும் அழைத்து, தனது திட்டத்தை புரிய வைத்தார். புதுக்குடியிருப்பை விட்டு பின்னால் செல்வதில்லையென்ற தனது முடிவில் அவர் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. அதனால் புதுக்குடியிருப்பிலேயே அவர் தங்கியிருப்பார். தான் புதுக்குடியிருப்பில் தங்கியிருந்து போராளிகளுடன் போராளியாக களத்தில் நிற்கப் போவதாக கூறினார். தளபதிகள் அதை ஆட்சேபித்தனர். ஆனந்தபுரத்தில் உள்ள அவரது முகாமிலேயே அவரை தங்கியிருக்கும்படியும், இராணுவத்தை இனியும் முன்னகர விடாமல் தாங்கள் பார்த்துக் கொள்வதாகவும் கூறினார்கள்.

எப்படியோ புதுக்குடியிருப்பில் பிரபாகரன் நிலைகொள்வதாக முடிவாகியது. அவருடன் பானு, தீபன், வேலவன், கடாபி, விதுர்சா, துர்க்கா உள்ளிட்ட மூத்த தளபதிகள் நிலை கொண்டிருப்பார்கள். கிட்டத்தட்ட 500, 600 போராளிகளும் நிலைகொண்டிருப்பார்கள்.


அவர்களிற்கு தேவையான உணவு, சமையல் பாத்திரங்கள், சமையல் அணிகள் என்பனவும் ஆனந்தபுரத்திற்கு கொண்டு வரப்பட்டன. புலிகளின் மற்ற அணிகளும், மக்களும் நிலைகொண்டிருந்த பகுதிக்கான தரைவழிப்பாதை தொடர்பை இராணுவம் அறுத்தாலும், புதுக்குடியிருப்பில் தங்கியிருக்கும் அணிகள், தொடர்ந்து யுத்தம் புரிய தேவையான ஏற்பாடுகள் ஆனந்தபுரத்தில் செய்யப்பட்டன. ஆனந்தபுரத்தில் ஏற்கனவே நிதித்துறையின் பெரிய சமையல்கூடமொன்றிருந்தது. அங்கேயே உணவை தயாரித்துக் கொள்ளலாமென்ற ஏற்பாடு செய்யப்பட்டது. உணவு சமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டால், அதையும் சமாளிக்க உலருணவுகளும் களஞ்சியப்படுத்தப்பட்டன.

புதுக்குடியிருப்பில் நிலைகொள்ளும் அணிகளை பிரபாகரன் வழிநடத்துவார். அவரின் கீழ் செயற்பட போகும் தளபதிகளும் யார் யார் என்பது முடிவாகியிருந்தது. எந்தெந்த அணிகள் என்பதும் தீர்மானிக்கப்பட்டு விட்டது. எல்லாம் சரி... புலிகளின் மாத்தளன் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான பகுதிகளில் தங்கியிருந்த புலிகளின் மற்றைய அணிக்கு யார் தலைமைதாங்குவது? அங்கு வேறு எந்தெந்த தளபதிகள் நிலைகொள்வது என முடிவெடுத்தார்கள் என்பதை அடுத்த வாரம் குறிப்பிடுகிறோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அழிவடைந்து வரும் தமிழனின் தொல்லியல் சின்னங்கள்

வன்னிமது

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் ஒலுமடு கிராமத்தில் இருந்து சுமார் 03 கிலோ மீற்றர் தூரத்தில் வெடுக்குனாரி மரங்களினால் சூழப்பட்ட அடர்ந்த காட்டின் நடுவில் மலைப்பிரதேசம் ஒன்று காணப்படுகின்றது. மிகவும் இரம்மியமாகவும் அழகாகவும் காட்சியளிக்கின்றது. இவ்விடத்தையும் பௌத்த பிக்குகள்; ஆக்கிரமித்து, புத்தபெருமானின் சிலை வைப்பதற்கு முயற்சித்தபோதும் இப்பகுதி மக்களின் விடா முயற்சியால் இவ் மலைப் பிரதேசம் பறிபோகாமல் தடுக்கப் பட்டுள்ளது.

இலங்கையிலே தமிழரின் உரிமைக் காக போராடிய இயக்கங்களில் ஒன்றான தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ரெலோவின் முகாமாக காணப்பட்ட இம்மலை பின்னாளில் ஆளரவமற்ற இடமாக மாறியது. தமிழரின் தொன்மைக்கான சான்று களுடன் அந்த பகுதி இருப்பதை கேள்விப்பட்டு, ஒலுமடு பிரதேசம் நோக்கி பயணமானோம். யுத்தத்தின் கோரத்தாண்டவத்தில் இருந்து மெல்ல மெல்ல மீள் எழும்பி வரும் இக்கிராமத்தில் தமிழர்களின் தொன்மையும் வரலாறும் மறைந்து கிடக்கிறது.

அடர்ந்த யானைக்கட்டினுள் பல நூறு வருடங்கள் பழமையான வெடுக் குநாரி மரங்களினால் சூழப்பட்ட தால் வெடுக்குநாரிமலை எனும் பெயருடன் தமிழனின் பூர்வீககுடி களின் வரலாற்றை பறைசாற்றும் முகமாக கம்பீரமாக காட்சியளிக் கின்றது. அம்மலையின் அருகே சென்றபோது பழடைந்த நிலையில் காணப்படும் ஒரு குகையை காண முடிந்தது. இக்குகையிலும் இம்மலைப் பிரதேசத்திலும் பண்டாரவன்னியன் குறிப்பிட்ட காலம் தங்கியிருந்ததாக இப்பிரதேச மக்களிடையே ஒரு செவி வழி கதையுண்டு.

இது தவிர்ந்து இம்மலைப்பிர தேசத்தினை ஆராய்ந்த போது பல தொல்லியல் தடயங்களை காண முடிந்தது. இதனை வவுனியா மாவட்டத்தில் பல தொல்லியல் தடங்களை வெளிக்கொணர்ந்த அருணாசெல்லத்துரை அவர்களின் துணையுடன் ஆராய்ந்த போது இம்மலைப்பிரதேசம் இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளிற்கு முற்பட்டது என்று எம்மால் அறிய முடிந்தது. குறிப்பாக ஆதி தமிழனான நாகர்கள் வாழ்ந்தமைக்கான பல சான்றுகள் அடையாளப்படுத்த முடிந்தது. பழமையான பிராமிய எழுத்துக்கள், கற்பாறையினுள் குடையப்பட்ட நீர் தடாகம், மூலிகைகள் அரைப்பதற்கு பயன்படும் இடம், நாகர்களின் பிரதான வழிபாடாக காணப்பட்ட நாகத்தின் வடிவில் காணப்படும் கற்பாறை அமைப்பு, பண்டைய செங்கல் படிவங்கள் என பலவற்றை சிதைவடைந்த நிலையில் காணமுடிந்தது.

ஒலுமடு பிரதேச மக்கள் யுத்த நிறைவிற்கு பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது இவ் தமிழரின் தொல்லியல் சின்னங்கள் பலவுள்ள இம்மலையினை ஆக்கிரமிக்க பெரும் பான்மையினத்தினர் போட்ட முற்சியை தடுக்கும் நோக்கில் பல இந்து தெய்வங்களை நிறுவி வழிபாட்டில் ஈடுபட ஆரம்பித்தனர்.

நிலத்தில் இருந்து சுமார் 300 அடி உயரத்தில் அமைந்துள்ள மலைப் பகுதியில் ஆதி சிவன் பிரதிஸ்டை செய்யப்பட்டதோடு பாம்பின் தலைப்பகுதி போன்ற தோற்றம் உள்ள மலைப்பகுதி. ஒன்றின் கீழ் நாக சிலையையும் பிள்ளையார், முருகன், வைரவர், ஐயனார் போன்ற தெய்வங்களை பிரதிஸ்டை செய்து விசேட தினங்களில் வழிபட்டு வருகின்றனர். எனினும் இப்புராதன இடத்திற்கு செல்வதற்கு சீரான வீதியின்மை, நீர் வசதியின்மை மற்றும் மலைகளில் ஏறுவதற்கான படிக்கட்டுக்கள் இன்மை போன்ற காரணங்களினால் மிகுந்த சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றார்கள்.

இதேவேளை மலைப்பகுதியில் காணப்படுகின்ற தமிழ் பிராமி எழுத்துக்களும் குகை பகுதியும் பாது காக்கப்படாமையால் அழிவடைந்து செல்லும் நிலைக்கு செல்வதாக இவ்விடத்தை தற்போது பரிபாலித்து வரும் மக்கள் தெரிவிக்கின்றனர். வவுனியா வடக்கின் எல்லையோரத்தை அண்டிய பிரதேசமாக இப்பிர தேசம் காணப்படுவதோடு வவுனியா வடக்கில் எல்லையோர கிராமங்க ளான தமிழரின் பூர்வீக கிராமங்கள் பெரும்பான்மையினரால் ஆக்கிரமிக் கப்பட்டு அங்குள்ள தமிழரின் தொல்லியல் அடையாளங்களை மாற்றி அப்பிரதேசத்தில் தாங்கள்தான் பெரும்பான்மையாக வாழ்ந்ததாக









மாற்றுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளை வடமாகாணசபையோ, வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களோ ஏன் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களோ கண்டுகொள்வதாக தெரியவில்லை.

இலங்கையின் பு+ர்வீககுடிகள் தமிழர் என்பதை மாற்றும் செயற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில், எமது வரலாறுகள் புதைந்து கிடக்கும் இது போன்ற இடங்களை அழிவில்இருந்து பாதுகாப்பதன் மூலமே எமது இருப்பை உறுதிப்படுத்தலாம். எமது வரலாற்றை சான்றுப்படுத்தலாம். அடுத்த தலைமுறையினரிடம் இவற்றை பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டியது எங்கள் எல்லோரதும் பொறுப்புமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக அதிசயங்களின் பட்டியலில் இப்போது ஏழு இருக்கின்றன. இதைத் தவிர வேறு எந்தெந்த இடங்கள் இறுதிச் சுற்றுக்கு வந்தன?










சி.பரிதமுதன்
துன்னாலை


உலக அதிசயங்களைப் பட்டிய லிடுவதற்கு, சுவிட்சர்லாந்து நாட்டை மையமாகவைத்து செயல் படும் 'நியூ 7 வொண்டர்ஸ் ஃபவுண்டேஷன்' (New 7 Wonders Foundation), இணையம் மற்றும் தொலைபேசி வழியே மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தியது. சுமார் 100 மில்லியன் பேர் வாக்கு அளித்ததாக அந்த நிறுவனம் தெரிவித்தது. 2007ம் ஆண்டு ஜூலை 7ம் நாள் போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் (லிஸ்போவா) நகரில் அறிவிக்கப்பட்டது. அதில், இந்தியாவின் தாஜ்மகால் உள்ளிட்ட ஏழு அதிசயங்கள் பட்டியலிடப்பட்டன. தவிர, இறுதி வரை போட்டியில் இருந்தவை என 13 இடங்களைப் பட்டியலிட்டது. அவை:

1. ஏதென்ஸின் அக்ரோபோலிஸ், (Acropolis of Athens) ஏதென்ஸ், கிரீஸ்.
2. அல்ஹாம்பிரா (Alhambra) ஸ்பெயின்.
3. அங்கோர்வாட் (Angkor Wat), கம்போடியா.
4. ஈஃபல் டவர் (Eiffel Tower) பாரிஸ், ஃபிரான்ஸ்.
5. ஹேகியா சோஃபியா (Hagia Sophia) இஸ்தான்புல், துருக்கி.
6. கியோமிசுடேரா (Kiyomizu-dera) ஜப்பான்.
7. மோவாய், (Moai) சிலி.
8. நியுஸ்வான்ஸ்டீன், (Neuschwanstein) ஜெர்மனி.
9. செஞ்சதுக்கம், (Red Square) ரஷ்யா.
10. சுதந்திர தேவிச் சிலை (Statue of Liberty) நியூயார்க், அமெரிக்கா.
11. ஸ்டோன்ஹெஞ்ச் (Stonehenge) அமெஸ்பரி, இங்கிலாந்து.
12. சிட்னி ஓப்பரா மாளிகை, (Sydney Opera House), அவுஸ்திரேலியா.
13. டிம்பக்டு (Timbuktu) மாலி.




























## வயலினைக் கண்டுபிடித்தவர் யார்?'

அனு பிரிந்தினி சுண்டிக்குழி

16ம் நூற்றாண்டில், இத்தாலியைச் சேர்ந்த ஆன்டோனியோ ஸ்ட்ராடிவேரியஸ் (Antonio Stradivarius) என்பவரால் உருவாக்கப்பட்டதுதான் வயலின். பழங்காலத்தில் இது, 'பிடில்' (fiddle) என்று அழைக்கப்பட்டது. இன்று, மின்சார வயலின் வரை பல வகைகள் கிடைக்கின்றன. கர்னாடக இசை, திரைப்பட இசை எனப் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வயலின் பயன்படுத்தப்படுகிறது.





## டைனோசர் இனம் எப்படி அழிந்தது?

எஸ்.சுவாஸ்திகா
கொக்குவில்

"டைனோசர்களின் அழிவுக்கு இதுதான் காரணம் என ஒரு விஷயத்தை மட்டும் கூற முடியாது. தற்போது, பூமியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊர்வன உயிரினங்கள் உள்ளன. சுமார் ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்புவாழ்ந்த ஊர்வன உயிரினத்தில் மிகப் பெரியது, டைனோசர். இவற்றில் பல வகைகள் உள்ளன. இவை அழிந்தது பற்றி பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. பாறைகளைவைத்து, மெக்ஸிகோ விஞ்ஞானிகள் சிலர் செய்த ஆய்வில், டைனோசர்களுக்குப் போதுமான உணவு கிடைக்காததும், பூமியின் வெப்ப நிலை மாற்றமும்தான் அவற்றின் . அழிவுக்குக் காரணமாக இருந்திருக்கலாம் எனக் கூறுகிறார்கள். ருமேனியா பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வில், டைனோசர் வாழ்ந்த பகுதியில் விண்கல் மோதியதுதான் அவற்றின் அழிவுக்குக் காரணம் என்கிறார்கள்."



## காற்றழுத்தத் தாழ்வுநிலை என்றால் என்ன... காற்றழுத்த உயர்வு நிலை என்றால் என்ன?"

கோ.அசோக்
உருத்திரபுரம்

பூமிப் பரப்பின் மேல், குறிப்பிட்ட உயரத்துக்கு காற்று நிறைந்து இருக்கிறது. காற்றுக்கு எடை மற்றும் அழுத்தம் உண்டு என்பதைப் பாடத்தில் படித்திருப்பீர்கள். நம்மைச் சுற்றியுள்ள காற்றின் அழுத்தம் சமமாக இருப்பதால்தான் நம்மால் நிற்கவும் நடக்கவும் முடிகிறது. ஆனால், காற்றின் அழுத்தம் ஒவ்வோர் இடத்திலும் மாறுபடும். ஓர் இடத்தில் காற்றின் அழுத்தம் குறைவாக இருந்தால், மற்ற பகுதியில் இருக்கும் காற்று, அந்தப் பகுதிக்குச் செல்லும். காற்றின் அழுத்தம் அதிகமாக இருக்கும். அதனால், அங்கிருக்கும் காற்று வேறு இடத்தை நோக்கி நகரும். அழுத்தம் குறைவாக இருந்தால், காற்றழுத்தத் தாழ்வுநிலை. அழுத்தம் அதிகமாக இருந்தால், காற்றழுத்த உயர்வுநிலை எனக் குறிப்பிடப்படுகிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Cosy

## HOTEL & RESTAURANT

North Indian, Punjabi, Chinese
&
Jaffna Foods



Free Home Delivery (Limited Area)
**Hotlines: 021 222 7100 / 021 222 5899**

Open Daily : 11.00 a.m. to 11.00 p.m.
272, Stanley Road, Jaffna.
15, Sirambiyadi Lane, Jaffna.

**We Accept all credit cards**

www.cosylanka.com
info@cosylanka.com
www.facebook.com/cosy.cosy.167

| COSY HOTEL & RESTAURANT | Non A/C | A/C |
|---|---|---|
| Single bed | Rs. 2,000 | Rs. 2,500 |
| Double bed | Rs. 3,000 | Rs. 3,500 |
| Triple bed | Rs. 4,000 | Rs. 4,500 |
| Four bed | Rs. 4,500 | Rs. 5,000 |

10% Service charge will be added

Restaurant / party Hall
Roof Top Beer Garden
Ample Parking
Generator Backup
Wi - Fi Facilities
24 Hrs Security Service

*Gift Vouchers* Rs. 1,000 Rs. 2,000 Rs. 500
**Available here**



# நோர்சி மீடியா நிறுவனத்தின்

- தீபம் தொலைக்காட்சி
- தீபம் வார இதழ்
- தீபம் இணையத்தளம் (www.deepamtv.asia)

ஆகிய ஊடகங்களில் உங்கள் பிரதேச செய்திகள், ஆலய நிகழ்வுகள், விளையாட்டு நிழ்வுகள் போன்றவை இடம்பெறவேண்டுமெனில்



தொடர்புகளுக்கு

**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு
நல்லூர், யாழ்ப்பாணம்.
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிடத்தொகுதி)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்பத்திரிகை நோர்தி[illegible] மீடியா (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி,
கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 05.08.2018 அன்று வெளியிடப்பட்டது.